திரிபுரி காங்கிரஸ்.



பயுகப் பிரசுராலயம் லிமிடெட்

ஜி.டி., மதராஸ்.


அன்பர்கள்

மரகதவல்லி - முருகப்பா

அவர்கட்கு

ரா. [illegible]

திரிபுரி காங்கிரஸ்



சா. கணேசன்

6 - அணா

மாடல் அச்சுக்கூடம்,
சென்னை.

முகவுரை

திரிபுரி யாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்ரீ. சா. கணேசன் அவர்கள் நமது பிரசுராலயத்திற்கு வந்தார்கள். திரிபுரி வைபவங்களைப் பற்றி விரிவாக அவர்கள் எடுத்துரைத்த பொழுது, அவற்றைத் தொகுத்து எழுதிக் கொடுத்தால் ஒரு புஸ்தகமாக வெளியிட்டு எல்லோருக்கும் பயன்படும்படி செய்யலாம் என்று வேண்டிக் கொண்டோம். அதன்படியே அவர்கள் உடனே எழுதி யுதவினர்கள். அவர்களுக்கு நமது நன்றி என்றும் உரித்தாகும்.


ராஷ்டிரபதி தேர்தலிலிருந்து ஆரம்பமான தேசீய நெருக்கடி, திரிபுரியிலும் தீராமல், சமீபத்தில் கல்கத்தாவில் கூடிய அ. இ. கா. கமிட்டியில் சுபாஷ் பாபு ராஜிநாமா செய்து, பாபு ராஜேந்திர பிரஸாத் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டது வரை நீடித்திருந்ததால், கல்கத்தா கமிட்டிக் கூட்டத்தின் நடவடிக்கைகள் வரை எல்லா விஷயங்களையும் தொகுத்து அநுபந்தமாகக் கொடுத்திருக்கிறோம்.

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்.

பொருளடக்கம்

திரிபுரி காங்கிரஸ்

i. யாத்திரா மார்க்கம்



"என்ன ஆகும் ஸார்?"

"இந்தச் சமயத்தில் தானா பாழும் பிளவுகளெல்லாம் வந்து சேர வேண்டும்?"

"ஏன் ஸார்! காந்தி கோஷ்டியினர் விலகியே இருந்து விடுவார்களோ?"

"ராஷ்டிரபதி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமாமே? அதையும் வரவேற்புக் கழகக் காரியதரிசிகளுள் ஒருவரான மிஸ்ராவே கொண்டுவந்திருக்கின்றாராமே!"

"காந்திமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றுகூட ஒரு தீர்மானம் வந்திருக்கின்றதாமே!"


"அதெல்லாம் கிடக்கட்டும்! சூரத் காங்கிரஸ் மாதிரி கலாட்டா ஏற்பட்டால், நமது தலை தப்பிக்க என்ன ஸார் செய்வது?"

இப்படிப்பட்ட ஏராளமான கேள்விகளும், இவற்றின் மீது ஒவ்வொருவரும் கூறும் அகல நீளங் காணமுடியாத அபிப்பிராயங்களுமே திரிபுரிக்குச் சென்ற பிரதிநிதிகள் ஏறி யிருந்த ரயில் வண்டிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

வாய் எதை எதை அரற்றிக்கொண்டிருந்தாலும் ஒவ்வொ ருவருடைய உள்ளமும், இன்னது, இவ்வளவு என்று வரை யறுக்க முடியாதபடி கலக்கமடைந்திருந்தது. இந்த நிலைமை யில் தேசபக்தர்கள் எல்லோரும் சிந்தை கலங்கி யிருக்கும் பொழுது, ஒரு நண்பர் பத்திரிகையை எடுத்து, "தீராத வினை யெல்லாம் தீரும் திரிபுராவில்" என்று வாசித்தார். அவர் படித்த அந்த வாக்கியம் அன்பர்கட்குச் சிறிது ஆறுதல் கொடுத்தது. அதை 'அசரீரி' வாக்கென்றுகூடச் சிலர் கருதினார்கள். அது 'அசரீரி'யோ அல்லது 'சரீரி'யோ, அதைப் பற்றி நமக்குள் சர்ச்சை வேண்டியதில்லை. ஆனால் அவர் மொழிந்தது உண்மையாயிற்று. தீராத வினையை யெல் லாம் திரிபுரி தீர்த்து வைத்தது.

இப்படியாகப் பல மணி நேரம் ரயில் வண்டியில் போக் கிய களைப்புத் தீர நாகபுரியில் உள்ள "லட்சுமிபவன்" ஹோட் டலை அடைந்தோம். ஸ்நான பானம், சாப்பாடு முதலிய வற்றை முடித்துக்கொண்டு சிறிது இளைப்பாறலாம் என்று மாடியில் சென்று உட்கார்ந்தோம்.

அங்கே ஒரு தென்னாட்டுத் தமிழர் இருந்தார். விருது நகர் நாடார் அவர். பெஜவாடாவிலிருந்து எல்லைப்புறம் வரை



சென்று வியாபாரத்திற்குச் சரக்கு வாங்குபவர் அவர். எங்கெங்கு எந்தப் பொருள் மலிவோ அதை வாங்கித் தென்னாட்டிற்கு அனுப்பவேண்டியது அவர் பொறுப்பாம். அவற்றை விற்றுமுதல் செய்வதைப் பற்றி அவருடைய முதலாளிகள் பார்த்துக்கொள்வார்களாம்.

அவருக்கும் எங்களுக்கும் எப்படியோ சம்பாஷணை தொடங்கிவிட்டது. இந்தியாவின் ஒவ்வொரு மூலைக்கும் போய்க் கொண்டே இருப்பவராதலால் அவர் நன்றாக ஹிந்துஸ்தானி பேசுவதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. ஹிந்தி எதிர்ப்பாளர்களிடம் அவர் கொண்டிருக்கின்ற ஆத்திரத்தைப் பொழிந்து தள்ளிவிட்டார். ராஜாஜியின் 'மந்திரித்தன'த்தைப் பற்றி எல்லைப்புறம் வரை சிலாகிக்கப்படுவதைக் கூறும் பொழுது அவர் அதிகக் குதூகலமாக இருந்தார். எந்த இடத்திற்குச் சென்றாலும் தம்மிடம் வியாபாரம் செய்பவர்களோ, அல்லது பேசிக்கொண்டிருப்பவர்களோ, யாரா யிருந்தாலும், எல்லோரும் முதலில் கேட்கும் கேள்வி ராஜாஜியைப் பற்றிய தாய்த்தா னிருக்குமாம் — வெளிநாட்டார் காந்திஜியைப்பற்றிக் கேட்பதுபோல. அதைக் கேள்வியும் பதிலுமாக அவர் ஹிந்துஸ்தானியில் கூறும்பொழுது உண்மையிலேயே அது ஒரு தனிச் சிறப்பாயிருந்தது. ஆகவேதான், எங்களுடன் இருந்த ஹிந்துஸ்தானியே தெரியாத ஒரு வாயாடி நண்பர்கூட, அவரை முதலில் ஹிந்துஸ்தானியிலேயே கூற விட்டுவிட்டு, அதன் பிறகு அதற்கு விரிவுரை இயற்றக் கூறினார் என்றால் வேறென்ன சாட்சியம் வேண்டும்?

அவர் கூறிய அபிப்பிராயத்தின் சாரம் இதுதான்:

ஹிந்தி கற்க வேண்டியது மிகமிக அவசியம். ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தால் உண்மையிலேயே நஷ்டமடையக் கூடியவர்கள் தமிழர்களே.

ராஜாஜியின் திறமையும் நிர்வாக நுட்பமும் வடநாடு முழுவதிலும் புகழப்படுகின்றன.

அவரைப் பிரதமராகப் படைத்தது தென்னாட்டின் அதிர்ஷ்டந்தான்.

அவருடைய சம்பாஷணையில்—இல்லை, குட்டிப் பிரசங்கத்தில்—லயித்துப்போயிருந்த எங்களை யெல்லாம் மீட்டுக்கொண்டு விவசாயப் பண்ணையைப் பார்ப்பதற்குச் சென்றோம். தமிழ் நாட்டின் தலைவர் ஸ்ரீ. ஓமாந்தூர் ரெட்டியார் இருக்கின்றாரே, அவர் விவசாயப் பைத்தியம் என்பதை நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இருந்தால் அதற்காக மிகவும் இரக்கப்படத்தான் வேண்டும்! அவருடன் கூடப் போன நாங்களோ, விவசாயம் என்றால் இந்தியாவின் பிரதானமான தொழில் என்பதற்கு மேல் அதிகமாக ஒன்றும் தெரியாதவர்கள்.

நாங்கள் போன அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமையாகும். தலைவருக்குச் சிறிது வருத்தமாகத்தா னிருந்தது. இவ்வளவு தூரம் வந்தும் ஆற அமரப் பார்க்க முடியாமற் போனது பற்றி அவர் வருந்தியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. விவசாய நுணுக்கங்களை அறிவதில் எவ்வளவு ஆர்வம் கொண்டவர் அவர் என்பதை அவருடன் பழகியவர்கள்தான் அறிந்துகொள்ள முடியும். வயல் வரப்பு நீங்கலாக மற்ற இலாகாக்கள் எல்லாம் அடைத்துக் கிடந்தன. அவர்கள் கையாளும் முறைகளையும், உபகரணங்களையும் பற்றி விசாரித்தறிந்துகொள்ளுவதற்கே ஆள் அகப்படவில்லை. ஒரே ஒருமனிதர்தான் அகப்பட்டார். அவர் எண்ணெய் உற்பத்தி நிபுணர். அவரும், ஞாயிற்றுக்கிழமையில் சிறிது சந்தடியின்றித் தமது பரிசோதனையை நடத்தலாம் என்று அங்கு வந்திருந்தார். எதைப் பற்றியும் அவரைத்தான் விசாரிக்க முடிந்தது. இந்த

நிலைமையிலேயே மணிக்கணக்காக நேரத்தைச் செலவு செய்தார் என்றால், எல்லா இலாகாக்களும் திறந்திருந்து, விளக்கியுரைக்கும் நிபுணர்களும் இருந்துவிட்டால், அப்புறம் கேட்க வேண்டுமா? எங்கள் பயணம் மறுதினத்திற்கு ஒத்திப் போடாமல் தீருமா, என்ன?

நாங்கள் போன பொழுது அந்த நிபுணர் லின்சீட் கதிரிலிருந்து விரையைப் பிரிக்கும் யந்திரத்தைப் பரீட்சித்துக் கொண்டிருந்தார். அந்த யந்திரம் அப்பொழுதுதான் கிர்லாஸ்கர் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தமாக இங்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில்தான் நாங்கள் அவரைச் சந்தித்தோம். நமது தலைவரைப் பற்றித்தான் கேட்க வேண்டுமா? அடுக்கடுக்காகக் கேள்விகளைப் போட்டு அந்த நிபுணரைத் திகைக்க வைத்துவிட்டார். அவர், தமக்குத் தெரிந்தவரை பதில் கூறிவிட்டு, மற்றவற்றை யெல்லாம் பற்றிச் சரியாகக் கூற முடியாமைக்கு வருத்தம்கூடத் தெரிவித்தார். லின்சீட் என்றால் உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அது எனக்குத் தெரியாது.

அகத்தி எண்ணெய் என்று சொல்லுகின்றோமே, ஆம்—வருணத்தில் கலந்து அடிக்கின்ற அந்த எண்ணெய்தான்—அது இந்த விரையிலிருந்துதான் எடுக்கப்படுகின்றது. அந்த விரையை அப்புறப்படுத்திய பிறகு அதன் வைக்கோலைச் சரியாக உபயோகப்படுத்தாமல் இருக்கின்றார்கள் விவசாயிகள். அதிலிருந்து என்ன செய்யலாம் என்பதைத்தான் இப்பொழுது அந்த இலாகாவில் முக்கியமாகப் பரிசோதனை செய்துகொண் டிருக்கின்றார்களாம். "அந்த வைக்கோலை அடித்து நாராக்கி, அதைத் திரித்துக் கயிறு, கயிற்றுப் பாய் முதலியன செய்கின்றோம்" என்று அந்த நிபுணர் கூறினார். அதைச் செய்தும் காட்டினார். திரித்த கயிறு முதலியவற்

றையும் எங்களைப் பார்க்கும்படி செய்தார். நமது தலைவர், "அதெல்லாம் சரிதான்! இதிலிருந்து நீங்கள் உடை நெய்கின்றீர்களா? அது சாத்தியமாக இருக்கின்றது என்று வெளியாகி யிருக்கின்றதே!" என்று கூறினர். இச் சொல் அவர் காதில் பட்டதோ இல்லையோ, திடுக்கிட்டுப் போனர் அவர். ஆச்சரியத்தால் மூர்ச்சைகூடப் போட்டு விடுவாரோ என்று எண்ண வேண்டியிருந்தது. "அந்த விஷயம் உங்கட்கு எப்படித் தெரிந்தது? நாங்கள் இன்னும் அதைப் பிரசித்தப்படுத்தவில்லையே! அதைப்பற்றி பிரஸ்தாபிக்கக்கூட இல்லையே! உங்கட்கு எப்படி அது தெரிய வந்தது? யார் கூறினர்கள்? அல்லது எங்கு கண்டீர்கள்? எதில் படித்தீர்கள்?" என்று கேள்விச் சரம் தொடுக்கத் தொடங்கி விட்டார்.

நமது தலைவர் ஓமாந்தூர், அதைத் தாம் ஒரு வெளி நாட்டு விவசாயப் பத்திரிகையில் படித்ததாகக் கூறினர். "சுத்தப் பட்டிக்காடாக இருக்கும் இந்தப் பேர்வழி வெளி நாட்டுப் பத்திரிகைகளையெல்லாம் படித்து விவசாய நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ளுகின்றாரா? இவர் யார்?" என்று அவர் சந்தேகப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் திரும்பப் போகும்பொழுது அவரிடம் வந்து, "நீங்கள் யார்?" என்று கேட்டிருப்பாரா?

"இவர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்" என்று நாங்கள் அறிமுகப்படுத்தி வைத்ததும், அவர் மிகவும் முகமலர்ச்சி பூத்து, தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஆங்கில சம்பிரதாயந்தான் உங்கட்குத் தெரியுமே! "அடாடா, இன்று உங்களைச் சந்தித்ததில் நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன்" என்பது போன்ற சொல்லடுக்குகளை வரிசையாகக் கொட்டிவிட்டார் அவர்.

சென்னை மாகாணத்தைப் பற்றியும் அங்குள்ள நிபுணர்களைப் பற்றியும் சில நிமிஷங்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டனர். ரயிலுக்கு நேரமாகிவிட்டதாலும், வேறு பார்ப்பதற்கு வசதி எதுவும் இல்லாததாலும் நமது தலைவர் கிளம்பினுர். நாங்களும் பின் தொடர்ந்தோம். மூட்டை முடிச்சுக்களுடன் ரயில் ஏறினேம். மறுதினம் மதன் மஹால் வந்து சேர, நாங்களும் ரயிலை விட்டிறங்கினேம்.

காங்கிரஸ் நடைபெறும் விஷ்ணுதத் நகருக்கு இங்கிருந்துதான் காரில் செல்லவேண்டும். காங்கிரஸ் நடைபெறும் இடம் இங்கிருந்து சுமார் ஐந்து மைல்களிருக்கும். நல்ல ரோடு; தார் போட்டிருக்கின்றது. இரு மருங்கும் மலைத்தொடர், ஆங்காங்கே சிறு சிறு மண்டபங்கள், ஆலயங்கள் கண்கட்குப் பெரு விருந்தளித்தன. ஏராளமான பெரிய கார்களும், சில சிறிய கார்களும் இருந்தன. மந்திரிகள், தலைவர்கள் எல்லோரும் சிறிய கார்களில் அழைத்துச் செல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் பெரிய கார்களில் சென்றனர். எப்படியோ மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு கார் நிறுத்துமிடத்திலிருந்து பிரதிநிதி ஜாகைக்குச் சென்று விட்டோம். ஸ்நானமெல்லாம் முடித்துக்கொண்டு சாப்பாட்டிற்குப் போனேம். தமிழ் நாட்டாருக்காக ஒரு போஜன சாலை அநுமதிக்க வரவேற்புக் கழகம் மறுத்துவிட்டது. "மசூலிப் பட்டணத்திலிருந்து வந்த ஒரு ஆந்திரா சாப்பாட்டு விடுதியில்தான் நீங்களும் சாப்பிட வேண்டும்; ஆந்திரா, தமிழ் என்றெல்லாம் இங்கே பிரிவு கிடையாது; எல்லோரும் மதராசிகளாக இருங்கள்!" என்று சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன செய்வது? அந்தப் போஜன சாலைக்குத்தான் சென்றேம். கல்லும், அரிசியும், உளுந்தும் கலந்து ஊறப்போட்டுக் குழைத்து அவித்த ஒன்றை இட்டிலி என்று கூறி, எங்கள் தலையில்

கட்டிவிட்டார்கள்: எங்கள் வாயில் திணித்துவிட்டார்கள் என்று வேண்டுமாயினும் வைத்துக்கொள்ளுங்கள். காலணு இட்டிலியைப் பார்க்கினும் எல்லா வகையாலும் குறைந்த அதற்கு ஓரணு விலை. "இட்டிலியே, உனக்கும் இப்படி ஒரு காலம் வந்ததா!" என்று இரங்காதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். சோற்றைப் பார்த்தவுடன் எனது குடல் கலங்கிவிட்டது. "இதற்குப் பெயரா சோறு? இது வெந் நீரில் ஊறிய அரிசி யல்லவா?" என்று சந்தேகமா யிருந்தது. "என்னய்யா சோறு இப்படி இருக்கின்றது?" என்று கேட்டால், "வண்ணம் ஈலாகதா உண்டவல" என்ற பதில் உடனே நமது காதைத் துளைத்துவிடும். அதன் பொருள், "சோறு இப் படித்தா னிருக்கவேண்டும்" என்பதாம். "சோறு கண்ட மூளி யார் சொல்" என்ற இரட்டையர் பாட்டின் ஈற்றடி எங்கள் ஞாபகத்தில் தள்ளிமுள்ளிக்கொண்டு முன்னே வந்த தென்றால் அதில் என்ன வியப்பிருக்கக்கூடும்?

மறுதினத்திலிருந்து மகாராஷ்டிர போஜன சாலையில் எங்கு நோக்கினும் தமிழர் தலைதான் தெரிந்தது. "மகராஜ்! அவ்ர் காயியே!" என்று சப்பாத்தியும், தக்காளியும், மோரும், ஊறுகாயும், பருப்பும், சோறுமாக, மாமனார் வீட்டு உபசாரத் துடன் உணவு தரப்பட்டது என்றால், நாங்களும் அங்கு செல்லவேண்டியது நியாயந்தானே?

இவற்றை விடுத்து நாம் காங்கிரஸ் நடவடிக்கைகளைப் பார்க்கப் போவோம்.

* * *

6—3—39

திரிபுரியில் எங்கு பார்த்தாலும் ஒரே கவலைதான். எல்லா முகங்களும் வாடி வதங்கிப் பொலிவற்று விளங்கின. புன்முறுவல் பூத்த முகமே காணக் கிடைக்காத பொருளா யிருந்தது. இதற்கு வேறென்ன காரணமாக இருக்க முடியும்? இழக்க முடியாத ஒன்று இந்தியாவில் இருக்கின்ற தென்றால் அது காந்தியடிகளின் உயிர்தான் என்பதில் இரண்டு வித அபிப்பிராயம் இருக்க முடியுமா? அந்த உயிரை ஆகுதியாக்கி, காந்தியடிகள் வேட்ட வேள்வித் தீதான் எல்லா மலர் முகங்களையும் வாடித் தொங்கச் செய்துவிட்டது.

மகாத்மாவின் உயிர் இந்திய மக்களின் உயிரன்றோ? அவரே யன்றோ இந்தியாவின் ஏகப் பிரதிநிதி! அவரை இழக்க எந்த உள்ளமும் இசையுமா? ஒவ்வோர் உள்ளமும் காந்தியடிகளின் ஒப்பற்ற உயிருக்கு மன்றாடி நின்றதில் அதிசய மென்ன இருக்கின்றது? இத்துடன் வலச்சண்டை இடச் சண்டையும் சேர்ந்துகொண்டது நெருப்புடன் காற்று கலந்துகொண்டது போல ஆகிவிட்டது. இங்ஙனமாக விஷ்ணு தத் நகரமே ஒரு துயரக் கடலாக, ஓயாத அலைகளுடன், காட்சி கொடுத்துக்கொண் டிருந்தது.

இந்த நிலைமையில் விஷ்ணுதத் நகர் இருந்த பொழுது ராஷ்டிரபதி சுபாஷ் சந்திரர், உடல் நலிவோடு, 6-3-39-ல் மாலை 5-மணிக்கு ஆம்புலன்ஸ் காரில் வந்து சேர்ந்தார். டாக்டர்கள் எச்சரித்திருந்தபடியால் எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யப்படவில்லை. திரளான மக்கள் தலைவர் ஜாகை முன் கூடியிருந்தனர். வந்தவுடன் தலைவருடைய தேகநிலை 103 டிகிரி காய்ச்சலாக இருந்தது. ராஷ்டிரபதியை வல்லபாய் பட்டேல், ஸ்ரீநிவாஸய்யங்கார், ஒரிசா பிரதமர் விஸ்வநாத தாஸ் முதலிய



ருப்ளானினி, பட்டேல், அஸாத் மூவரும் பேசிக்கொண்டே
விஷயாலோசனைக் கமிட்டிக்குச் செல்லுகின்றனர்

பல தலைவர்கள் சந்தித்தனர். காந்திஜியின் உபவாஸம் கருதி தலைவர் ஊர்வலம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

மாலை 5-மணிக்கு காந்தியடிகள் திறந்து வைப்பதாக இருந்த பொருட்காட்சி, அவர் வராமையால், ஸ்ரீ ஜவாஹர் லாலைக்கொண்டு திறந்து வைக்கப்பட்டது. வரவேற்புக் கழகத் தலைவர் சேத் கோவிந்த தாஸும், அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கக் காரியதரிசி ஸ்ரீ சங்கர்லால் பாங்கரும் நேருஜியை வரவேற்று முகமன் கூறித் திறப்பு விழா வாற்ற வேண்டிக்கொண்டனர். நேருஜி, திறப்பு விழா நடத்துவதற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே, பொருட்காட்சியுள் சென்று எல்லாப் பகுதிகளையும் பார்த்துவிட்டு வந்தார். அவர் செய்த திறப்பு விழாப் பிரசங்கம் மிக உருக்கமானதாக இருந்தது. கதரைப் பற்றியும், காந்திஜியைப் பற்றியும் அவர் பேசிய மொழிகள் மக்கள் உள்ளத்தில் உணர்ச்சியை வளர்த்தன.

“இன்று உங்கள் எண்ணமெல்லாம் காந்தியடிகளைப்பற்றியேதான் இருக்கும். இதைத் திறக்க வேண்டியவர் அவர். இதனுள்ளே இருக்கும் கதர்க் காட்சி அவர் லட்சியத்தைக் குறிப்பதாகும். அவர் இன்று ராஜ்கோட்டில் பட்டினித் தவங் கிடக்கின்றார். அந்த உண்ணு விரதம் இந்தியாவின் மற்ற எல்லாச் சிந்தனைகளையும் பின்னடையச் செய்துவிட்டது. நமது காரியத் திட்டங்கள் கூட அதனால் கலங்கிக் கிடக்கின்றன.

“கடந்த பல ஆண்டுகளாக காந்திஜி கதரின் தத்துவத்தை விளக்கி வந்திருக்கின்றார். கதர் தேசத்தின் சின்னமாக எண்ணப்படும் காலம் நெருங்கிவிட்டது. தொடக்கத்தில் கரடு முரடா யிருந்த கதர், இன்று கண் கவரும் தன்மையதாய், மிக்க மெல்லியதாய் ஆகிவிட்டது.

“இந்தப் பொருட்காட்சியில் நுழைந்த ஒருவர் வார்தாத் திட்டம் எதை யெதை யெல்லாம் சாதிக்கக் கூடியதாய் அமைந்தி

ருக்கின்றது என்பதை நன்குணர்ந்து அப்படியே ஆச்சரிய வயப்பட்டு விடுவார். நமது நாட்டில் அது கல்வி விஷயத்திலே ஒரு சிறந்த புரட்சியை உண்டாக்கத்தான் போகிறது என்பதில் கொஞ்சம் கூடச் சந்தேகமே யில்லை. காங்கிரஸ்காரர் அல்லாதவர்கூட இதை வெகுவாகப் புகழ்கின்றார்கள்."

இவை அவர் பேச்சின் சாரம் எனலாம்.

இரவு 8 மணிக்கு, கொடிமரச் சதுக்கத்தில், விவசாயிகள், காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் ஆகியோரின் கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்ரீ. மேஹர் ஆலி தலைமை வகித்தார். சமஷ்டி எதிர்ப்பு, சமஸ்தானப் போராட்டம், ஒற்றுமை, முஸல்மான்களிடையே பிரசாரம் இவை மேஹர் ஆலியின் பிரசங்கத்தின் கருத்து. டாக்டர் அஹமத், ராஷ்டிரபதி தேர்தல் விஷயம் இடையில் வந்த ஒரு விஷயமென்றும், காங்கிரஸ்காரர்கள் ஒத்துப் போகக்கூடிய திட்டத்தை வகுக்க வேண்டியதே நமது கடமை யென்றும் பேசினார். மேலும் சிலர் பேசினர். அனைவரும் ஒன்றுபட வேண்டு மென்பதும், காந்தீயர்கள், சோஷலிஸ்டுகள் ஒத்துப்போனா லல்லாது நாட்டிற்கு நன்மை ஏற்படா தென்பதுமே அவர்கள் செய்த பிரசங்கங்களின் சாரம். இத்துடன் இன்று நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு நித்திரைக்குச் செல்லலாம்.

*   *   *

7—3—39

7-ந் தேதி விடிந்தது. ஆம், உண்மையாகவே 7-ந் தேதி விடிந்தது. மாலை 4 மணிக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு மணியிலிருந்தே மக்கள் மண்டபத்துக்கு வர ஆரம்பித்து விட்டனர். சுமார் 5,000 பேர் டிக்கட் பெற்று உள்ளே வந்து அமர்ந்து விட்டனர். "ராஷ்டிரபதி வருவாரா, மாட்டாரா?" என்பது தான் கேள்வியாக இருந்தது. வருவா ரென்பர் சிலர்; மாட்டா ரென்பர் சிலர். இவற்றைக் கேட்டுக்கொண்டே வாளாயிருப்பர் பிறர். இப்படியே மணி நாலாயிற்று. மேடைமீது ஆனே, ஐயங்கார், விஜயநகர மகாராணி முதலிய பல பிரமுகர்கள் அமர்ந்திருந்தனர்.


பண்டித ஜவாஹர் வந்தார். அமர்ந்தார் மேடைமீது. எடுத்தார் காமராவை. இங்கும் அங்குமாகத் திருப்பி "அடிக்க" ஆரம்பித்துவிட்டார். சரோஜனி வந்தார். மேடைக்கு அழைத்துச் சென்றனர். மகாராணியும் கவியரசியும் ஒருவரை யொருவர் கண்டனர். கரங்கள் மலர்ந்தன. இரண்டு மலர்க் கொடிகள் ஒன்றை யொன்று கௌவுவது போல ஒருவர் பிடியுள் ஒருவர் அகப்பட்டுக்கொண்டனர். அன்பின் - பாசத்தின் - முதிர்ச்சியைக் காட்டும் அக்காட்சி உள்ளத்தை உருக்குவதா யிருந்தது. "ஒருவர் பிடியுள் ஒருவர் அகப்பட்டுக்கொண்டனர்" என்று கூறியது உபசார வார்த்தையே ஒழிய வேறில்லை. உண்மை என்னவென்றால், மகாராணிதான் கவியரசியின் பிடியுள் அகப்பட்டுக் கொண்டாரே யன்றி, கவியரசி மகாராணியின் கைகளுக்குள் கட்டுப் படவில்லை.

வல்லபாய் பட்டேல், அபுல்கலாம் அஸாத், ஆசார்யா கிருப்ளானி, ராஜேன் பாபு, ராஜாஜி, எல்லைக் காந்தி முத

லிய தலைவர்கள் வந்தனர். இவர்களை 'ஜே' கோஷத்துடன் பிரதிநிதிகளும் ஏனையோரும் வரவேற்றனர். முன்னர் இவர்கள் மேடைமீது சென்றமர்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இப்பொழுது இவர்கள், நேரே அ. இ. கா. க. அங்கத்தினர்கள் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்று, மத்தியில் அமர்ந்துவிட்டனர். இச்சமயத்தில் ஜவாஹர் காமராவைப் பட்டென்று மேடையில் வைத்துவிட்டுத் துள்ளிக் குதித்தெழும்பினர். ஆம், உண்மையிலே எழும்பினர். அவசர அவசரமாக "மைக்" வைத்திருக்கும் மூலைக்குச் சென்று "மைக்கை" இழுத்துத் தமக்குச் சரியாகப் பொருத்திக் கொண்டார். இவ்வளவும் சில விநாடிகளில். ஒன்றும் புரியாமல் திகைத்தனர் பலர். ராஷ்டிரபதி வருமுன் இவர் ஏன் இப்படி ஆட்டம் போடுகிறார் என்று வைத்த கண் வாங்காது அவரையே நோக்கிக்கொண்டிருந்தனர்.

"ஒரு ஒப்பற்ற மகிழ்ச்சி தரத்தக்க செய்தி!" என்று கூறிற்று நேருஜியின் திருவாய்.

எல்லா மக்களும் என்னவாக இருக்கும் என்று சிந்திப்பதற்குள்ளாகவே, "நமது காந்திஜி உபவாசத்தை முடித்துக் கொண்டார். கிச்சிலிப் பழச்சாறு உண்டு பாரணை செய்தார்" என்று கூறினாரோ இல்லையோ, கொட்டகை கிடுகிடாய்த்து விட்டது. வானே அதிரும்படி "மகாத்மா காந்திக்கு ஜே!" கோஷம் கேட்குமிடம் எங்கணும் நீக்கமற நிறைந்திருந்தது. எல்லா உள்ளங்களும் கொள்ளை மகிழ்வுற்றன. எங்கு நோக்கினும் மலர்ந்த முகத்தில் மணி முறுவல் பூத்திருந்தது. பிரிந்த தாய்ப் பசுவைப் பெற்ற கன்றுபோல ஒன்றும் புரியாத உவகைக் கடலுள் திளைத்தனர் யாவரும். அங்குமிங்கும் சென்று சென்று ஒருவருக்கொருவர் இந்தச் சுப செய்தியைப்



அ. இ. கா. காரியதரிசி
ஸ்ரீ. நரசிம்மம்

பரிமாறிக் கொண்டனர். எங்கும் ஒரே மகிழ்ச்சிப் பிரவாகம், சந்தோஷ ஆரவாரம். கொட்டகை முழுவதும் ஒரே இரைச்சல்.

‘ வேதியர் தமைத் தொழும்,
வேந்தரைத் தொழும்,
தாதியர் தமைத் தொழும்,
தன்னையே தொழும்,
ஏதுமொன் றுணர் கிலான்
இருக்கும், நிற்குமால்,
காதலென் றதுவு மோர்
கள்ளின் தேற்றிற்றே !’

என்று ராமன் வரவு கேட்ட பரதன் நிலையைக் கம்பர் சித்திரிக்கின்றாரே, அதே நிலையை அங்கு ஒவ்வொருவரிடமும் காண முடிந்தது.

இந்தச் சந்தோஷகரமான சமாசாரத்துடன் அ. இ. கா. க. கூட்டம் சுமார் $4\frac{1}{2}$ மணிக்குத் தொடங்கிற்று.

ராஷ்டிரபதி போஸ் வர முடியாமற் போகவே மௌலானா அபுல் கலாம் அஸாத் தலைமை வகித்தார். அப்பொழுது அஸாத் மேடையில் வந்து தலைவர் ஆசனத்தில் அமர்ந்தார்.

ராஷ்டிரபதியின் உடல் நிலை காரணமாக அவர் வர இயலா திருப்பதால் தாம் தலைமை வகிக்க நேர்ந்த தென்றும், கணக்குகளும் காரியதரிசியின் வருடாந்தர அறிக்கையுமே அப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயம் என்றும், அது வார்தாவில் கூடிய காரியக் கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படத் தயாரா யிருந்ததென்றும், ஆனால் ராஷ்டிரபதி எவ்வித நடவடிக்கையும் அங்கு கவனிக்கப்பட வேண்டாம் என்று கூறிவிட்டதால் இங்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என்றும் அஸாத் கூறினார்.

காரியதரிசியாக இருந்த ஸ்ரீ ஆசார்யா கிருப்ளானி கணக்கை வாசிக்க, அது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிறகு அறிக்கையைச் சபை முன் சமர்ப்பித்துப் பேசும் பொழுது, தாம் காரியதரிசியாக இருந்தபொழுது அவ்வறிக்கை தயாரித்து அச்சிடப்பட்டதால் அது தமது பெயரா லிருக் கின்றது என்றும், இல்லாவிட்டால் தற்சமயப் பொதுக் காரிய தரிசி ஸ்ரீ. நரசிம்மம் பெயராலிருந்திருக்கும் என்றும் கூறினுர்.

பிரதிநிதிகளுக்குச் சிறிது நேரத்திற்கு முன்னர்தான் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்ற தென்றும், அந்தக் குறைந்த அளவு நேரத்தில் அறிக்கையைப் படித்து முடிவுக்கு வரச் சாத்தியமில்லை யென்றும் சில பிரதிநிதிகள் கூறினுர்கள். அதை ஏற்றுக்கொண்டு, அவ்விஷயத்தை மறுநாள் கவனிப் பதாகத் தலைவரால் கூறப்பட்டு, கூட்டம் மறுநாள் 4-மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அ. இ. கா. க. கூட்டத்தின் மத்தியில் மறுபடியும் நேருஜி எழுந்து காந்தியடிகள் உண்ணுவிரதம் முடிவு பெற்றமைக்குக் காரணமான ராஜ்கோட் ஒப்பந்த விபரமடங் கிய மற்றொரு தந்திச் செய்தியைப் படித்தார். மறுபடியும் "காந்திக்கு ஜே!" விண்ணை முட்டியது.

அன்றிரவு 6-மணிக்குப் பொருட்காட்சியினுள் காந்தி யடிகளின் பிரார்த்தனைக்காக அமைந்த நிலப்பரப்பில் பாபு ராஜேந்திர பிரசாத் ஒரு சிற்றுரை நிகழ்த்தினுர். ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். காந்திஜியின் தலைமைதான் நாட் டிற்கு நல்வழி காட்டு மென்பதைப் பற்றிச் சென்றகாலச் சரித் திரக் குறிப்புகளுடன் செய்த அவர் பிரசங்கத்தைக் கேட்ட வர்கள் உள்ளக் கசிவுற்றனர் என்னலாம். இத்துடன் இன்றைய நிகழ்ச்சியையும் முடித்துவிட்டுப் படுக்கைக்குச் செல்வோம்.

* * *

8—3—39

8-ந் தேதி சூரியோதயம் ஆயிற்று. எல்லோரும் "கசு பிசு" என்று என்னமோ ஒருவருடன் ஒருவராகப் பேசிக்கொண்டும், இரைந்து கொண்டும், வாதமிட்டுக்கொண்டும் திரிகின்றார்கள்; அல்லது இருக்கின்றார்கள். "எங்களுடன் சேர்ந்து கொள் ளுங்கள்" என்பர் சிலர்; "இல்லை, எங்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்" என்பர் சிலர். இவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டு மிருப்பவர் பலர். இப்படியாகவே மாலை 2 மணி வரை கழிந்தது. மணி இரண்டாயிற்றோ இல்லையோ, எல்லோரும் விஷயாலோசனைக் கமிட்டிப் பந்தலில் சென்று இடம் பிடித்துக்கொண்டனர். அ. இ. கா. க. கூட்டம் 4 மணிக்கல்லவா? அதற்காகத்தான் இவ்வளவு முன்னெச்சரிக்கையும். ராஷ்டிரபதி போஸ் இன்று நிச்சயம் வருவார் என்று சொல்லிக்கொள்ளப்பட்டது. ராஷ் டிரபதி வருவதற்குச் சிறிது நேரம் முன்னதாகவே நேருஜி, பட்டேல், காபர்கான் முதலியவர்கள் வந்துவிட்டனர். ஜவா ஹர், அஸாத், எல்லைக் காந்தி, சரத் சந்திரர், டி. பிரகாசம், ஸ்ரீநிவாஸய்யங்கார், ஆனே, விஜயநகர மகாராணி முதலியவர் கள் மேடையில் அமர்ந்திருந்தனர். பட்டேல், ராஜேன்பாபு, கிருப்ளானி முதலியவர்கள் பிரதிநிதிகளின் ஸ்தானத்திற்கு நேரே வந்து சேர்ந்தனர். முன்னிடம் எல்லாம் நிறைந்திருந் தமையால் ஆகக் கடைசியில் வந்து அமர்ந்தனர். அவ்விடத் தில் ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்யாயா இருந்தார். அவ ருடன் இவர்கள் எல்லோரும் கூடவே அமர்ந்திருந்தார்கள். மேடையைப் பார்த்தே சினிமாப் படம் பிடித்த காமராக்காரர் உடனே பிரதிநிதிகளின் ஸ்தலத்தை நோக்கிப் பிடிக்கத் தொடங்கி விட்டனர். இந்தச் சமயத்தில் ராஷ்டிரபதி ஆம் புலன்ஸ் காரில் வந்து சேர்ந்தார். தலைவர் வழிக்கு நேரே



நோயுற்ற ராஷ்டிரபதிக்கு சிகிச்சை

காரைக் கொண்டு வந்து, ராஷ்டிரபதி "ஸ்ட்ரெச்சர்" மூலமாக எடுத்துச் செல்லப்பட்டார். ராஷ்டிரபதியைப் பந்தலுக்குள் கொண்டு வந்ததும், "ராஷ்டிரபதிக்கு ஜே!" கோஷம் முழங்கிற்று. ராஷ்டிரபதி ஒரு சாய்வு நாற்காலியில் படுத்தபடியே காரியங்களை நடத்திச் சென்றார். ராஷ்டிரபதியைச் சுற்றி அவருடைய தமையனார்களுள் ஒருவரான டாக்டர் சுனீல் சந்திர போஸும் இன்னும் மூன்று இளம் பெண்மணிகளும் அமர்ந்து கொண்டிருந்தனர். மூன்று பெண்மணிகளும் சதா பனை ஓலை விசிறி கொண்டு விசிறிக்கொண்டே இருந்தனர். இடையிடையே மருந்து நீரைத் தலையிலும் நெற்றியிலும் தடவிக்கொண்டும் இருந்தனர். சுபாஷ் சந்திரர் இவ்வளவு சிரமத்துடனும் அங்கு வந்து காரியத்தை நடத்திச் சென்றமை பிரதிநிதிகளின் உள்ளத்தில் கனிவை உண்டாக்கிற்றென்னலாம். சுபாஷின் 70 வயது சென்ற அன்னையும் ராஷ்டிரபதியுடன் பந்தலில் வந்திருந்தார்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் சேத் கோவிந்ததாஸ், சுபாஷ் சந்திரரிடம் சென்று சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு எழுந்து, 'மைக்'குக்கு முன் வந்து நின்று, "பழைய காரியக் கமிட்டி மெம்பர்களான வல்லபாய், கிருப்ளானி முதலியவர்கள் எல்லாரும் மேடைக்கு வந்து அமர்ந்து கொள்ளவேண்டுமென்று ராஷ்டிரபதி போஸ் வேண்டிக்கொள்ளுகின்றார்" என்று கூறினார். அவ் வேண்டுகோளுக் கிணங்க இத் தலைவர்கள் மேடைக்குச் சென்றனர். வல்லபாய் முன் செல்ல, ராஜேன் பாபு அவரைத் தொடர, மற்றவர்கள் இவர்கட்குப் பின் செல்ல, ஒவ்வொருவரும் வரிசையாய் மேடை மீதேறினார்கள். சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

நீண்ட நேர வாதத்திற்குப் பின்னர் காரியதரிசியின் அறிக்கை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அதற் கடுத்தபடியாக 179 பேர்கள் கையெழுத்திட் டனுப்பியிருந்த ஒரு தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ராஷ்டிரபதி உத்தரவின்மீது தற்காலிகப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ. நரசிம்மம் அதைச் சபையோருக்கு முன் படித்தார்.

சென்ற வருஷத்துக் காரியக் கமிட்டி அங்கத்தினர்க ளிடம் நம்பிக்கை யிருப்பதாகவும், அவர்கள் மீது சுமத்திய பழிக்கு வருந்துவதாகவும், வரப்போகும் ஆண்டில் நெருக் கடி ஏற்படக்கூடியதாய் இருப்பதால் காந்தியடிகளின் விருப்பப்படி காரியக் கமிட்டியை அமைக்கும்படி ராஷ்டிர பதியைக் கேட்டுக்கொள்வதாகவும் அத்தீர்மானம் இருந்தது. இந்தத் தீர்மானத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வது பற்றி சபையின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும் புவதாக ராஷ்டிரபதி தெரிவித்தார்.

இதை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டு மென்பதற் குரிய காரணங்களை விளக்கிப் பண்டித கோவிந்த வல்லப பந்த் ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். இதை ஆதரித்து ஸ்ரீ பால கிருஷ்ண சர்மா, ஸ்ரீ மோகன்லால் சாக்ஸேனா, ஸ்ரீ லாலா ஷாம்லால் முதலியவர்களும், எதிர்த்து ஸ்ரீ. எம். என். ராய், ஸ்ரீ. எம். எஸ். ஆனே, ஸ்ரீ. நரிமன், ஸ்ரீ. சரத் சந்திரபோஸ், சர்தார் ஸார்துல் சிங் முதலியவர்களும் காரசாரமாகப் பேசினார்கள்.

முடிவில் ராஷ்டிரபதி, சட்டப்படி அத் தீர்மானத்தை அங்கீகரிக்க முடியாம லிருப்பதால், தாம் அதை நிராகரிப்ப தாகக் கூறினார்.

இதற்குப் பின் சிற்றுண்டிக்காகக் கூட்டம் அரை மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

சுமார் முக்கால் மணி நேரத்திற் கப்புறம் மறுபடியும் கூடிற்று. இனிமேல் இக்கூட்டம் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டமாகு மென்று ராஷ்டிரபதி அறிவித்து, இதில் பண்டித பந்தின் தீர்மானத்தை ஆலோசிக்கலாம் என்று அநுமதியளித்தார். அப்பொழுது ராஷ்டிரபதி, "இத் தீர்மானம் மிக முக்கியமானது. பிரதிநிதிகள் நன்கு யோசித்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாசகத்தில் அமைத்தால் நன்றாயிருக்கும். இது போன்ற ஒரு தீர்மானத்தை நாம் அபிப்பிராய பேதமின்றி நிறைவேற்றினால்தான் சிறப்பாயிருக்கும். எவ்விதமாகவேனும் சமரசம் செய்துகொள்ளவும், இச்சபை ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு திட்டத்தை ஏற்படுத்தவும் முடிந்த வரை எல்லா முயற்சிகளையும் நான் மேற்கொள்ளுவேன். மற்ற தலைவர்களும் அவ்வண்ணமே செய்யவேண்டு மென்று நான் மன்றாடுகின்றேன்" என்றுரைத்தார்.

அதன்மேல் பண்டித பந்த் தீர்மானத்தைப் பிரேரேபித்து, அதன் இன்றியமையாத் தன்மையை விளக்கி, நீண்ட நேரம் பேசினார். அதை ஆமோதித்து ஸ்ரீ. காட்கில் சிறிது பேசினார். அதன் பிறகு தலைவர் இத் தீர்மானத்தின் மேல் கொண்டுவரும் திருத்தங்களை யெல்லாம் விரைவில் அனுப்பும்படி கூறி, கூட்டத்தை மறுதினம் 3-30 மணிக்கு ஒத்திப்போட்டார். பிறகு அவர் ஆம்புலன்ஸ் காரில் தமது ஜாகைக்குச் சென்றார்.

இன்றைய நிகழ்ச்சியை இத்துடன் முடித்து விட்டு நாமும் நமது ஜாகைக்குச் சென்று உண்டு உறங்கலாம்.

* * *

9—3—39.

9-ந்தேதி பிறந்தது. குளித்து முழுகி வந்தால், எங்கும் பரபரப்பாக இருந்தது. பந்த் தீர்மானந்தான் அவ்வளவு பரபரப்பை உண்டாக்கி யிருந்தது. கட்சிப் பிரதிகட்சிக்கு ஆதரவு தேடிக்கொள்ள இரு சாராரும் பலத்த முயற்சி செய்கின்றார்கள். வங்காளப் பிரதிநிதிகள் இரவெல்லாம் என்னென்ன சர்ச்சையோ செய்துகொண்டு மஹா சிவராத்திரி விரதம் பிடித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறிருக்க, நம் ராஜாஜி பொருட்காட்சியில் பிரசங்கம் செய்யப்போகின்றாராம். வாருங்கள் நாமும் அங்கு செல்லலாம்.

காலை 9-30 மணி இருக்கலாம். ஏராளமான கூட்டம். நமது பிரதமர் ராஜாஜி ஒரு பிரசங்கம் செய்தார். வழக்கம் போலவே நல்ல நல்ல பொருத்தமான உபமானங்களுடன் அவர் பேசினார் என்று குறிப்பிட வேண்டுமா?

காந்திஜி ஒரு படகோட்டி. அவருடைய படகு பழைய படகுதான். ஆம், கர்நாடகப் படகுதான். ஆனால் அபாயமில்லாதது. இவ்வளவு காலமாக நாம் ஏறியிருந்து கவலையில்லாமல் பிரயாணம் செய்த படகு. அந்தப் படகு பழைய படகு, அதற்கு அழகில்லை, அதில் நல்ல விஸில் இல்லை என்பதற்காக, அதை விட்டுவிட்டு இது வரையில் நாம் ஏறியே அறியாத ஒரு படகில், அழகான வர்ணம் தீட்டி, உரத்த தொனியுடன் கூடிய விஸில் வைத்திருப்பதற்காக, அதில் உள்ள ஓட்டையையுங்கூடக் கவனியாது, ஏறிச் செல்லலாமா? அது மட்டுமன்று—காந்திஜி ஒரு நல்ல பயிற்சி பெற்ற படகோட்டி. நதியின் தன்மையை நன்கறிந்தவர். மேடு பள்ளம் அவருக்குத்தான் தெளிவாகத் தெரியும். மேடு பள்ளத்தைத் தெளிவாக அறிந்த அவர்

தான் படகை அபாயமின்றிச் செலுத்த வல்லவர். இது நமது இருபது வருடங்கட்கு மேலான அநுபவம். இவ்வாறு காந்தீயத்தின் உயர்வைப் பற்றியும், அதுதான் நமது நாட்டிற்கு ஏற்றதென்பதைப் பற்றியும் ஒரு கவர்ச்சி மிக்க பிரசங்கம் செய்தார்.

"இந்தியாவுக்குத் தலைவர் ஒருவர்தான்; அவரும் காந்தியடிகள்தான்" என்று அவர் கூறியபொழுது கைதட்டு காது செவிடுபடச் செய்துவிட்டது.

பகலில் சாப்பிட்டதிலிருந்தே மக்கள் திரள் திரளாக விஷயாலோசனைக் கமிட்டிக் கொட்டகையுள் வந்து கூடத் தொடங்கிவிட்டனர். இடம் போதவில்லை. போக்கு வரத்திற்காக ஒதுக்கியிருந்த இடம் முழுவதும் ஜனங்கள் உட்கார்ந்தும், ஏராளமானவர்கள் நின்றுகொண்டேயிருந்தனர்.

பண்டித பந்தின் தீர்மானத்திற்கு ஒரு டஜன் திருத்தப் பிரேரணைகள் பிரேரேபிக்கப்பட்டன.

1. ஸ்ரீ. எம். என். ராய்.
2. ஸ்ரீ. அச்யுத பட்வர்த்தன்.
3. சர்தார் சார்துல் சிங்.
4. ஸ்ரீ. ஜயப்பிரகாஷ் நாராயண்.
5. ஸ்ரீ. கே. எப். நரிமன்.
6. ஸ்ரீ. பாரத்வாஜர் (கான்பூர்)
7. ஸ்ரீ. வி. டி. திரிபாடி.
8. ஸ்ரீ. எம். திருமலை ராவ்.
9. ஜனப். நூருதீன் பிஹாரி.
10. ஸ்ரீ. கௌரி சங்கர் மிஸ்ரா.
11. ஸ்ரீ. லாலா தூனி சந்த்
12. ஸ்ரீ. சிவலால் ஸாக்ஸேனா

ஆகிய இவர்கள்தான் திருத்தம் கொண்டுவந்தவர்கள்.

திருத்தங்களைப்பற்றி விவாதிக்க அநுமதிக்கு முன்னதாகவே, பிரசங்கிகள் மனத்தைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது என்றும், நடவடிக்கைகள் யாவும் குழப்பமின்றி அமைதியாக நடைபெற எல்லோரும் உதவி செய்ய வேண்டுமென்றும் ராஷ்டிரபதி கேட்டுக்கொண்டார். "காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் நாணயத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகமேயில்லை. கமிட்டியில் உள்ள எந்த ஒரு அங்கத்தினர் மீதும் எவ்விதக் குற்றச் சாட்டும் நான் சுமத்தவில்லை என்று கூறியதை மறுபடியும் கூறி விடுகிறேன்" என்று கூறி, வாதங்கள் யார் மனத்தையும் புண்படுத்தாத வகையிலிருக்க உதவி செய்யும்படி பிரசங்கிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

அதன்பிறகு மேலே குறிப்பிட்ட பன்னிரண்டு பேர்களும், தத்தம் திருத்தத்தைப் பிரேரேபித்து, அவற்றின் முக்கியத்தைப் பற்றியும் பேசினார்கள்.

எல்லாத் திருத்தங்களும் முறைப்படி பிரேரேபிக்கப்பட்ட பின்னர் மாலைச் சிற்றுண்டிக்காகச் சபை கலைந்தது.

சுமார் 35 நிமிஷங்கட்குப் பிறகு மறுபடியும் கூடிற்று. திருத்தங்களை ஆதரித்தும் எதிர்த்தும் ஏராளமானவர்கள் பேசினார்கள். நீண்ட நேரம் வாதப் பிரதிவாதங்கள் காரசாரமாக நடந்தன. அதன்மேல் பண்டித பந்த் அழைக்கப்பட்டார். சிலர், "நாளைக்குத்தான்!" எனக் கூச்சலிட்டனர். ராஷ்டிரபதி, "இன்றைக்கே முடிந்து விடட்டும்" என்றார். பண்டித பந்த் பேச எழுந்துவிட்டார். கூட்டத்தை ஒத்திப் போடவேண்டுமென்ற கூச்சல் பலமாயிற்று. விஷயாலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களும் பார்வையாளர்களும் எழுந்து இரண்டறக் கலந்தும் போனார்கள். என்ன செய்வ

தென்பதைப் பற்றி சில நிமிஷங்கள் யோசித்ததன் மேல், "நாளைப் பகல் 1-30 மணிக்கு கூட்டம் நடைபெறும்; பத்திரிகை நிருபர்களைத் தவிர அங்கத்தினரல்லாத வேறு யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்று வரவேற்புக் கமிட்டித் தலைவர் அறிவித்தார். இத்துடன் அன்றைக் கூட்டம் முடிந்தது.

* * *

10—3—39

அடுத்த தினம் வந்தது. அதாவது 10-ந் தேதி. எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த 10-ந் தேதி வந்துவிட்டது. ஐம்பத்திரண்டு கஜேந்திரர்களை ஏககாலத்தில் பார்ப்பதென்றால், அது சாமானியமாய் எல்லோருக்கும் கிடைத்துவிடுமா? எனவே, காலை 8 மணிக்குள் தமது காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக்கொண்டு, எண்ணற்ற மக்கள் பாதையின் இரு மருங்கும் மொய்த்துக்கொண் டிருந்தனர். இவ்வளவு மக்களும் எதிர்பார்த்துக்கொண் டிருந்தபடி, மலை பல அசைந்தாடி வருவதைப் போல், கஜேந்திரர்கள் பவனி வந்தனர். எல்லா யானைகளும் பலவித வர்ணங்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தன. சில யானைகட்கு நெற்றியில் தேசீயக் கொடித் திலகம் தீட்டப்பட்டிருந்தது.

ராஷ்டிரபதி ரதம் இரு யானைகளால் இழுத்து வரப்பட்டது. ரதம் பெரிய பிரசங்கப் பரண் மாதிரி அமைக்கப்பட்டு கதர்த் துணிகளாலும் பாசி மணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுபாஷின் உடல் நலிவு அவரை இந்த ஊர்வலத்திற்கும் வரவொட்டாமல் செய்துவிட்டது. அதுதான் பெரும்பாலான பொது மக்கட்கு ஏமாற்றத்தை அளித்ததெனலாம்.

ராஷ்டிரபதி போஸ் வரக்கூடாமையால் அவரது உருவப் படத்தை வைத்தே ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலத்தின் தலைப்பில் பாண்டு வாத்யக் கோஷ்டி. அதற்குப் பிறகு நாதஸ்வரக் கோஷ்டி. அதற்குப் பின்னர் மூன்று வேறு விதமான உடையில் விளங்கிய தேசீயப் பட்டாளத்தார் பட்டாள நடை நடந்து சென்றனர். அவர்களைத் தொடர்ந்து பெண் தொண்டர் படையினர். அவர்கட் கப்புறம் யானை வரிசை. முதன் முதலில் ஒரு உயரமான யானை வந்தது. அதன் மேல் முதல் காங்கிரஸ் தலைவரான W. C. பானர்ஜியின் படம் அமைக்கப் பட்டிருந்தது. இப்படியே வருடா வருடம் தலைமை வகித்த 52 ராஷ்டிரபதிகளுடைய உருவப் படங்களும் 52 யானைகள் மீதும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அதன் பிறகு தலைவர் படம் அமைக்கப்பட்டிருந்த ரதம். அதற்குப் பின்னர் தொண்டர் குழாத்தினர். அவர்களைத் தொடர்ந்து மனித வெள்ளம். இப்படியாக ஊர்வலம் வெகு சிறப்பாகக், கண்கட்குச் சிறந்த பெரு விருந்தாக இருந்தது.

ஊர்வலமாக வந்த இந்த ஜன சமுத்திரம் கொடிமரச் சதுக்கத்தில் வந்து சேர்ந்தது. கொடி ஏற்ற வேண்டிய ராஷ்டிரபதி வர முடியாமையால் பண்டித ஜவாஹர்லால் நேருக்குத் தான் அந்தப் பாக்கியமும் கிடைத்தது. ஒரு உணர்ச்சியுள்ள பிரசங்கத்துடன், நேருஜி தாயின் மணிக்கொடியைப் பறக்க விட்டார். 'மேரே ராஷ்டிரீய ஜண்டாகீ—ஜே !' என்று ஒரே கோஷம்.

இந்த நிகழ்ச்சிகட்கெல்லாம் பிறகு 1-30 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டி கூடுவதாக இருந்தது. முடிவை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஜனங்கட்கிருந்த ஆவலுக்குக் கணக்கு வழக்கே யில்லை. எனவே 1 மணியிலிருந்தே பந்தலை மக்கள் சூழ்ந்துகொண்டு விட்டனர். விஷயாலோச

ஜேக் கமிட்டி மெம்பர்களும் பத்திரிகை நிருபர்களுமே உள்ளே அநுமதிக்கப்பட்டனர். எனவே கூட்டம் சுமார் 500 பேர் தானிருக்கும். ராஷ்டிரபதி வராமையால் மௌலானா அபுல் கலாம் அஸாத் தலைமை வகித்தார்.

ஸ்ரீ. சரத் சந்திர போஸ் எழுந்து, ராஷ்டிரபதிக்கு உடல் நிலை சௌகரியப்பட்டால் மாலை 5-30 மணிக்குக் கூடவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக்கு வருவார் என்று கூறினார். அதன் பின்னர் காந்தியடிகளிடமிருந்து ராஷ்டிரபதிக்கு வந்த தந்தி ஒன்றை வாசித்தார்.

" காங்கிரஸில் இருக்கும் ஒழுங்கீனங்களைக் களைவதற்குத் திரிபுரி காங்கிரஸில் வழி கோலாவிட்டால் அது முதல் தரமான தவறாக இருக்கும். காங்கிரஸ் விதிகளில் திருத்தங்கள் செய்து காங்கிரஸின் அங்கீகாரத்திற்கு வைக்க வேண்டுமென்று கருதாமல் அகில இந்தியக் கமிட்டிக்கே அதிகாரமிருக்கும்படி செய்யவேண்டும்.'' இதுதான் காந்திஜி அனுப்பிய தந்தியின் சாரம். இதை ராஷ்டிரபதி ஆதரிப்பதாகவும் கூறினார்.

அதன் பின்னர் பண்டித பந்த் எல்லோருடைய வாதங்கட்கும் பதில் கூறி முடித்தார். அப்புறம் திருத்தங்கள் ஒவ்வொன்றாய் ஓட்டுக்கு விடப்பட்டன. ஒவ்வொன்றும் வரிசையாகத் தோற்றுக்கொண்டே வந்தன. முடிவில் எல்லாத் திருத்தங்களும் 'கிர் கயா'! எனவே அசல் தீர்மானம் ஓட்டுக்குவிடப்பட்டது. சாதகமாக 218 பேரும் பாதகமாக 135 பேரும் வாக்களித்தனர். அசல் தீர்மானம் பெரும்பாலான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது என்று தலைவர் அஸாத் கூறினார். அவர் முதன் முதலாக இம்முடிவு கூறும்பொழுதுதான் ஆங்கிலத்தில் பேசினார். அதுவும் ஹிந்தி தெரியாதவர்கள் கேட்டுக்கொண்டதன் பிறகு. அதன் மீது



மௌலானா அபுல்கலாம் அஸாத்

வங்காளிகள் சும்மா இருப்பார்களா என்ன? படை திரட்டத் தொடங்கிவிட்டனர். அவர்களுடைய ஆர்ப்பாட்டங்களைக் கண்டு, மகாசபையில் இத்தீர்மானம் தோற்றுவிடக்கூடுமோ வென்று கூடச் சிலர் எண்ணியதுண்டு.

சரியாக 5-30-மணிக்கெல்லாம் லட்சக் கணக்கான மக்கள் காங்கிரஸ் மகாசபைத் திடலில் கூடிவிட்டனர். மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டிருந்த அவ்விடம் காணற் கினிமையாக இருந்தது. மலையடிவார மானதால் காசு கொடாமல் காட்சிகளையெல்லாம் கண்டுகளிப்பவர்கட்குச் சிறிது அனுகூலமாக இருந்தது. சுமார் முப்பதினாயிரம் பெயர்கள் மலைமே லேறி இருந்து கொண்டு சகல உரிமைகளையும் அடைந்திருந்தார்கள் என்றால் அப்புறம் பார்த்துக்கொள்ளுங்களேன்!

இப்படியாக மகாசபை மிக ரம்மியமாகக் கூடிற்று. மொத்தம் லட்சம் பேருக்கு மேல் கூடியிருந்தனர் எனலாம்.

'வந்தே மாதர' கீதத்துடன் காங்கிரஸ் மகாசபை தொடங்கிற்று. வரவேற்புக் கழகத் தலைவர் சேத் கோவிந்த தாஸ் பிரதிநிதிகளை வரவேற்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். சுபாஷ் சந்திரர் இங்கும் வரமுடியாமற் போனதால் மௌலானா அபுல் கலாம் அஸாத் இக்கூட்டத்திலும் தலைமை தாங்கினார். ராஷ்டிரபதியின் தலைமை உரையை ஹிந்துஸ்தானியில் ஆசார்ய நரேந்திர தேவும், ஆங்கிலத்தில் ஸ்ரீ. சரத் சந்திர போஸும் படித்தனர்.

அதன் பிறகு பல்வேறிடங்களிலிருந்தும் வந்திருந்த ஆசிச் செய்திகளை ஸ்ரீ. நரசிம்மம் படித்தார். ஜப்பானிலிருக்கும் இந்திய தேசீய காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ. ஏ. எம். சாஹே, ஸ்ரீ. ராஷ்பிஹாரி போஸ், ஜான்ஸிபார் இந்தியர் சங்கம், கொழும்பு இந்திய சேவா சங்கம், சீனப் பொதுவுடை

மைக் கட்சி, கொழும்பு லங்கா சம சமாஜக் கட்சி, மலாக்கா இந்தியர்கள், கொழும்பு இந்திய சங்கத் தலைவர், திருவாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர், பண்டித மதன் மோகன் மாளவியா, கவி ரவீந்திரர் முதலியவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்களாவார்கள்.

அதன் பிறகு, தலைவர் அஸாத் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பண்டித ஜவாஹர்லால் நேரு எகிப்து தேசத்திலிருந்து வந்திருக்கும் "எகிப்து வப்துக் கட்சி" தூதுக் கோஷ்டியினரைச் சபையோருக்கு அறிமுகப்படுத்தி வைத்தும், அவர்களை வரவேற்றும், சிறிது நேரம் பேசினார்.

அப்பொழுது நேருஜி, "மிசிரமும் இந்தியாவும் ஒரு தூரத்திலிருக்கின்றன; அவை இரண்டிற்கும் பொது விரோதி ஒன்றே. அதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இவ்விரண்டு பழம் பெரும் நாடுகளும் இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்றன. எனவே இச்சந்தர்ப்பத்தில் மிசிர தேசப் பிரதிநிதிகள் இங்கு விஜயம் செய்திருப்பதானது ஒரு குறிப்பிடத்தக்க சம்பவமாகும். திடீரென ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால்தான் எகிப்து வப்துக் கட்சித் தலைவர் நஹாஸ் பாஷா வரமுடியாது போயிற்று. இந்தியர்கள் தங்கள் நற்செய்தியை எகிப்துக்கு விரைவில் அனுப்பக்கூடும் என்றும் நம்புகின்றேன்" என்று கூறினார்.

அதன்பின் அராபிய மொழியில் தூதுக்கோஷ்டித் தலைவர் முகம்மது அப்துல் பத், தங்கள் நாட்டு மக்களின் சார்பாக, இந்தியர்களுக்கும், உரிமைக்காகப் போராடும் அவர்களுடைய அறப்போருக்கும் வாழ்த்துக் கூறினார். காந்தியடிகள் நீண்ட காலம் வாழ்ந்திருக்கப் பிரார்த்தித்தார். தங்கட்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்காக வந்தனம் கூறினார். காங்கிரஸ்

மகாசபையின் இந்த ஒப்பற்ற கூட்டத்தைக் காண முடிந்தமைக்கு மிகவும் சந்தோஷம் கொள்ளுவதாகத் தெரிவித்துக் கொண்டார். இந்தியர்கட்குச் சில புத்திமதிகளும் கூறினர். அவை வருமாறு:—

"எகிப்து தேசம் ஒரே மதக்கோட்பாட்டைக் கொண்டதல்ல. அங்கும் இஸ்லாமியர், கிறிஸ்தவர் முதலிய பல வேறுபட்ட மதத்தினர் உளர். ஆனல் இறைவணக்க நேரம் போக மற்றைக் காலங்களில் யாரும் தங்களை முஸல்மான் என்றோ அல்லது கிறிஸ்தவர் என்றோ கூறிக்கொள்வதில்லை; எண்ணிக் கொள்வதுகூட இல்லை. 'எகிப்தியர்' என்றுதான் அவர்கள் எண்ணத்திலும் செய்கையிலும் காணப்படும். இத்தகைய ஒற்றுமை உணர்ச்சிதான் எகிப்துக்கு வெற்றியளித்தது. உங்கள் பெருமை மிக்க நாட்டிலும் நீங்கள் மதமாற்சர்யங்களை மறந்து ஒன்றுபட்டால்தான் கருதிய கருமம் கைகூடும். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னிருந்தே நேசப்பான்மையுடன் இணங்கியிருக்கும் இவ்விரு பெருந் தேசத்தினிடையிலும் அன்யோன்ய சம்பந்தம் ஏற்படும் பொருட்டு இந்தியாவிலிருந்தும் ஒரு தூதுக் கோஷ்டி எங்கள் நாட்டிற்கு வரவேண்டும் என்று நான் எகிப்தியர்களின் சார்பாக அழைக்கின்றேன்."

அராபியில் அவர் கூறியவற்றை தூதுக்கோஷ்டிக் காரியதரிசி ஸ்ரீ. அகம்மது காஸீம் கௌடா ஆங்கிலத்தில் எடுத்துரைத்தார். தூதுக் கோஷ்டியினருக்குத் தலைவர் அஸாத் மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தார். அவர்கள் மீண்டும் தங்கள் வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக்கொண்ட காட்சி மிக உருக்கமாக இருந்தது.

இத்துடன் மகாநாடு மறுதினம் 5-30-மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

3

இன்றையக் காங்கிரஸில் குறிப்பிடத் தகுந்தவை பல. அவற்றில் ஒன்று மகாநாடு கூடிய இடம். அவ்விடம் இந்திய தேசப் படத்தை நினைப்பூட்டுவதாகவே இருந்தது. அதன் பின் புறத்தில் நீண்ட மலைத்தொடர் அமைந்திருந்தது இமயத்தை நினைவூட்டிற்று. அம்மலை மீது அழகாகப் பறந்து கொண்டிருந்த மூவர்ணக்கொடி நம்மையெல்லாம் பார்த்து, "சேர வாரும் ஜெகத்தீரே!" என்றழைப்பது போன்றிருந்தது. பரணின் முன் பகுதியில், சுமார் 20 அடி உயரத்தில், கலப்பை தாங்கிய கையோடு அமைந்திருந்த விவசாயியின் சிலை இந்திய மக்களின் இரங்கத் தக்க நிலைக்கு எடுத்துக் காட்டா யிருந்தது.

மற்றொன்று இதுவரை எம் மகாநாட்டிற்கும் வந்திராத முறையில் வெளிநாடு ஒன்றிலிருந்து ஒரு தூதுக்கோஷ்டி வந்து தன் ஆசியையும் அன்பையும் அறிவித்துக்கொண்டதாகும்.

மற்றொன்று எந்த மகாநாட்டிலும் இருந்திராத அவ்வளவு சுருக்கமான பிரசங்கமாக ராஷ்டிரபதியின் பிரசங்கம் இருந்தது.

* * *

11—3—39

மறுதினம் 11-ந்தேதி காலை 8-30 மணிக்கெல்லாம் விஷயாலோசனைக் கமிட்டி கூடியது. இன்று விஷயாலோசனைக் கமிட்டியில் எவ்விதப் பரபரப்பு மிருக்கவில்லை. சற்றேறக் குறைய 50 அங்கத்தினர்கள் தான் வந்திருந்தனர். மேடை மீது நாலைந்து பேர் இருந்தனர்.

இங்கும் ராஷ்டிரபதி வர முடியாமையால் மௌலானா அஸாதே தலைமை வகித்தார்.

முதன் முதலாக நேருஜியின் தீர்மானங்கள் ஐந்தும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அவற்றைப் பிரேரேபித்த பொழுது பண்டிதர், "இவ்வளவு காலமாக இப்படிப்பட்ட தீர்மானத்தைக் காரியக்கமிட்டி தயாரித்து வந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இப்பொழுது காரியக் கமிட்டி கலைந்திருக்கின்றது. ஆனால் இந்தத் தீர்மானங்களை ராஷ்டிரபதி தயார் செய்வார் என்று எதிர்பார்த்திருந்தேன். அவர் உடல் நலமின்மையால் அதுவும் இல்லாது போயிற்று. ஆனதால்தான் இத்தீர்மானங்களை நான் மற்றும் நான்கு அன்பர்களுடன் கலந்து தயாரித்தேன். இவை ராஷ்டிரபதிக்குக் காட்டப்பட்டன. அவர் இவற்றைப் பிரேரேபிப்பதில் தமக்கு ஆட்சேபமில்லை என்று கூறினார்" என்று எடுத்துச் சொன்னார்.

1. தேசியக் கோரிக்கை.
2. வெளி நாட்டுக் கொள்கை.
3. எகிப்தியருக்கு நற்செய்தி.
4. சீன தேசத்தாருக்கு அனுதாபம்.
5. இந்திய சமஸ்தானப் பிரச்னை.

இந்த ஐந்துந்தான் நேருஜியால் பிரேரேபிக்கப்பட்டவை. அவை விஷயாலோசனைக் கமிட்டியில் சிறு திருத்தங்களுடன் நிறைவேறின.

அப்புறம் காங்கிரஸுக்குள் நடைபெறும் ஒழுங்குத் தவறுகளைப் போக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகார மளிக்கும் தீர்மானம் பண்டித நேருவின் திருத்தத்துடன் நிறைவேறிற்று.

அப்புறம் அனுதாபத் தீர்மானங்கள்.

இவற்றுடன் பகல் 12 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் முடிந்தது.

மாலை 6-30 மணிக்கு காங்கிரஸ் மகாசபை கூடிற்று. கூடியதும் ஸ்ரீ. எம். எஸ். ஆனே ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதாவது, ராஷ்டிரபதி போஸின் உடல் நிலை கவலைக் கிடமா யிருப்பதால் பண்டித பந்தின் தீர்மானத்தை இங்கு விவாதிக்காமல் அ. இ. கா. கமிட்டிக்கே திரும்பவும் அனுப்பி விட வேண்டும் என்பதுதான் அவர் கொண்டு வந்த தீர் மானம். ராஷ்டிரபதியின் நிலைமையை விளக்கி பண்டித பந் தைத் தீர்மானத்தை வற்புறுத்தாம லிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாயும், அவரும் ஒப்புக்கொண்டிருப்பதாயும், எனவே பிரதிநிதிகளும் அதற்கிணங்கி அத்தீர்மானத்தை அங்கு விவாதிக்காம லிருக்க அனுமதிப்பார்கள் என்று நம்புவ தாயும் கூறினார். தீர்மானம் ஓட்டெடுக்கப்பட்டு நிறை வேறிற்று.

என்ன எண்ணிக்கொண்டார்களோ வங்காளிகள் தெரிய வில்லை. "மகாசபையில் எங்கட்கு அதிகப்படி மெஜாரிட்டி இருப்பதால்தான் இந்தப் பந்த் இதை மறுபடியும் அ. இ. கா. கமிட்டிக்கு அனுப்ப இசைந்து விட்டார்" என்றும் எண்ணிக் கொண்டிருக்கலாம்!

சுமார் இருநூறு அல்லது முந்நூறு பேர்வழிகள் கூடிக் கொண்டனர். 'ஆய்-ஊய்' என்று அபாரமாகக் கத்தத் தொடங்கிவிட்டனர். சகிப்புத் தன்மையோ, ஒழுங்குக்குக் கட் டுப்பட்ட மனப்பான்மையோ தங்களிடம் இல்லை என்பதை விகசிதமாகக் காட்டிக்கொண்டனர். யார் யாரோ என்னவெல்லா மோ சொல்லியும் குழப்பக்காரர்கள் தங்கள் ஒழுங்குத் தவ றான நடத்தையை மாற்றிக் கொண்டார்களில்லை. முடிவில் சரத் சந்திர போஸ் வந்து அமைதி உண்டாக்க முயன்றார். அதுவும் விழலுக் கிறைத்த நீராயிற்று.

நேருஜி எழுந்து வந்தார். "வெட்கம் வெட்கம்!", "பாஸிஸம் ஒழிக!" என்று கூச்சல் போட்டார்கள். ஜவா

ஹருக்கு மனம் கொதித்துப் போயிற்று. வங்காளிகள் யாவரும் எழுந்து தலைவர் மேடையைச் சூழ்ந்துகொண்டு விட்டனர். பிரதிநிதி யல்லாத வங்காளிகளும் சரி நிகர் சமானமாகப் பிரதிநிதிகளுடன் கலந்துகொண்டுவிட்டனர்.

இந்த நிலைமையில் ஸ்ரீ. ஆனே, தமது தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு விடுவதாகவும், அதற்குச் சபை அனுமதி தரும்படியாகவும் கேட்டார். அதன் பிறகும் கூட வங்காளிகள் அமைதியடைய மறுத்துவிட்டார்கள். எப்படியும் காங்கிரஸைக் குழப்பத்தில் முடித்துக் கலைத்துவிட வேண்டுமென்பதுதான் தங்கள் ஒரே விருப்பம் என்பது போல அவர்கள் மிக மிகக் கேவலமாக நடந்துகொண்டது வருந்தத் தக்கது. இதற்கு மேல் நேருஜியால் தாங்க முடியவில்லை. சுமார் முக்கால் மணி நேரமாக "மைக்"கைப் பிடித்தபடியே நின்றிருந்தார். உள்ளம் வெடித்துவிடும் என்றுரைக்கத் தக்க நிலையை அடைந்துவிட்டார். சரத் சந்திரர், "கொஞ்சம் நான் சமாதானப்படுத்திப் பார்க்கின்றேன்" என்று முன் வந்தார்.

"நல்ல காலிக் கூட்டத்தை ஓட்டி வந்திருக்கின்றீர்கள்!" என்று அவரிடம் நேருஜி உள்ளமுடைந்து உரைத்தார். சரத் சந்திரர் வந்து மறுபடி வேண்டிக்கொண்டதன் மேல் ஒரு வாறாக அவர்கள் தத்தம் இடங்கட்குப் போகத் துவங்கினர்.

வங்காளிகள் கலாட்டா சுமார் ஒரு மணி நேரம் நீடித்திருந்தது. ஜவாஹர் பேசத் துவங்கினால், "சரத் சந்திரபோஸுக்கு ஜே!", "சுபாஷ் - கீ - ஜே!" "இன்கிலாப்-ஸிந்தாபாத்!" "ஷேம் - ஷேம்!" என்று கத்த ஆரம்பித்து விடுவார்கள். எத்துணையோ முறை நேருஜி வங்காளிகளை வேண்டிக்கொண்டும், சிறிதும் ஒழுங்காய் நடந்து கொள்ளாததுடன், ஜவாஹரை முஷ்டியை மடித்துக் காட்டி மிரட்டத் தொடங்கினர். சிலர் மண்ணை வாரி இறைக்கவும் செய்தனர். எப்

படியோ ஒரு தினுசாக சரத்போஸ் கேட்டுக்கொண்டபடி வங்காளிகள் தங்கள் தங்கள் இடங்கட்குப் போய் உட்கார்ந்தனர். அப்புறம் ஜவாஹர் உள்ளத்தை உருக்கும்படியான ஒரு பிரசங்கம் செய்தார்:

"இன்று நடந்த இந்தக் கலாட்டாவுக்குப் பெயரா ஜனநாயகம்? இது வடிகட்டிய காலித்தனம். இதுதான் பாஸிஸம். இது சோஷலிஸமோ அல்லது ஜனநாயகமோ அல்லவே அல்ல! இன்று இங்கே நிதர்சனமாகக் காட்டிய தப்பிலித்தனத்தை நேருக்கு நேராகக் கண்ட பிறகு அடுத்த போராட்டத்தை எப்படி வரம்போடு நடத்தப் போகின்றோம் என்று என்னுடல் நடுங்குகின்றதே!" என்பன போன்ற நெஞ்சை ஆழம் பார்க்கும் வாசகங்கள் அவர் பேச்சில் குதித்தன. இறுதியில் ஆனே தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இவ்வளவு குழப்பங்களும் நடந்த இதே கூட்டத்தில் பந்த் தீர்மானத்தை ஓட்டுக்குவிட்டால், ஒழுங்கை நிலை நாட்டவும், சரியாக ஓட்டெடுக்கவும் முடியாதென்று நன்கு விளங்கிற்று. எனவே பந்த் தீர்மானத்தை ஓட்டுக்கு விடுவதற்காக மறுநாள் காலை 9 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டிக் கொட்டகையில் பிரதிநிதிகளை மட்டும் அனுமதித்துக் கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்திருப்பதாக நேருஜி அறிவித்தார். பின்னர் விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேறிய மற்ற தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

தேசீயக் கோரிக்கைத் தீர்மானத்தை ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் பிரேரேபித்துச் சிறிது நேரம் பேசினார். ஆசார்ய நரேந்த்ர தேவ் ஆமோதித்துப் பேசினார். இதை எதிர்த்து சரத் சந்திர போஸ் பேசினார். அப்பொழுது, "இங்

தியாவுக்குச் சுய நிர்ணய உரிமை கொடுக்கின்றீர்களா? மாட்டீர்களா?" என்பதைத் துலாம்பரமாகக் கேட்டு, 6 மாதத்திற்குள் பதில் கொடுக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுப்பதுதான் சரி என்று கூறினர்.

நேருஜி, தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்பொழுது, சரத் சந்திர போஸ் இத்தீர்மானத்தை எதிர்த்தமை தமக்கு ஆச்சரிய மளிப்பதாயும், அவர் கூறுகின்ற வார்த்தைகள் வெறும் ஓட்டை வார்த்தைகள்தான் என்றும், அவை 20 வருடங்கட்கு முன்னிருந்தே இந்தியா உபயோகித்துப் பழக்கப்பட்ட வார்த்தைகளே என்றும், இப்படிப்பட்ட வெற்று வேட்டுகள் இனிப் பயனளிக்கா வென்றும், வாய்தா அளிப்பதென்பது எதிரிகளை ஆயத்தமா யிருக்க வேண்டிக் கொள்வதைத் தவிர வேறொன்றுமே இல்லை யென்றும் ஆணித்தரமான பாஷையில் பேசினர்.

ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் நாராயண் பதில் கூறும்பொழுது, ஸ்ரீ சரத் போஸ் இதை எதிர்ப்பதானது போர் முனையில் பின்னுலிருக்கின்ற தமது படையினரே ஈட்டியால் முதுகில் குத்துவது போன்றிருக்கின்றதென்று கூறினர். ஓரிருவர் நீங்கலாக எல்லாப் பிரதிநிதிகளும் கைதூக்கி இத்தீர்மானத்தைக் குதூகலமாக நிறைவேற்றி வைத்தனர்.

அதற்குப் பின் 'ஊழல் ஒழிப்பு'த் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஸ்ரீபிரகாசர் பிரேரேபிக்க, பண்டித தேக்கிராம் ஷர்மா ஆமோதிக்க, ஏகமனதாக அத்தீர்மானம் நிறைவேறியது.

அதன் பின்னர் அனுதாபத் தீர்மானங்களும், எகிப்தியர்க்கு நல்வரவு கூறும் தீர்மானமும், சீன மக்கட்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும், தலைவர் ஸ்தானத்திலிருந்து பிரேரேபிக்கப்பட்டு ஏக மனதாக நிறைவேறின.

நடுநிசிப் பொழுதுவரை ஆகிவிட்டபடியாலும், வாடையும், பனியும் வாட்டிக்கொண்டிருந்தமையாலும் இவ்வளவுடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடித்துக்கொள்ளப்பட்டு மறு தினத்திற்கு மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

கூட்டத்தை விட்டு வெளியில் வந்த ஒவ்வொரு மனித உள்ளமும் வங்காளிகள் காட்டிய அருவருக்கத் தக்க காட்சியை எண்ணி எண்ணிப் புழுங்கிக்கொண்டிருந்தது. அரசியல் போராட்டம் எவ்வளவு காடு முரடானது என்பதற்கு அன்றைய நிகழ்ச்சி ஒரு சரியான உதாரணமாக இருந்தது என்னலாம்.

இவ்வளவு தடபுடல்களிலும், தமிழ் நாட்டு மக்கள், தமது இடத்தை விட்டு அசையாது, சத்தியக் கோல் தாங்கிய யானைக் கூட்டத்தைப் போல் இருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

மகாநாட்டிலிருந்து வெளியில் வந்ததுமே இடசாரியினரும் வலசாரியினரும் தத்தம் பலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். வலசாரியினருக்குத்தான் அதிகப் பலமிருக்கின்றது என்பது நன்கு வெளியாகிவிட்டது. இந்த நிலையில் பகலில் நடந்த திருவிளையாடல்களால் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் மனமுடைந்து போயிருந்தனர். ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற தலைவர்கள் காந்தீயத்தை எதிர்ப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும் என்ற உண்மையை நன்குணர்ந்து கொண்டனர். எனவே, மறுதினம் நடைபெறும் மகாநாட்டில் பந்த் தீர்மானத்திற்குப் பிரேரேபிக்கப்படும் திருத்தங்கள் எல்லாம் தோற்றுப்போய், பந்தின் அசல் தீர்மானம் ஓட்டுக்கு விடப்படுமானால், அவர்கள் கட்சியினர் அத்தீர்மானத்திற்கு எதிர்த்து ஓட் செய்வதில்லை



ஜவாஹரும் அஸாத்தும் விஷயாலோசனைக் கமிட்டிக்குச் செல்லுகின்றனர்

என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் என்ற வதந்தி நம்பத் தகுந்த இடங்களிலிருந்து வந்தது. எல்லாம் விடிந்தால் தெரிந்து விடுகின்றது. அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டும் ?

*   *   *

12—3—39

12-ந் தேதி காலை 9 மணிக்குப் பிரதிநிதிகளும் பத்திரிகை நிருபர்களும் விஷயாலோசனைக் கமிட்டிக் கொட்டகையில் அமர்ந்திருந்தனர். பார்வையாளர் அனுமதிக்கப்படவில்லை. ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியே கயிறு கட்டி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. வங்காளிகட்கு ஆகக் கடைசியில் இடம் போட்டு, அவர்கட்கும் மற்ற பிரதிநிதிகட்கும் இடையில் ஒரு பாதையும் அமைத்து, அங்கே திறமையான தொண்டர்கள் பலரையும் நிறுத்தி வைத்திருந்தனர். வங்காளிகள் மீறிச் சென்று இங்கும் கலகம் உண்டாக்காமலிருப்பதற்காகவே இத்துணை முன்னேற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று பேசிக்கொண்டனர் மற்றையோர்.

இவ்வளவு முஸ்தீபுகளுடன் மகாநாடு தொடங்கிற்று. பண்டித பந்த் தமது தீர்மானத்தைப் பிரேரேபித்தார். "நேற்றிரவு நான் கண்ட காட்சிகள் என்னை எவ்விதமான பிரசங்கமும் செய்யவொட்டாது தடுத்து நிற்பதால், நான் எதுவும் பேசாமலேயே இத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கின்றேன்" என்று கூறினர். ஸ்ரீ. காட்கில் தீர்மானத்தை ஆமோதித்தார். ஸ்ரீ. நரிமன், சர்தார் சார்துல் சிங், ஸ்ரீ. பாரத்வாஜ், ஸ்ரீ. சித்வா, ஜனுப் நூருத்தீன், ஸ்ரீ. மைத்ரா முதலியவர்கள் சில திருத்தங்களைப் பிரேரேபித்துப் பேசினர்கள்.

ஸ்ரீ. எம். எஸ். ஆனே, ஸ்ரீ. பங்கிம் முக்கர்ஜி, ஸ்ரீ. தத் மஜூம்தார் முதலியோர் பண்டித பந்தின் தீர்மானத்தைப் பலமாக எதிர்த்துப் பேசினர்.

இறுதியில் பண்டித பந்த் எல்லாவற்றிற்கும் பதில் கூறினர்.

அதன் பிறகு மௌலானா அஸாத் ஒவ்வொரு திருத்தமாக ஓட்டுக்கு விட்டுக்கொண்டே வந்தார். ஒவ்வொரு திருத்தமும் "கிர் கயா!" ("விழுந்துவிட்டது") என்ற அஸாத்தின் அபயச் சொல்லோடு ஏகப்பட்ட வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. பண்டித பந்தின் அசல் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. ஏராளமானவர்கள் சாதகமாகவும் சிறுபான்மையோர் பாதகமாகவும் வாக்களித்தனர். எனவே மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, "காந்தி - கீ - ஜே!" என்ற கோஷத்துடன், அசல் தீர்மானம் நிறைவேறிற்று.

பிற்பகல் 3 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் மறுபடி கூடிற்று. மிகக் குறைந்த பார்வையாளர்களே வந்திருந்தனர். அங்கத்தினர்கள் சுமார் 140 பெயர்கள் தான் வந்திருந்தனர்.

முன் தினம் பிரேரேபித்த சமஸ்தானத் தீர்மானத்தில் சில திருத்தங்கள் செய்து அதை டாக்டர் பட்டாபி பிரேரேபித்துச் சிறிது பேசினர். நேருஜி தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினர். ஸ்ரீ. கமலா தேவி சட்டோபாத்யாய ஒரு திருத்தம் கொண்டு வந்தார். திருத்தப் பிரேரேபணை தோற்றுப்போக, அசல் தீர்மானம் நிறைவேறிற்று.

கடல் கடந்த இந்தியர் சம்பந்தமாக ஸ்ரீ. சத்தியமூர்த்தி ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசினர். டாக்டர் சோயித்ராம் அதை ஆமோதித்தார். பர்மா பிரதிநிதியான

ஸ்ரீ. துவாரக பிரசாத் சுக்லா ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அத்திருத்தம் தோற்றுப்போக அசல் தீர்மானம் நிறைவேறிற்று.

பாலஸ்தீன் அராபியர்கட்கு அனுதாபப்படுவதாக ஒரு தீர்மானத்தைத் தலைவர் அஸாத் பிரேரேபித்தார். அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அடுத்த கூட்டத்தை டிசம்பர் கடைசி வாரத்தில் கூட்டவேண்டுமென்று பண்டித நேரு ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். ஸ்ரீ. சத்யமூர்த்தி அதை ஆமோதித்துப் பேசினார். அத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறிற்று.

ஆடிட்டர்கள் நியமிக்கப்பட்டதுடன் கூட்டம் முற்றுப் பெற்றது.

மாலையில் நடந்த மகாநாட்டில் எவ்விதப் பரபரப்புமில்லா திருந்தது. பகல் விஷயாலோசனைக் கமிட்டிக்கு வந்த தீர்மானங்கள் இங்கு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இறுதியில் அடுத்த காங்கிரஸை பீஹாரில் கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீ. சரோஜனி தேவியார், ராஷ்டிரபதி, வரவேற்புக் கமிட்டியினர், தலைவராக இருந்து நடத்தி வைத்த அஸாத், தொண்டர்கள் யாவருக்கும் தமது வந்தனத்தைத் தெரிவித்து, "காங்கிரஸில் பிளவே ஏற்படமாட்டாது!" என்று கூறி, ஒரு இனிமையான சொற்பொழிவை நிகழ்த்தினார்.

பின்னர், வரவேற்புக் கமிட்டித் தலைவர், வந்திருந்த எல்லோருக்கும், தம்முடன் ஒத்துழைத்து இப்பெரிய காரியத்தை நிறைவேற்றி வைத்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

தலைவராக இருந்த மௌலானா அஸாத் முடிவுரையாகப் பேசுகையில், "தேர்ந்தெடுக்கப்பட்ட ராஷ்டிரபதி தலைமை வகிக்க முடியாமற் போனது காங்கிரஸ் வரலாற்றிலேயே இதுதான் முதன் முறை" என்று கூறி, சுபாஷ் சீக்கிரம் குணமடைய பிரார்த்தித்து தம்முடன் ஒத்துழைத்து மகாநாட்டைச் சிறப்புற நடத்தித் தந்த எல்லோருக்கும் நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

வந்தேமாதர கீதம் பாட இந்த 52-வது காங்கிரஸ் மகாநாடு இனிது நிறைவேறிற்று.

இன்று தினம் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் சார்பாக ஸ்ரீ. ஜெயப்ரகாஷ் நாராயண் அடியிற் காணுமாறு அறிவித்தார் :

"சமரசத்திற்கு நாங்கள் எவ்வளவோ முயற்சித்தோம். ஆனால் தோல்விதான் கண்ட பலன். தோழர் சுபாஷ் நிலைமையை விளக்கி அறிக்கை ஒன்று வெளியிடுவதாகக் கூறியிருந்தார். ஆனால் அவர் விடுத்த அறிக்கையோ திருப்தியளிப்பதாக இல்லை. காந்திஜியின் விருப்பப்படி அடுத்த காரியக் கமிட்டியை அமைத்தாலல்லது காங்கிரஸில் ஒற்றுமை நிலவாது என்று நாங்கள் எண்ணுகின்றோம்."



சேத் கோவிந்ததாஸ்

வரவேற்புக் கமிட்டித் தலைவர்

சேத் கோவிந்ததாஸ் பிரசங்கம்

சென்ற வருஷம் குஜராத்தில் உங்களுக்குக் கிடைத்த வரவேற்புக்குப் பிறகு, குன்றுகளுக்கும், காடுகளுக்கும் மத்தியில், மகாகோசலத்தில் இன்று நாங்கள் அளிக்கும் வரவேற்பு உங்களுக்கு ரொம்ப சாதாரணமானதாகத் தோன்றும். எங்களுடைய வரவேற்பு சாமான்யமானதா யிருந்தாலும், காங்கிரஸிடம் எங்களுக்குள்ள பக்தி மலைபோல் உறுதியானது.

பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் ஸ்ரீராமன் இங்கு வந்தபோது, எங்களுடைய மலை வகுப்பினர்களைச் சேர்ந்த சபரி அளித்த காட்டுக் கனி வர்க்கங்களை அவர் எவ்வளவு அன்புடன் ஏற்றுக்கொண்டாரோ, அதைப் போலவே, எங்களுடைய எளிய வரவேற்பையும் நீங்கள் மனப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும்.

காங்கிரஸ் கூடும் இந்த இடத்திற்கு ‘விஷ்ணுதத் நகர்’ என்று பெயர் கொடுத்திருக்கிறோம். காலஞ் சென்ற பண்டித விஷ்ணுதத் சுக்லாதான் எங்கள் மாகாணத்தின் முதல் தலைவர். நாகபுரி காங்கிரஸ் நடந்தபோதுதான் அவர் காலமானார். அவருடைய ஞாபகார்த்தமாகவே, காங்கிரஸ் நகருக்கு விஷ்ணுதத் நகர் என்ற பெயரைக் கொடுத்தோம்.

காங்கிரஸ் பக்தியில் மகாகோசலம் எப்போதுமே முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், நாகபுரி கொடிப் போராட்டம் முதலிய எல்லா இயக்கங்களிலும் பெருமைப் படக்கூடிய விதத்தில் மகாகோசலம் தன் கடமையைச் செய்திருக்கிறது.

பார்லிமென்டரி வேலைமுறைகளைக் கவனித்தாலும், எந்தத் தேர்தலிலும் காங்கிரஸைத்தான் மகாகோசலம் ஆதரித்து வந்திருக்கிறது. காங்கிரஸைத் தவிர, வேறெந்த ஸ்தாபனத்தையும் பற்றி நாங்கள் மனத்தினல்கூட நினைத்ததில்லை. மகாகோசலத்தின் வெற்றிக்கு அதுதான் காரணம்.

இதர துறைகளில் எங்களிடம் எவ்வளவு குறைகள் இருந்தாலும்கூட, காங்கிரஸ் பக்தியில் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்களல்லர்.

சர்வ தேச நிலைமை

ஹரிபுரம் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டித் தலைவரைப் போல் இதனுடன் என் பிரசங்கத்தை முடித்து விடுவதென்றே நினைத்தேன். ஆனல் சென்ற சில வாரங்களில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களையும், சர்வதேச நிலைமையையும் முன்னிட்டு, மேற்கொண்டு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

உலகம் பூராவிலும் இப்போது ஒரு நெருக்கடி குமுறிக் கொண்டிருக்கிறது. எந்த நிமிஷத்திலும் ஒரு உலக யுத்தம் ஏற்படலாமென்று தோன்றுகிறது. அந்தச் சமயத்தில், நாம் விரும்பினல்கூட, பூராவும் ஒதுங்கி நிற்க முடியாது. அத்தகைய யுத்தம் ஏற்பட்டால் இந்தியாவின் நிலைமை என்ன? இதற்கு நாம் ஒரு புறம். இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றொரு புறம், ஜெர்மனி, இத்தாலி இன்னொரு புறம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் நிலைமை என்னவென்பதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

அபிசீனியாவை இத்தாலி பிடித்துக்கொண்ட பிறகு, நமக்கும் புதிய இத்தாலிய சாம்ராஜ்யத்திற்கு மிடையே இருப்பது அராபிக் கடல் மாத்திரம்தான்.

இத்தாலிக்கும், ஜெர்மனிக்கும் இப்போது ஸ்பெயினில் இடம் கிடைத்துவிட்டது. ஆகவே, மத்தியதரக் கடல் பாதை முன்போல் பிரிட்டனுக்கு அவ்வளவு சுலபமா யிராது. எப் போதாவது யுத்தம் எற்பட்டால், உடனே துருப்புக்களெல் லாம் ஐரோப்பாவுக்கு அனுப்பப்படுகின்றன. வெளியிலிருந்து யாராவது படையெடுத்து வந்தால், இந்தியாவின் தற்காப் புக்கு ஒன்றுமில்லை.

இந்தியாவுக்கு ஆபத்து ஜப்பான்தான்

இப்போது ஜப்பானிலிருந்துதான் நமக்கு ஆபத்து. சென்ற யுத்தத்தின் போது ஜப்பான் ஒதுங்கி யிருந்தது. ஆனால், இப்போது ஜப்பானின் மனப்பான்மை மாறிவிட்ட தாகத் தோன்றுகிறது.

ஜப்பானிடமுள்ள பயத்தினால்தான், செக்கோஸ்லவே கியா பலி கொடுக்கப்பட்டதென்று கூடச் சில அமெரிக்கப் பத் திரிகைகள் சொல்லியிருக்கின்றன. செக்கோஸ்லவேகிய பிரச் னையில் இங்கிலாந்து ஜெர்மனிமீது போர் தொடுத்தால்,உடனே ஆஸ்திரேலியா மீதும், இந்தியா மீதும் ஜப்பான் படை யெடுக்குமென்று பிரிட்டிஷ் ஒற்றர்கள் ஸ்ரீ. சேம்பர்லேனுக் குத் தகவல் கொடுத்தார்களென்றும், இதற்குப் பயந்துதான் அவர் முனிச்சுக்கு ஓடி ஹிட்லருக்குப் பணிந்தாரென்றும் சொல்லப்படுகிறது.

மத்தியதரக் கடல் அநேகமாக ஒரு இத்தாலிய எரியாய் விட்டது. இனி எதாவது யுத்தம் நேர்ந்தால், அமெரிக்கா இங்கிலாந்துடன் சேர்ந்தால்தான், பிரிட்டன் தன்னுடைய நாடுகளைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அமெரிக்காவைத் தங்கள் பக்கமாகச் சேர்ப்பதற்குத்தான் இப்போது முயற்சி கள் செய்யப்படுகின்றன.

இந்திய ஜனத்தொகைப் பிரச்னே

இந்த நிலேமையில், பிரிட்டன் எவ்வளவு தூரம் இந்தியாவைக் காப்பாற்ற முடியு மென்பது சந்தேகமாகவே இருக்கிறது. ஜன நெருக்கத்தைக் குறைப்பதற்கு மேற்கொண்டு நாடுகள் வேண்டியிருப்பதால், ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளும் யுத்த மோகத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப் பார்க்கும்போது இந்தியாவின் தேவைதான் அதிகமானது. இந்திய ஜனத்தொகை வரவர அதிகமாய்க்கொண்டே வருகிறது. ஆனல், இதர நாடுகளில் இந்தியர்களுக்கு இடம் கிடைப்பதில்லே. சென்ற ஒரு நூற்றுண்டாக, இந்தியர்கள் வெளிநாடுகளில் குடியேறி, தங்களுடைய நெற்றி வியர்வை நிலத்தில் விழ வேலே செய்து, அந் நாடுகளேச் சுபிட்சமாக்கி யிருக்கிருர்கள். ஆனல், இந்த இடங்களில்கூட இந்தியர்களுக்கு நிம்மதி கிடையாது.

ஜான்ஸிபார் கிராம்புப் பிரச்னே இப்போதுதான் தீர்ந்தது. கெனியா மேட்டுப் பிரதேசங்களில் இந்தியர்களுக்கு இடமில்லே. இலங்கை, பிஜி, மலேயா, பிரிட்டிஷ் கயாணு ஆகிய இடங்களில் குடியேறியுள்ளவர்கள்கூட சதா உபத்திரவங்களே அனுபவிக்க நேருகிறது.

இந்தியாவின் இன்றைத் தேவை என்ன?

எங்கு திரும்பினுலும், கஷ்டங்கள்தான் நம்முன் நிற்கின்றன. தேசபக்தியும், அரசியல் சாமர்த்தியமும், திறமையான தலேவருந்தான் இப்போது நம்முடைய அத்தியாவசியமான தேவைகள்.

நம்முடைய சரித்திரத்திலேயே நெருக்கடியான இந்தச் சமயத்தில், நம்மிடையே சச்சரவுகள் தோன்ற ஆரம்பித்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது. பாதி ஆற்றைக் கடந்த



இந்தியாவின் ஸ்டாலின்

பிறகு, குதிரையை மாற்ற வேண்டுமென்று நாம் நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்.

விடுதலைப் போராட்டத்தை நடத்துவதற்காகவே காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வப்போது சர்வாதிகாரிகளின் தலைமையின் கீழ் நாம் போராட்டத்தை நடத்தத் தயங்கியதில்லை. ஒரு இயக்கத்திற்கும், மற்றொரு இயக்கத்திற்கு மிடையேயுள்ள சாதாரணக் காலங்களில்கூட நாம் பூர்ணமாக ஜனநாயக முறைகளைப் பின்பற்ற முடிந்ததில்லை.

இங்கிலாந்துதான் ஜனநாயகம் பிறந்த இடமென்று சொல்லப்படுகிறது. அங்குகூட, யுத்த காலங்களில், சர்வாதிகார முறையை அடிப்படையாகக் கொண்டு, கூட்டு மந்திரி சபை அமைக்கப்படுகிறது.

இந்தியாவின் ஸ்டாலின் மகாத்மா காந்தி

ரஷ்யப் பொதுவுடைமைக் கக்ஷி, ஜெர்மன் நாஜிக் கக்ஷி, இத்தாலிய பாஸிஸ்ட் கக்ஷி ஆகியவைகளின் கொள்கை பலாத்காரம் என்றாலும், அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்ட இந்திய காங்கிரஸ் மகாசபையை மேற்சொன்ன கக்ஷிகளுடன் ஒப்பிடலாம். இத்தாலியி லிருப்பவர்க ளெல்லோரும் பாஸிஸ்டுகளல்லர்; ஜெர்மனியி லிருப்பவர்கள் யாவரும் நாஜிகளல்லர்; ரஷ்யர்கள் எல்லோரும் பொதுவுடைமைக்காரர்களல்லர். இருந்தாலும், அநேகமாக ரஷ்யர்கள், ஜெர்மானியர்கள், இத்தாலியர்கள் யாவருக்கும் தங்கள் கக்ஷிகளில் நம்பிக்கை இருக்கிறது.

இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் நாலணா சந்தா செலுத்திய காங்கிரஸ்காரர்களல்லரென்றாலும், எல்லா இந்தியர்களும் காங்கிரஸை ஆதரிக்கிறார்கள்.

பாஸிஸ்டுகளிடையே முஸொலீனியும், நாஜிகளிடையே ஹிட்லரும், பொதுவுடைமைக்காரர்களிடையே ஸ்டாலினும் என்ன ஸ்தானத்தை வகிக்கிறார்களோ, அதே ஸ்தானத்தை காங்கிரஸ்காரர்களிடையே மகாத்மா காந்தி வகிக்கிறார். இன்றைய காங்கிரஸ் அவருடைய சிருஷ்டிதான்.

மகாத்மா காந்தி காங்கிரஸ் சர்வாதிகாரி

காங்கிரஸின் லக்ஷியம், அதை அடையும் மார்க்கம், சத்யம், அஹிம்ஸை கொள்கைகள் யாவும் அவரால்தான் விதிக்கப்பட்டன. சென்ற இருபது வருஷங்களாக நடந்த விடுதலைப் போராட்டங்களெல்லாம் அவரால்தான் நடத்தப்பட்டன. அவருடைய உத்தரவுப்படிதான் நிறுத்தப்பட்டன.

காங்கிரஸின் அமைப்பு விதிகளில் காந்திஜிக்கென்று தனியாக ஒரு ஸ்தானம் இல்லையென்பது உண்மையே. ஆனால் காந்திஜி யாரை விரும்புகிறாரோ, அவரைத்தான் அக்ராசனராகத் தேர்ந்தெடுப்பதென்று இதுவரையில் ஒரு வழக்கம் இருக்கிறதென்பதை யார் மறுக்க முடியும்? காந்திஜியால் அங்கீகரிக்கப் படுபவர்களைத்தான் காரியக் கமிட்டியில் சேர்த்துக்கொள்வதென்ற சம்பிரதாயம் இருந்து வருவதை யார் மறுக்க முடியும்?

சுருங்கச் சொன்னால், மகாத்மா காந்திதான் காங்கிரஸ்; காங்கிரஸுக்கு அவர்தான் சர்வாதிகாரி.

காந்திஜி காங்கிரஸைவிடக் கூடப் பெரியவரென்று, சமீபத்தில் ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு, தம் ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தின் போது, ஒரு பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்.

எல்லோருடைய நம்பிக்கையையும் பெற்றால்கூட, இந்தியாவின் தவப் புதல்வனாகிய காந்திஜியின் நம்பிக்கையைப்

பெற முடியாவிட்டால் அது கொடுமையான துர்ப்பாக்கியமாயிருக்கும் என்று காங்கிரஸ் அக்ராசனர் சொன்னது முற்றிலும் சரியே.

பழைய தலைவர்களிடம் நம்பிக்கை

இந்த வருஷக் காங்கிரஸ் அக்ராசனர் தேர்தலின் முடிவு தம்முடைய தோல்வி என்று காந்திஜி சொல்லிவிட்டார்.

அவசியமானால், பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆறு மாதம் நோட்டீஸ் கொடுத்துவிட்டு, உடனே சட்ட மறுப்பு ஆரம்பிப்பதுதான் புதிய வேலைத் திட்டம் என்று சொல்லப்படுகிறது. திரை மறைவில் ஏதாவது ரகசியங்கள் நடைபெற்றிருந்தால், அவை எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குத் தெரிந்த வரையில், பெடரேஷனை ஆதரிப்பதாக, மகாத்மா காந்தியோ, அவருடைய சகபாடிகளோ இதுவரையில் சொன்னதில்லை. இதை ஒப்புக்கொள்வதானால், நம் முன்னிருக்கும் பிரச்னை ரொம்ப சுலபமானதாய்விடும்.

பெடரேஷனை எதிர்த்துப் போராடப் போகிறோமென்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விஷயம். எப்போது, எந்த முறையில், போராட்டத்தை ஆரம்பிப்பது என்றுதான் முடிவு செய்யவேண்டும்.

போராட்டம் அஹிம்ஸா முறைப்படியே நடத்தப்படுமென்று நம்புகிறேன். மகாத்மா காந்திதான் அஹிம்ஸையை நமக்கு உபதேசம் செய்த ஆசாரியன். அஹிம்ஸைப் போராட்டத்தின் முறைகளெல்லாம் அவருக்குத்தான் நன்றாகத் தெரியும். ஆகவே, எப்போது, எப்படிப் புதிய போராட்டத்தை ஆரம்பிப்பது என்ற விவரங்களை யெல்லாம் பழைய ஆசாரியனிடமே விட்டுவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது இயற்கையே.



எல்லை காந்தி ஒரு தமிழ் இளைஞருக்குத்
தம் கையெழுத்தைப் போட்டுக் கொடுக்கிறார்

பார்க்கப்போனால், போராட்டம் ஏற்கனவேயே ஆரம்பமாய்விட்டது. இந்திய சமஸ்தானங்களையும் மாகாணங்களையும் சேர்த்துத்தான் பெடரேஷனை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். பெரும்பாலான மாகாணங்கள் இப்போது காங்கிரஸ் நிர்வாகத்தி லிருக்கின்றன. இதர மாகாணங்களிலும் காங்கிரஸ் நிர்வாகம் ஏற்படவேண்டு மென்றே அக்ராசனர் விரும்புகிறா ரென்று நினைக்கிறேன்.

ஏற்கனவே, மகாத்மா காந்தி சமஸ்தானங்களில் போரை ஆரம்பித்துவிட்டார். இதன் பலனாக, அன்னை கஸ்தூரிபாய், ஸ்ரீமதி மணிபென் பட்டேல், தேசபக்த சேத் ஜம்னுலால் பஜாஜ் ஆகியவர்கள் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டார்கள்.

இதர மாகாணங்களிலும் காங்கிரஸ் நிர்வாகம் ஏற்பட்டு, தன் பலம் பூராவையும் சமஸ்தானப் போராட்டத்திற்காகக் காங்கிரஸ் உபயோகித்தால், அதனால் தேசத்திற்கு நன்மைதான்.

உற்சாகம் மட்டும் இருந்தால் போதாது

தகுந்த தருணம் வந்தவுடன், மகாத்மா காந்தியே நமது போராட்டத்துக்குப் புது வழி காட்டுவா ரென்பதைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. இன்று என்ன நடக்கவேண்டு மென்று காங்கிரஸ் அக்ராசனர் விரும்புகிறாரோ, அது நாளைக்கு நேரப் போவது நிச்சயம்.

உடனே போராட்டம் வேண்டுமென்று விரும்புபவர்களின் உற்சாகத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால், அரசியலில் உற்சாகம் மட்டும் இருந்தால் போதாது. நம்முடைய தலைவரிடம் நம்பிக்கை வேண்டும்; கட்டுப்பாடு வேண்டும். இவைதான் முக்கியம்.

மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ், சென்ற இருபது வருஷங்களாக நம் நாடு அடைந்திருக்கும் பலத்திற்கு நமது அரசியல் சரித்திரத்திலேயே உதாரணம் இல்லை.

தேர்ச்சி யடைந்த ஒரு தளகர்த்தனைப் போல், அவர் பல முறை நம்மைப் போர்க்களத்துக்குப் போகும்படி உத்தரவிட்டிருக்கிறார். அவசியமான போது நமது முன்னேற்றத்தின் வேகத்தைத் தளர்த்தி யிருக்கிறார். சில சமயங்களில் 'நில்லுங்கள்' என்றும் உத்தரவிட்டிருக்கிறார். அவருடைய தலைமையின் கீழ் இதுவரையில் நமக்குத் தடுமாற்றம் ஏற்பட்டதில்லை. இதுவரையில் நாம் பின்பற்றி வந்த பாதையிலிருந்து இப்போது நாம் ஏன் மாறவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை.

இரும்பினும் கடூரமானவர்; மலரினும் மென்மையானவர்.


தீரமும், வீரமும் இல்லாத ராஜதந்திரம் வெறும் கோழைத்தனம்; ராஜதந்திரம் இல்லாத வீரம் முரட்டுத்தனத்தைச் சேர்ந்தது என்று காளிதாஸ் மகாகவி எழுதியிருக்கிறார். இந்த இரண்டு குணங்களுமே காந்திஜியிடம் இருக்கின்றன வென்று நான் கருதுகிறேன்.

காந்திஜியின் குரல் மிருதுவான, ஆனால், இரும்புத்தன்மை வாய்ந்த குரல் என்று சமீபத்தில் ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு சொன்னார். ஸ்ரீ ராமசந்திரனைப் பற்றி பவபூதி, "வைரத்தினும் கடூரம், ஆனால் மலரினும் மென்மையுண்டு" என்று பாடியிருப்பது இதனால் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நேருஜியும் பவபூதியும் கூறியுள்ள இந்த வார்த்தைகளில் நாம் மகாத்மாஜியின் உண்மையான சித்திரத்தைக் காண்கின்றோம். நமது சுதந்திரத்தின் பகைவர்கள் மலருக்குள் மறைந்திருக்கும் இரும்பைக் கண்டு உணருகின்றனர்; துரதிர்ஷ்ட வசமாக

நாமே சில சமயங்களில் அது பலவீனம் என்று தவறாக எண்ணிவிடுகிறோம்.

தேசீய நிலையும், சர்வதேச நிலையும் நெருக்கடியா யிருக்கும் இவ்வேளையில், திரிபுரியில் கூடியுள்ள இந்திய மாதாவின் ஒவ்வொரு புதல்வனுக்கும் புதல்விக்கும் சரியான ஒரு முடிவு செய்வதற்கு வேண்டிய நற்புத்தியை அளிக்கும்படி நான் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

மகா கோசல மாகாண மனைத்தின் சார்பாகவும் சகோதர சகோதரிகளாகிய தங்களுக்கு மீண்டும் நல்வரவு கூறுகிறேன். எங்கள் ஏற்பாடுகளிலுள்ள குறைகளையும், என் பிரசங்கத்திற் காணப்படும் குறைகளையும் பொறுத்தருள வேண்டுகிறேன்.



ராஷ்டிரபதி சுபாஷ் பாபு

ராஷ்டிரபதி
பாபு சுபாஷ் சந்திர போஸ் பிரசங்கம்

தோழர் வரவேற்புக் கமிட்டித் தலைவரே, பிரதிநிதி சகோதர, சகோதரிகளே!

இந்திய தேசிய மகாசபையின் அக்கிராசன பீடத்துக்கு என்னை மீண்டும் தேர்ந்தெடுத்ததன் மூலம் எனக்கு நீங்கள் அளித்த பெரிய கவுரவத்துக்கு என் ஹிருதய பூர்வமாக நன்றி செலுத்துகிறேன். இங்கு திரிபுரியில் நீங்கள் எனக்களித்த உபசார வரவேற்புக்கும் நன்றி செலுத்துகிறேன். என் வேண்டுகோளுக் கிணங்கி, நீங்கள் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் வழக்கமாகச் செய்யப்படும் சில ஆடம்பரங்களை நிறுத்திக் கொண்டீர்கள் என்பது உண்மையே. ஆனால், அவ்வாறு செய்தது உங்கள் வரவேற்பின் அன்பின் அளவைச் சிறிதும் குறைத்துவிடவில்லை. சில ஆடம்பரங்கள் குறைக்கப்பட்டது பற்றி யாரும் வருத்தங்கொள்ள மாட்டார்களென்றே நான் நம்புகிறேன்.

ராஜ்கோட்டில் மகாத்மாவின் வெற்றி

நண்பர்களே! நான் வேறு விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கு முன், ராஜ்கோட்டில் மகாத்மா காந்தி பெற்ற வெற்றியையும், அதனால் அவரது உபவாச விரதம் பூர்த்தியானதையும்பற்றி நமது சந்தோஷத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்நாடு முழுதும் இன்று மிகுந்த கவலையினின்று விடுபட்டுப் பெரும் ஆனந்தத்தை அடைந்திருக்கிறது.

அசாதாரணமான சம்பவங்கள்

நண்பர்களே! இவ் வருஷமானது, ஒரு விதத்திலல்ல, பலவிதங்களில், அசாதாரணமாகவும் நூதனமாகவு மிருக்கும் போல் தோன்றுகிறது. இவ்வருஷம் அக்கிராசனர் தேர்தல் எப்போதும்போல சர்வ சாதாரணமான முறையில் நடை பெறவில்லை. தேர்தலுக்குப் பிறகு பரபரப்பு மிகுந்த பல சம்ப வங்கள் விளைந்தன. முடிவில் காரியக் கமிட்டியிலிருந்து சர்தார் பட்டேல், மௌலானா அபுல்கலாம் அஸாத், பாபு ராஜேந் திரப் பிரசாத் முதலியவர்கள் தலைமையில் 12 பேர்கள் ராஜீ நாமாச் செய்தனர். காரியக் கமிட்டியில் கண்ணியமிக்க மற் றொரு அங்கத்தினரான ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு உத் யோக தோரணையில் ராஜீநாமா செய்யாவிட்டாலும், ஒரு அறிக்கை வெளியிட்டதால், அதனால் பலர் அவரும் ராஜீநாமா செய்துவிட்டதாகவே நினைக்கும்படி ஏற்பட்டது. திரிபுரி காங்கிரஸ் கூடுவதற்கு முந்திய சில தினங்களில், ராஜ்கோட் டில் நிகழ்ந்த சம்பவங்கள் மகாத்மாவைச் சாகுமளவும் உப வாசமிருப்பதென்ற விரதத்தை மேற்கொள்ளும்படி செய் தன. இவ்வளவு மட்டுமா? அக்ராசனராகத் திரிபுரியில் வந்து இறங்கினவர் ஒரு நோயாளியாக வந்து இறங்கினார். இவ்வளவையும் பார்க்கும்போது அக்ராசனப் பிரசங்க விஷ யத்திலும் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சுருக்கமாக இருப் பது பொருத்தமானதே யாகும்.

நண்பர்களே! எகிப்திலிருந்து வபத் கட்சியின் தூது கோஷ்டியினர் இங்கு இந்திய தேசீய காங்கிரஸின் விருந்தாளி களாக நம்மிடையே வந்து சேர்ந்திருக்கிறார்களென்பது உங்க ளுக்குத் தெரியும். அவர்களை இங்கு வரவேற்பதில் என்னுடன் நீங்கள் கலந்து கொள்வீர்களாக. அவர்கள் நமது அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியாவுக்கு யாத்திரை செய்ததுபற்றி

நாம் மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம். எகிப்தில் ஏற்பட்ட சில அரசியல் நிலைமையின் தேவைகள் காரணமாக, வபத் கட்சியின் தலைவர் முஸ்தாபா நஹாஸ் பாஷா இங்கு வர முடியாது போயிற்று. அது பற்றித்தான் நாம் வருத்தமடைகிறோம். வபத் கட்சித் தலைவரையும், அக்கட்சியைச் சேர்ந்தவர்களான பல பிரமுகர்களையும் நேரில் அறியும் பாக்கியம் எனக்கிருப்பதால், எனக்கு அவர்களது விஜயம் அதிக மகிழ்ச்சியளிக்கிறது. நம் நாட்டார் சார்பாக மீண்டுமொரு முறை அவர்களுக்கு நான் நல்வரவு கூறுகிறேன்.

வெளி நாட்டு நிலைமை

1938 பிப்ரவரியில் நாம் ஹரிபுரம் காங்கிரஸில் கூடின பிறகு, சர்வதேசீய விவகாரங்களில் மிகவும் அர்த்த புஷ்டியுள்ள பல முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது 1938 செப்டம்பரில் ஏற்பட்ட மூனிச் ஒப்பந்தம். உண்மையில் அதன் கருத்து பிரிட்டிஷ் பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள் நாஜி ஜெர்மனியிடம் பரிபூர்ண சரணாகதி யடைந்தன என்பதேயாம். அதன் பயனாக, ஒரு குண்டு கூடச் சுடவேண்டிய அவசியமின்றி, ஜெர்மனி ஐரோப்பா முழுவதிலும் தன் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் ஸ்தாபித்துவிட்டது. இன்னும் வெகு சமீபத்தில் ஸ்பெயினில் குடியரசு சர்க்கார் சிதறுண்டு போனது, பாஸிஸ்ட் இத்தாலி, நாஜி ஜெர்மனி இரண்டின் கியாதியையும் பலத்தையும் அதிகப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஜனநாயக நாடுகள் என்று சொல்லிக்கொள்ளப்படும் பிரான்ஸும், பிரிட்டனும், இத்தாலி, ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு ஸோவியத் ரஷ்யாவை ஐரோப்பிய அரசியலிலிருந்து தற்காலம் ஒதுக்கித் தள்ளிவிட்டன. ஆனால், இதெல்லாம் எத்தனை நாளுக்கு? இவ்

வாறு ரஷ்யாவின் கண்ணியத்தைக் குறைத்ததால் பிரிட்டனும் பிரான்ஸும் பெற்ற பயனென்ன ?

ஏகாதிபத்தியத்தின் பலக் குறைவு

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சர்வ தேசீய விவகாரங்களில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளால், பிரிட்டிஷ் ஏகாதிபத்யமும் பிரெஞ்சு ஏகாதிபத்யமும் பலத்திலும் கியாதியிலும் மிகவும் சோர்வுற்றிருக்கின்றன என்பது சந்தேகமற்ற உண்மை.

இறுதிக் கடிதம்

வெளிநாட்டு நிலைமையை அவ்வளவில் விட்டுவிட்டு, இந்தியாவிலுள்ள விவகாரங்களைப்பற்றிப் பேசுகிறேன். என் உடல் நலம் குன்றியிருப்பதால், ஒரு சில முக்கியமான பிரச்னைகளைப்பற்றி மட்டும் பேசுகிறேன்.

முதன் முதலாக, நான் இப்போது சிறிது காலமாக என் மனத்தில் தோன்றியுள்ள ஒரு உணர்ச்சியைத் தெளிவாகவும் சந்தேகமின்றியும் சொல்லிவிடவேண்டும். அதாவது, நாம் நமது சுயராஜ்யப் பிரச்னையைக் கிளப்பி, நமது தேசீயக் கோரிக்கையைப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஒரு இறுதிக் கடித ரூபததில் சமர்ப்பிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. நாமாகப் போராட்டத்தைக் கிளப்பாமல், சும்மாயிருந்து, சமஷ்டித் திட்டம் நம்மீது புகுத்தப்படும் போது பார்த்துக் கொள்ளுவோம் என்று பேசாதிருக்கக்கூடிய காலம் போய் நெடுங் காலம் ஆகிவிட்டது.

ஐரோப்பாவில் சமாதானமான நிலைமை ஏற்படும் வரையில் சமஷ்டியைப் புகுத்தவேண்டாம் என்று பிரிட்டன் தன் சௌகரியத்தை யுத்தேசித்துத் தந்திரமாக சமஷ்டிப் பிரச்னையை அப்படியே நழுவ விட்டால், நாம் என்ன செய்வது என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. சமஷ்டித் திட்டம்

எப்போது நம் மீது திணிக்கப்படப் போகிறது என்பது பிரச்னையல்ல.

நான்கு வல்லரசு ஒப்பந்த மூலமோ, அல்லது வேறு வழிகளாலோ, ஐரோப்பாவில் ஸ்திரமான சமாதானத்தை ஏற்படுத்தி விட்டால், பிறகு பிரிட்டன் ஏகாதிபத்தியக் கொள்கையில் அதிக வேகமும், பலமும், ஆக்கிரமிப்புத் தன்மையும் ஏற்படுத்தும். இப்போது பிரிட்டன் பாலஸ்தீன் பிரச்னையில் யூதர்களுக்கெதிராக அராபியரைச் சாந்தப் படுத்தும் முறையில் சமரசக் கொள்கையைக் கடைப்பிடிக்கிற தென்றால், அதற்குக் காரணம் சர்வதேச நிலைமையில் பிரிட்டன் தனக்குப் பலம் குறைந்திருப்பதாக நினைப்பதுதான்.

வாய்தா ஏற்படுத்த வேண்டும்

ஆகையால், நாம் நமது தேசீயக் கோரிக்கையை ஒரு இறுதிக் கடித ரூபத்தில் பிரிட்டனிடம் சமர்ப்பித்து, ஒரு வாய்தாவும் குறிப்பிடவேண்டும். அந்த வாய்தாவுக்குள்ளாக, நமது கோரிக்கைக்குப் பதிலளிக்க வேண்டுமென்றும் அதில் சொல்லவேண்டும். அந்த வாய்தாவுக்குள் பதில் கிடைக்க வில்லையானால், அல்லது கிடைக்கும் பதில் திருப்தி யளிக்க வில்லையானால், நாம் நமது தேசீயக் கோரிக்கை நிறை வேறுவதற்கு நம்மிடமுள்ள சகல பலத்தையும் நிர்ப்பந்தத் தையும் பிரயோகிக்கத் தலைப்பட வேண்டும்.

பொதுஜனச் சட்ட மறுப்பு

நம்மிடம் இன்றுள்ள பலம் என்பது சத்யாக்ரஹம் என்று சொல்லப்படும் பொதுஜனச் சட்ட மறுப்பு. நீடித்து நடக்கக்கூடிய அகில இந்தியச் சட்டமறுப்பை இப்போது பிரிட்டிஷ் சர்க்கார் சமாளிப்பதற்குப் போதுமான பலத்துடன் இருக்கவில்லை.

இதுவே தருணம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைப் பெரும் போரில் தாக்குவதற்குக் காலம் பக்குவமாகவில்லை என்ற நம்பிக்கைக் குறைவுள்ளவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள்.

ஆனால், காரண காரிய ஆராய்ச்சி மனப்பான்மையுடன் நான் கவனிக்கும்போது, இவ்வாறு நம்பிக்கை குன்றியிருப்பதற்கு எவ்விதக் காரணமும் சிறிதளவு மிருப்பதாக நான் காணவில்லை. எட்டு மாகாணங்களில் காங்கிரசுக்கு சர்க்கார் ஆதிக்கம் ஏற்பட்டு, நமது தேசிய ஸ்தாபனத்தின் பலமும் கியாதியும் உயர்ந்துவிட்டது. பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் பொதுஜன இயக்கம் வெகுதூரம் முன்னேறியிருக்கிறது. அவ்வளவோடல்ல; இந்திய சமஸ்தானங்களில் என்றுமிருந்திராத அவ்வளவு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. நமது தேசிய சரித்திரத்தில், சுயராஜ்யத்தை நோக்கி, இறுதியாக லக்ஷியத்தைக் கைப்பற்ற முன்னேறுவதற்கு இதைவிட எந்த நல்ல சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது? சர்வதேச நிலைமையும் நமக்கு இவ்வளவு அநுகூலமாக இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைவிட நல்ல சந்தர்ப்பம் எப்போது கிடைக்கப் போகிறது? வெறும் வேதாந்தமாகப் பேசாமல், காரிய புத்தியுடனேயே சொல்லுகிறேன்: இப்போதுள்ள நிலைமையின் எல்லா அம்சங்களும் நமக்கு அநுகூலமாக இருக்கின்றன; ஆகையால் வெற்றி நிச்சயமென்று எவ்வளவு நம்பிக்கை கொண்டாலும் தகும்.

நாம் மட்டும் நமது வித்யாசங்களை மறந்தொழித்து, எல்லோருடைய சக்திகளையும் ஒன்றாகச் சேகரித்து, தேசியப் போராட்டத்தில் முழு ஆர்வத்துடன் அந்தச் சக்தியைப் பிரயோகிப்போமாயின், இப்போதுள்ள அனுகூலங்களைப் பூர்ணமாகப் பயன்படுத்த முடியும். இதுபோன்ற அரிய தரு

ணத்தை விட்டுவிட்டால், பிறகு மறு தருணம் ஒரு தேசத்தின் வாழ்வில் கிடைப்பது துர்லபம்.

ஹரிபுரா தீர்மானம் மாற வேண்டும்

இந்தியா முழுவதிலும், இந்திய சமஸ்தானங்களிலும் ஏற்பட்டுள்ள விழிப்பைப்பற்றி ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறேன். சமஸ்தானப் பிரச்னை விஷயத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதுபற்றி ஹரிபுராவில் நிர்ணயித்த கொள்கையை நாம் மாற்றவேண்டுமென்ற நிச்சயமான முடிவுக்கு நான் வந்திருக்கிறேன், அந்தத் தீர்மானம் சமஸ்தானங்களில் சில காரியங்கள் காங்கிரசின் பேரால் நடக்கக் கூடாதென்று தடை விதித்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். சமஸ்தானங்களில் பார்லிமெண்டரி வேலையோ, வேறு நேர்முகப் போராட்டமோ காங்கிரஸின் பேரால் நடத்தக் கூடாது என்று அத்தீர்மானம் கட்டுப்படுத்துகிறது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு பல காரியங்கள் நடந்திருக்கின்றன.

இன்று பிரிட்டிஷ் ஆதிபத்ய அதிகாரம், பல இடங்களில் சமஸ்தான அதிகாரிகளுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்த நிலைமையில், காங்கிரஸ்காரர்களாகிய நாம், சமஸ்தானத்திலுள்ள ஜனங்களுடன் நெருங்கி ஒத்துழைக்க வேண்டாமா?

இன்று நமது கடமையென்ன வென்பதுபற்றி என் மனத்தில் சந்தேகமேயில்லை. சமஸ்தானங்களில் விழிப்பேற்பட்டிருக்கிறது என்பது மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதோடு, சமஸ்தானங்களில் பிரஜா உரிமைக்காகவும், பொறுப்பாட்சிக்காகவும் வழிகாட்டி நடத்திவைக்கும் வேலை

யைக் காரியக் கமிட்டியாலேயே சரியாக நிர்ணயிக்கப்பட்ட முறைகளுடன் கட்டுப்பாடாக நடத்த வேண்டும்.

இதுவரைக்கும் அங்கு செய்யப்பட்டுள்ள வேலை யெல்லாம், சில்லறை சில்லறையாகவே, தனித் தனிச் சிறு காரியங்களுக்காகவே செய்யப்பட்டிருக்கிறது. ஒரு திட்டமோ, முறையோ இல்லாமலேதான் காரியம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், இப்போது காரியக் கமிட்டி நேரில் பொறுப் பேற்று, அதை நிர்ணயமான திட்டங்களுடன் நடத்த வேண்டிய சமயம் வந்து விட்டது. அவசியமானால் இதற்கென்று தனியாக ஒரு சப் கமிட்டியும் நியமிக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் காந்திஜியின் புத்திமதியையும், ஒத்துழைப்பையும், அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் ஒத்துழைப்பையும் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்தாபன பலம்

ஸ்வராஜ்யப் பாதையில் கடைசியாக லட்சியத்தைக் கைப்பற்றும் ஒரு முற்போக்கு இப்போது நடப்பது நல்லது என்று நான் கூறினேன். அதற்குப் போதிய தயாரிப்புச் செய்வது அவசியம்.

முதன் முதலாக, பெரிதும் அதிகார ஆசை காரணமாக நம்மிடை யேதாவது ஊழல்கள் ஏற்பட்டிருக்குமாயின், அவ்வூழல்களை நிர்த்தாக்ஷண்யமாக நீக்கிவிட வேண்டும்.

அடுத்தபடியாக எல்லா ஏகாதிபத்ய எதிர்ப்பு ஸ்தாபனங்களுடனும், முக்கியமாக கிஸான் இயக்கத்துடனும், தொழிற் சங்க இயக்கத்துடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் வேலை செய்யவேண்டும். தேசத்தில் தீவிரப் போக்குள்ள எல்லா

இயக்கங்களும் நெருங்கின ஒத்துழைப்புடனும், இணக்கத்துடனும் வேலை செய்ய வேண்டும். ஏகாதிபத்ய எதிர்ப்பு ஸ்தாபனங்கள் எல்லாவற்றின் முயற்சிகளும், ஒரே இறுதிப் போராட்டமாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைத் தாக்குவதில் ஒன்றுகக் கூடவேண்டும்.

இருள் மேகங்கள்

நண்பர்களே! இன்று காங்கிரஸுக்குள் ஆகாயம் இருள் மேகங்கள் படர்ந்ததாக இருக்கிறது; வேற்றுமைகள் தோன்றியிருக்கின்றன. ஆகையால் நம் நண்பர்கள் பலர் மனச் சோர்வும், மனவாட்டமும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் எப்போதும் நல்லதே வரும் என்று நம்பும் சுபாவமுள்ளவன். இப்போது நீங்கள் காணும் காரிருள் மேகங்கள் ஸ்திரமானவை யல்ல. என் நாட்டு மக்களின் தேச பக்தியில் நான் நம்பிக்கை வைக்கிறேன். வெகு விரைவில் நாம் நமது சங்கடங்களைக் கடந்து சென்று, நம்மிடையே பூர்ண ஒற்றுமையை மீண்டும் பெறுவோம்.

முன்னும் இப்படி நடந்ததுண்டு


சற்றேறக்குறைய இதே போன்ற நிலைமை 1923-ல் கயா காங்கிரஸின்போது இருந்தது. பிறகு நமது மதிப்புக்குரியவர்களான காலஞ்சென்ற மோதிலால் நேருவும், சித்தரஞ்சன் தாஸும் ஸ்வராஜ்யக் கட்சியை ஆரம்பித்தபோதும் இதேபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டதுண்டு.

எனது குருநாதனது (சித்தரஞ்சன் தாஸ்) ஆத்மாவும் மோதிலாலின் ஆத்மாவும், மற்ற பெரியார்களின் ஆத்மாவும் இப்போதேற்பட்டுள்ள நெருக்கடியில் நமக்கு நல்ல பாதையைக் காட்டட்டும். நம்முடனிருக்கும் மகாத்மா காந்தியும்

நமக்கு வழி காட்டி உதவிசெய்து, காங்கிரஸானது இப்போதுள்ள சிக்கலினின்று வெளியேற உதவி செய்வாராக. இதுவே என் பிரார்த்தனை.

—வந்தேமாதரம்.





நமது படகோட்டி

பண்டித பந்த் தீர்மானத்தின் வாசகம்

"மகாத்மா காந்தி யோசனைப்படி சென்ற வருஷங்களில் காங்கிரஸ் எந்த அடிப்படையான கொள்கைகளின்படி திட்டங்களை வகுத்துவந்ததோ அந்தக் கொள்கைகளில் தனக்குப் பரிபூர்ண நம்பிக்கை யிருப்பதாக இந்தக் காங்கிரஸ் தெரிவித்துக் கொள்கிறது. இந்தக் கொள்கைகளில் யாதொரு மாறுதலும் இருக்கக்கூடாது. இந்தக் கொள்கைகளின்படியே எதிர்கால காங்கிரஸ் திட்டம் வகுக்கப்படவேண்டு மென்பதே இக் காங்கிரஸின் திட்டமான அபிப்பிராயம்.

"சென்ற வருஷம் வேலை செய்த காரியக் கமிட்டியிடம் நம்பிக்கையிருப்பதை இக்காங்கிரஸ் தெரிவித்துக் கொண்டு, அக்கமிட்டி மெம்பர்களில் யார் மீதேனும் ஏதாவது அபவாதம் கூறப்பட்டிருப்பதைக் குறித்துத் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. வருகிற வருஷத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்படக்கூடியதை உத்தேசித்தும், அப்பேர்ப்பட்ட நெருக்கடியில் மகாத்மா காந்தி ஒருவரால் தான் காங்கிரஸையும் தேசத்தையும் வெற்றிப் பாதையில் நடத்திச் செல்ல முடியுமென்பதை உத்தேசித்தும், காங்கிரஸ் காரியக் கமிட்டி காந்திஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக இருக்கவேண்டுமென இக் காங்கிரஸ் கருதுகிறது. எனவே, வருகிற வருஷத்துக் காரியக் கமிட்டியில் காந்திஜியின் விருப்பப்படியே மெம்பர்களை நியமிக்குமாறு இந்தக் காங்கிரஸ் அக்ராசனரைக் கேட்டுக்கொள்கிறது."



பண்டித கோவிந்த வல்லப பந்த்

ஸ்ரீ பந்த் பிரசங்கங்கள்

திரிபுரியில், மகாத்மாஜியிடம் நம்பிக்கை வைப்பதாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை யொட்டி, ஸ்ரீ. கோவிந்த வல்லப பந்த், முதலில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், இரண்டாவது விஷயாலோசனைக் கமிட்டியிலும், மூன்றாவது மகா சபையிலும் செய்த சொற்பொழிவுகளின் சாரங்களை முறையாகக் கீழே கொடுத்திருக்கிறோம் :

1. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் செய்த பிரசங்கம்

இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க அ. இ. கா. கமிட்டியிலுள்ள மெம்பர்களில் பெரும்பாலோரின் ஆதரவு எனக்குக் கிடைத்து விட்டது. சபை நடவடிக்கையை நடத்தும் முறையில் மெஜாரிட்டி மெம்பர்களின் அபிப்பிராயம்தான் பிரதானமாகக் கருதப்படுகிறது. இது ஒவ்வொரு ஸ்தாபனமும் பின்பற்றி வரும் வழக்கமாகும்.

குழப்பமான நிலைமையைச் சரிப்படுத்த வேண்டும், நடவடிக்கைகள் சமாதான நிலைமையில் நடைபெறுவதற்கு எவை அவசியமோ அவைகள் இருக்கவேண்டும் என்றே விரும்புகிறேன். இது ஒரு சட்ட நுணுக்கப் பிரச்னையல்ல. நீங்கள் ஒரு நெருக்கடியான நிலைமையி லிருக்கிறீர்கள். பெரிய பிரச்னைகளையெல்லாம் நாம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. இந்த விஷயத்தை நாம் மேலெழுந்த வாரியாகக் கவனிக்கவேண்டாம். முக்கியப் பிரச்னைகளில் நாம் முழு கவனத்தையும் செலுத்தி, சுதந்திரப் பாதையில் முன்னேற எப்பேர்ப்பட்ட நிலைமை அவசியமோ அதை நிலைநாட்ட நாம் அனைவரும் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைப்போமாக.

அனுமதிக்கக் கூடாதெனச் சட்டம் கூறவில்லை

நான் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை அனுமதிக்கக் கூடாதெனச் சட்டத்தில் ஒன்றுமில்லை. அக்ராசனரே, நீங்

கள் நியாயப்படி இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்க முடியாது. போதிய காலத்திற்குள் நோட்டீஸ் கொடுக்கப் பட்ட தீர்மானத்தை அ. இ. கா. கமிட்டியில் விவாதிக்க அனுமதிக்கக்கூடாது என்று சட்டத்தில் இருக்கிறதா? இத்தீர்மானத்தை ஆதரிக்க இங்கு மிகப் பெரிய மெஜாரிடி யிருக்கிறது. சட்ட நுணுக்கக் காரணங்களுக்காக இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டால், துரதிருஷ்டமான, என், பரிதாபகரமான விஷயங்கள் நடக்கு மென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேசப்பான்மையான உறவு மீண்டும் நிலவ வேண்டும், தப்பபிப்பிராயங்களைப் போக்கவேண்டும். தப்பபிப்பிராயங்கள் இருக்க ஆதாரமே கிடையாதென்று நம்புகிறேன். நடவடிக்கைகளைச் சமாதான வழியில் கவனிக்க வேண்டும்; நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்னைகளை நிதானமாகக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் பேரிலேயே இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தேன். சட்ட நுணுக்கப் பிரச்னை என்று தட்டுத் தடுமாறி விழாமல், நிஷ்கல்பமான மனோபாவத்தில் இந்தப் பிரச்னையைக் கவனிக்குமாறு, அக்ராசனரே, உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க எனக்கு உரிமை உண்டு என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ii. விஷயாலோசனைக் கமிட்டியில் செய்த இரண்டு பிரசங்கங்கள்

மகாத்மா காந்தி நிச்சயித்த வேலைத் திட்டத்தையே தேசமானது கடந்த 20 வருஷ காலமாக அநுசரித்து வருகிறது. அந்த வேலைத் திட்டத்தைத் தவிர தேசத்தின் முன் வேறு வேலைத் திட்டமில்லை. மகாத்மாவின் வேலைத் திட்டத்தின்

பலன்களை நாம் நேரில் கண்டிருக்கிறோம். அந்த ஸ்பஷ்டமான வழியை விட்டு அந்தகாரத்தில் குதிப்பது முட்டாள்தனமாகும். கடந்த 20 வருஷ காலமாகத் தேசத்திற்கு வழி காட்டி வந்த மகாத்மா காந்தி, இதர மாபெரும் தலைவர்கள், இவர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நமக்கு இல்லாவிட்டால் காங்கிரஸின் மதிப்பு என்னவாகும்?

அத் தலைவர்களின் ஆதரவு இல்லாமல் எவரும், உங்கள் வார்த்தைக்கோ, என் வார்த்தைக்கோ செவிசாய்க்க மாட்டார்.

இன்று நான் பிரேரேபிக்கும் தீர்மானம் விசேஷ முறையில் முக்கியமானதாகும்; அடுத்த வருஷக் காங்கிரசின் கொள்கையும் வேலைத்திட்டமும் இத்தீர்மானத்தையே பொறுத்திருக்கின்றன. தகராறு எதையும் கிளப்ப நான் விரும்பவில்லை.

இத்தீர்மானத்தை நான் பிரேரேபிக்கும் நோக்கம் என்னவென்றால், நாம் பூரண சுயேச்சை லட்சியத்தை அடைய மிகத் துரிதமான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே.

தலைவர் தேர்தலால் சந்தேகம்

நீண்ட காலமாகக் காரியக் கமிட்டியின் சம்மதத்தோடே தலைவர் தெரிந்தெடுக்கப்படுவது வழக்கம். கடந்த வருஷம் ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸ் அம்முறையிலேயே தெரிந்தெடுக்கப்பட்டார். இந்த வருஷம் மட்டும் போட்டி நடந்தது. அது அசாதாரணமானதல்ல. எப்படியிருந்த போதிலும், ஸ்ரீ. போஸ் தெரிந்தெடுக்கப்பட்டதால், காங்கிரஸின் கொள்கையில் மாறுதல் ஏற்படுமென்ற உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் காந்திஜியின் யோசனைப்படி அநுசரிக்கப்பட்ட முறைகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்

பட்டதுபோல் ஸ்ரீ. போஸின் தேர்தலைப் பற்றி வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் அவ்வித அர்த்தத்திற்கு இடமில்லை. ஆனால் தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டு விட்டன. அவைகளை நிவிர்த்தி செய்யவேண்டுவது அவசியமாகிறது.

காந்திஜியிடம் நமது பூர்ண நம்பிக்கையை அறிவிக்க வேண்டுவது அவசியமாக விருக்கிறது. மகாத்மா சமர்ப்பித்துள்ள வேலைத் திட்டத்தைத தவிர தேசத்தின் முன் வேறு எந்த வேலைத் திட்டமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இத் தீர்மானத்தின் மூலம் நாம் மகாத்மாவின் வேலைத் திட்டத்தை அநுசரிக்க நமது விருப்பத்தையே தெரிவிக்கிறோம். ஸ்ரீ. போஸுக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு ஸ்ரீ. போஸுக்கும் காரியக் கமிட்டிக்கும் அபிப்பிராய பேத மிருப்பதாகத் தெரியவே தெரியாது. அவர்களுக்குள் கடந்த 12 மாத காலமாக அன்யோன்ய சம்பந்தம் இருந்து வந்த தால் அவர்களிடையே முக்கிய அபிப்பிராய பேதம் எதுவு மிருக்கிறதென்று எவரும் கனவு காண முடியாது. தலைவர் தேர்தலில் போட்டி போடுவதன் மூலம் தேச நன்மைக்கு அதிக சேவை புரியலாம் என்று ஸ்ரீ. போஸ் கருதினார்.

தேசத்தின் முன்பு இரு முக்கியப் பிரச்னைகளை இருக்கின்றன. ஒரு பிரச்னை இந்திய சமஸ்தானங்களைப் பற்றியதாகும்; மற்றொரு பிரச்னை சமஷ்டி சம்பந்தப்பட்டதாகும். ராஜ்கோட் விவகாரத்தில் மகாத்மா காந்தியும் சர்தார் பட்டேலும் அடைந்த வெற்றி மிக்க உற்சாகத்தை அளிப்பதுடன் அத்துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தி விட்டது.

ஸ்ரீ. போஸுக்கே நன்மை

காந்திஜியும் காரியக் கமிட்டியின் பழைய மெம்பர்களும் இல்லாவிட்டால், சுதந்திரப் போராட்டத்தை மிகப் பலவீனப்

படுத்துவதாக முடியும். இத் தீர்மானத்தை நிறைவேற்று வதன் மூலம் நீங்கள் ஸ்ரீ. போஸின் கையைப் பலப் படுத்து வீர்கள். இதன் மூலம் அநுபவமும் முதுமையும் வாய்ந்த சுதந்திர வீரர்கள் ஸ்ரீ. போஸுக்கு உதவியாக இருப்பார்கள்.

சமஷ்டியைப் பொறுத்தவரையில் காங்கிரஸில் அபிப்பி ராய பேதமே இல்லை. உலக நிலைமை ஒவ்வொரு நிமிஷமும் மாறி வருகிறது. ஸ்பெயின், சீனு, செக்கோ, அபிசீனியா போன்ற தேசங்களின் கதியை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஐரோப்பாவில் மற்றொரு யுத்தம் ஏற்படும் போலிருக்கிறது. அந்த யுத்தம் உலகத்தின் படத்தையே மாற்றி விடும். நமது தேசத்திற்குப் புதுப் பிரச்னைகள் ஏற்படும்.

பாபு ராஜேந்திர பிரசாத், மௌலான அபுல் கலாம் அஸாத் போன்ற பழைய தலைவர்களின் சேவைகளை நாம் இழந்து விடுவதா? பண்டித ஜவாஹர்லால் நேருவைப் பற்றி நான் என்ன சொல்லட்டும்? மகாத்மா காந்திக்குப் பிறகு பண்டித நேருவே இத்தேசத்தின் தலைவராகப்போகிறார். இந்தப் பழந் தலைவர்களின் சேவைகளை நாம் இழந்துவிடுவது புத்திசாலித்தனமாகுமா? நாம் அவ்விதத் தவறு செய்வோ மாளுல், புதிய காரியக் கமிட்டியின் மதிப்புக்குப் பங்கம் விளையும். நாம் சுதந்திரப் போராட்டத்தை விடாமல் நடத்தி வெற்றிபெற விரும்புகிறோம்.

இந்தப் பழைய தலைவர்களிடம் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்; ஏனென்றால் இந்தத் தலைவர்களிடமே தேசத் திற்கு நம்பிக்கை இருக்கிறது.

நமது வாலிபர்கள் மிக்க ஆர்வம் கொண்டிருக்கலாம்; பொறுமை இல்லாமலு மிருக்கலாம். ஆனல் அவர்கள், நமது முதிய தலைவர்களிடம் நம்பிக்கை கொண்டிருப்பதே நமக்குப்

பலமாகுமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அத்தலைவர்களின் ஆதரவு இல்லாமல் சுபாஷ் பாபுவால் காங்கிரஸ் நிர்வாக பாரத்தைத் தாங்க முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா ?

ஸ்ரீ. போஸ் படுத்த படுக்கையிலிருப்பதையும், அதே கோலத்தில் கூட்ட நடவடிக்கைகளை நடத்துவதையும் காண எனக்குத் துக்கமாக இருக்கிறது. தேச பக்தியாலும் பொறுப்பு உணர்ச்சியாலுமே அவர் இவ்விதத் தேக நிலையிலும் இங்கு பிரசன்னமா யிருக்கிறார். இதற்காக அவரைப் பாராட்டவேண்டும். அவர் தலைமையில் தேசம் வெற்றியடைய வேண்டுமென்பதே நமது இஷ்டம். ஆனால், அவர், பழைய அநுபவசாலிகளான தலைவர்களின் யோசனையைக் கேட்டு நடந்து, அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும். இத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம், அத்தலைவர்களை மீண்டும் ஒருங்கு சேர்த்து, இதுவரையில் செய்ததுபோல் தேசத்திற்கு வழி காட்டும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கிறோம்.

தலைவர் தேர்தல் தகராறின்போது சில விஷயங்கள் கூறப்பட்டன. அவ்விஷயங்களைக் கூறாமலே தவிர்த்திருக்கலாம். ஆனால், ஸ்ரீ. போஸ் தமது சகாக்கள்மீது பழி கூற விரும்பினாரென்று நான் நினைக்கவில்லை. தேசத்தில் பொதுவாக நம்பப்படுவது எதுவோ அதையே கூறினதாக ஸ்ரீ. போஸ் தமது அறிக்கையில் விளக்கிக் கூறிவிட்டார். தமது சகாக்கள் (காரியக் கமிட்டி மெம்பர்கள்) காங்கிரஸின் கொள்கைகளுக்கு விரோதமாக எதுவும் செய்கிறார்களென்பது ஸ்ரீ. போஸின் அபிப்பிராயமே அல்ல.

மகாத்மாவிடம் நம்பிக்கை அவசியம்

மகாத்மாஜியிடம் நமது நம்பிக்கை ஸ்திரமாக இருக்கிற தென்பதை நாம் உலகிற்குத் தெரிவிக்க வேண்டும். அவர் வழி காட்டுவதைப் பின்பற்றுமல் நாம் முன்னேற முடியாது.

காந்திஜி காங்கிரஸிற்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் வாங்குவாரேயானுல், தேசமானது உங்களிடமோ என்னிடமோ நம்பிக்கை கொள்ளாது. மகாத்மாவிடம் நம்பிக்கை யில்லை யென்று நினைப்பதும் பாப காரியமாகு மென்பது எனது அபிப்பிராயம்.

கடந்த சில வாரங்களில் நடந்த சம்பவங்களிலிருந்து நாம் திட்டமாக நமது கருத்தையும் நோக்கத்தையும் தெரிவிக்க வேண்டியது அவசியமாகி விட்டது. நமது வேலைத் திட்டமும் கொள்கையும் மாறவில்லை யென்பதையும் தெரிவிக்க வேண்டும். கடந்த சில வார சம்பவங்களால் பழைய தலைவர்கள் மனம் புண்பட்டிருக்கலாம். தேசீய ஒற்றுமையை முன்னிட்டும், தாய்நாட்டின் நன்மையை முன்னிட்டும், சமீபத்தில் நடந்ததை மறந்து விடும்படி நான் அத்தலைவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தியின் யோசனைப்படி காரியக் கமிட்டி யொன்றை அமைக்கும்படி ஸ்ரீ. போஸைக் கேட்டுக்கொள்வது காங்கிரஸ் அமைப்புத் திட்டத்தை மாற்றுவதாகு மென்று கூறப்பட்டது. நான் அப்படி நினைக்கவில்லை. வேண்டுகோள் விடுப்பது காங்கிரஸ் அமைப்புத் திட்டத்தை மாற்றுவதாகாது. காரியக் கமிட்டியை நியமிக்கும் அதிகாரம் தலைவரைச் சேர்ந்திருக்கும் வரையில், வேண்டுகோள் விடுப்பது விதிக்குப் புறம்பானதே அல்ல. இத்தீர்மானத்தின் அர்த்தம் என்னவென்றுல், நமக்கு காந்திஜியின் தலைமையும்,



திரிபுரியில் நர்மதை நதிப் பாலத்தில் தொண்டர்கள் அணிவகுப்பு

காங்கிரஸ் தலைவர்களின் தலைமையும் வேண்டு மென்பதே. அவர்கள் தலைமை தாங்குவதால் ஸ்ரீ. போஸின் பாரம் குறையும். இத் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கோருகிறேன்.

* * *

காங்கிரஸிலுள்ள எல்லாப் பிரிவினரிடையேயும் ஒத்துழைப்பு ஏற்படும்படி செய்வதற்காகவும், ஒத்துழைப்புக்கு இடையூறுகளை நீக்குவதற்காகவுமே நான் இத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை அந்த நோக்கத்துடன் கவனியாமல், விவாதத்தின்போது சிலர் அனுவசியமான மனக்கசப்பைப் புகுத்தினது வருந்தத்தக்கதாகும்.

உத்தேசிக்கப்பட்ட லக்ஷியத்தை அடைவதற்குக் குறைந்த பக்ஷம் எது தேவையோ, அதுதான் தீர்மானத்திலிருக்கிறது. ஆகையால், இதற்குப் பிரேரேபிக்கப்பட்ட எந்தத் திருத்தத்தையும் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக்கொள்வது உசிதமாகு மென்று எனக்குத் தோன்றவில்லை.

இத்தீர்மானம் அக்கிராசனர்மீது கண்டனத் தீர்மானமாகுமென்று மதிப்பது தவறாகும். ஒரு கண்டனப் பிரேரேபணையை மறைமுகமாகக் கொண்டு வருவது அற்பத்தனமாகும். நான் அவ்வாறு செய்யமாட்டேன்.

காங்கிரசை விட்டு வெளியே ஒதுங்கி நிற்பது என்று காந்திஜி தீர்மானித்திருக்கிறார். அவரது புத்திமதியும், யோசனையும் நமக்கு வேண்டும். அது கிடைப்பதற்கு ஒரு மார்க்கமாகவே நான் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். சென்ற பல வருஷங்களில் என்ன சுற்றுணர்ச்சி

இருந்ததோ, அதேமாதிரி சுற்றுணர்ச்சியை மீண்டும் ஏற்படுத்தவே இத்தீர்மானம் வந்திருக்கிறது.

இங்கு பேசினவர்கள் எல்லோரும், பழைய காரியக் கமிட்டியிடம் தங்களுக்கு நம்பிக்கை யிருப்பதாகக் கூறியது கண்டு நான் சந்தோஷ மடைகிறேன். அவர்கள் தம் மனத்திலுள்ளதையே உண்மையுடன் கூறியிருப்பார்களாயின், காரியக் கமிட்டி மெம்பர்கள் மீது அபவாதங்கள் போடப்பட்டதுபற்றி வருத்தம் தெரிவிப்பதற்கு அவர்கள் ஏன் தயங்க வேண்டும் என்பது எனக்குப் புரியவே இல்லை. அபவாதங்கள் கூறப்பட்டன என்பதில் சந்தேகமே யில்லை. அபவாதம் கூறினவர் யார் என்று தீர்மானம் சொல்லவில்லை. ஆனால், ஸ்ரீ. போஸ் வெளியிட்ட ஒரு அறிக்கையில், "தேசத்தில் பொதுப்படையாக அப்படி யொரு அபிப்பிராயம் (அதாவது சிலர் சமஷ்டிக்காகப் பேரம் செய்கிறார்களென்ற ஒரு அபிப்பிராயம்) இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறிருக்கையில் நாம் எப்படிப் பேசாதிருக்க முடியும்?" என்று கூறியிருக்கிறார்.

தாய் நாட்டுக்குச் சேவை செய்து, தலை ரோம மெல்லாம் நரைத்துப் போனவர்களான உங்கள் தலைவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் பரிசு இதுதானா! அவர்கள் கேவலமாகவும், அகாரணமாகவும், தாறுமாறாகவும் தாக்கப்படும்போது, அவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறா?

அபவாதங்கள் ஆதாரமற்றவை; நாம் அவற்றை நம்பவில்லை. நம் தலைவர்கள் மீது இவ்வாறு அபவாதம் கூறப்படுவதை நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று சொல்லுவது நமது கடமையாகும்.



திரிபுரியில் ராஜாஜி தேநீர் அருந்தல்

போஸின் சமாதானம் திருப்தியளிப்பதல்ல

நேற்று சுபாஷ் பாபு இங்கு சில சமாதான வார்த்தைகள் கூறினார். நிலைமையைத் தெளிவுபடுத்த அது போதாது. பொது வாழ்விலுள்ளவர்கள், ஜனங்கள் என்ன சொல்கிறார்களென்பதை அலக்ஷியமாக விட்டுவிட முடியாது என்று ஸ்ரீ. போஸே அவருடைய ஓர் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். அதே காரணத்தைத்தான் நானும் சொல்லுகிறேன். சமஷ்டிப் பிரச்னையைப்பற்றி காரியக் கமிட்டி மெம்பர்கள் என்ன மனப்பான்மையுட னிருந்தார்க ளென்பதில் பொது ஜனங்களிடையே ஏதோ ஓர் அபிப்பிராயம் இருந்ததாகச் சொல்லப்படுகிறதே, அவ்வாறு சொல்லப்படுவதுபற்றி நாம் கவனம் செலுத்தாம லிருக்க முடியாது.

அந்த நிலைமையைத் தெளிவுபடுத்தினாலொழிய, அந்தத் தலைவர்களின் ஒத்துழைப்பு கிடையாது; காங்கிரஸ் இது வரை அநுபவித்துவந்த செல்வாக்கும், கியாதியும் இனியுமிருக்கும்படி செய்வதும் முடியாது. இவ்வாறு நிலைமை தெளிவுபடுத்தப்படாவிடில் இனிமேல் முன்னேறவும் முடியாது.

எல்லாக் கோஷ்டியும் ஐக்கியமாக இருக்கவேண்டும் என்பதை நான் பூர்ணமாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், தலைவர்கள் மீது அபாண்டமான அபவாதம் கூறப்பட்டது பற்றி வருத்தம் தெரிவிப்பது ஐக்கியத்துக்கு எவ்வாறு இடையூறாகு மென்பது எனக்குப் புலப்படவில்லை. இது ஏதோ சிலரது தனி விவகார மென்றும், தலைவர்கள் தம்மிடையே தீர்த்துக்கொள்ள வேண்டியது என்றும் கூறுவது உண்மைக்கு மாறானது. பொது ஜனங்களிடையேயுள்ள ஒரு அபிப்பிராயம் என்று திரும்பத் திரும்பப் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அதுபற்றி காங்கிரஸ்

தீர்ப்புச் சொல்லி, தலைவர்களிடம் நம்பிக்கை யிருப்பதைச் சொல்ல வேண்டும்.

வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையுடன் இத்தீர்மானம் வந்திருப்பதாகச் சொல்லுவது முற்றிலும் தவறு. அந்தத் தலைவர்களை வலதுசாரி யென்று சொன்னாலும், இடதுசாரி யென்று சொன்னாலும், தேச சேவையிலும், தியாகத்திலும், ஒழுக்கத்திலும், நேர்மையிலும் அவர்கள் யாருக்கும் இளைத்த வர்களல்லர். காங்கிரஸில் அவர்களுடைய ஸ்தானத்தை யாரும் அசைக்கத் திருப்ப முடியாது. இந்தத் தீர்மானம் ஏன் வருகிற தென்றால், அவர்களுடைய ஒத்துழைப்பும் காந்திஜி யின் புத்திமதியும் காங்கிரஸுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஸர்தார் பட்டேல், "போஸ் தேர்ந்தெடுக்கப்படுவது தேசத்துக்குத் தீங்கு என்று சொன்னாரே!" என்று சிலர் கேட்கிறார்கள். ஸர்தார் பட்டேல் அதை ஒரு பகிரங்க அறிக் கையில் சொல்லவில்லை. அந்த வாசகம் ஸர்தார் பட்டேல் சரத் போஸுக்கு அனுப்பிய தந்தியிலுள்ள வாக்கியம். அந்தத் தந்தியை ஸர்தார் பட்டேல் தாமாகப் பிரசுரிக்க வில்லை. சரத் போஸின் வேண்டுகோளுக்கிணங்கியே பிரசுரித் தார். அதை ஸர்தார் பிரசுரிக்க மறுத்தால் அவர் மீது பழி சொல்லப்பட்டிருக்கும்.

ஒரு குறிப்பிட்ட காரியம் தேசத்தின் க்ஷேம லாபத் துக்குத் தீங்காகும் என்று அபிப்பிராயப்பட யாருக்கும் உரிமையுண்டு. ஸர்தார் பட்டேலின் தந்தியில் போஸின் யோக்கியத்தன்மையைப்பற்றி ஒரு அழுக்கும் கற்பிக்கப்பட வில்லை.

ஸ்ரீ. சுபாஷ் போஸ் அக்கிராசனராயிருப்பது எங்களுக் குப் பிடிக்கவில்லை யென்று சொல்லுவது சரியல்ல. தேர்த

லுக்குமுன் எங்கள் அபிப்பிராயம் என்னவாக இருந்தாலும், தேர்தல் முடிவான பிறகு அவர் அக்கிராசனப் பதவியி லிருக்க வேண்டுமென்றே நாங்கள் விரும்புகிறோம்.

அதோடு, ஸ்ரீ. போஸ் தேசத்துக்கும் பயன்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். காந்திஜியின் ஒத் துழைப்பை அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்தால்தான் அது சாத்தியமாகும். காந்திஜியின் ஒத்துழைப்பு இத்தனை காலம் காங்கிரசுக்கு இருந்துவந்தது போலவே இன்னும் இருந்து வரவேண்டு மென்பதே எங்கள் விருப்பம்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் காந்தி ஜியை மீண்டும் காங்கிரசுக்குள் கொண்டுவர முடியுமென்று நாங்கள் நம்புகிறோம்.

iii. காங்கிரஸ் மகாசபையில் செய்த பிரசங்கம்

அக்ராசனருக்கு உடம்பு சரியாயில்லாத இந்தச் சமயத் தில் அவரைப் பற்றிய விஷயங்களை நான் பேசவேண்டியிருப் பதற்கு வருந்துகிறேன். ஆனால், இது நாஞகச் செய்து கொண்ட காரியமில்லை. விவாதத்தில் சொல்லப்பட்ட சில விஷயங்களுக்குப் பதிலளித்துத்தா னுகவேண்டும். நேற்று இரவு சொன்னது இன்று காலை மறந்து விடுகிறது.

இது நம்பிக்கையில்லாத் தீர்மானமல்ல. அப்படி விரும்பி யிருந்தால், ஒளிவு மறைவு இல்லாமல் நேரடியாக நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்போம்.

மெஜாரிடி பிரதிநிதிகள் ஸ்ரீ. சுபாஷ் போஸை அக்ரா சனராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை நிராகரிக்க நாங்கள் விரும்பவில்லை. அவர் அக்ராசனராயிருக்க வேண்டுமென்றே விரும்புகிறோம். அதே சமயத்தில் காங்

கிரசில் ஒற்றுமையை ஏற்படுத்தி ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவும் விரும்புகிறோம்.

'டாக்டர் பட்டாபியின் தோல்வி என்னுடைய தோல்வி' என்று மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார். மெஜாரிடி டெலிகேட்டுகள் தம்முடைய கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் ஆதரிக்கவில்லை யென்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, எப்போதும் போல், ஸ்ரீ. சுபாஷ் போஸுக்கு காந்திஜியின் ஆலோசனை கிடைக்காதென்பது தெளிவாகிறது.

ஒற்றுமைதான் நோக்கம்

காங்கிரஸ் வேலை நடக்கவேண்டுமானால், மகாத்மா காந்தியின் ஆலோசனையும், ராஜீநாமா செய்துள்ள நமது பழைய நம்பிக்கையான தலைவர்களின் தீவிர ஒத்துழைப்பும் அவசியமென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஆனால், இப்போதைய நிலைமையில் அது சாத்திய மில்லை. இது சாத்தியமாகும்படி செய்வதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். அதுதான் இத் தீர்மானத்தின் நோக்கம். வேறொன்றுமில்லை.

டெலிகேட்டுகள் ஸ்ரீ. போசுக்கு வோட் செய்தபோது காந்திஜிக்கு விரோதமாக வோட் செய்வதாக நினைக்காமலிருந் திருக்கலாம்.

இங்கு பேசியவர்களில் ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் யாவரும் காந்திஜியின் தலைமை அவசியமென்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் பழைய காரியக் கமிட்டி மெம்பர்களின் ஒத்துழைப்பு அவசிய மென்பதையும் ஒப்புக் கொண் டிருக்கிறார்கள்.

காந்திஜி இல்லாமல் விடுதலை இல்லை

மகாத்மா காந்தியின் ஆதரவு உங்களுக்கு வேண்டுமா? அப்படியானால், ஸ்ரீ. போஸுக்கு வோட்டுச் செய்தது, காந்திஜிக்கு விரோதமாக வோட் செய்ததாக அர்த்தமில்லை யென்று தெரிவிக்க வேண்டும்.

காந்திஜி இஷ்டப்படி காரியக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்பதைச் சிலர் ஆக்ஷேபித்தார்கள். அப்படியானால், காந்திஜியின் தலைமை வேண்டுமென்று நீங்கள் சொல்லுவதெல்லாம் வாயளவில்தானா?

வரப்போகும் நெருக்கடியில் மகாத்மா காந்தி ஒருவர்தான் நமக்குத் தலைமை வகித்து நடத்திச் செல்ல முடியும். அவ்வளவு பொறுப்பையும் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியுடையவர் அவர் ஒருவர்தான் என்பதை யார் மறக்க முடியும்? அவருடைய தலைமை இல்லாமல் சுதந்தரம் பெற முடியுமென்று நினைக்கிறீர்களா?

காரியக் கமிட்டி அமைப்பு சம்பந்தமாக அவருக்கு அதிகாரம் கொடுக்காவிட்டால், எப்படி அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும்?

அவருடைய ஆலோசனை நமக்கு வேண்டுமானால், இந்தத் தீர்மானத்தின் மூலம் அவரைக் கட்டாயப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாத வரையில் அவர் நமக்கு வழிகாட்ட வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

சர்வாதிகாரியின் தலைமை அவசியம்


இதர தேசங்களின் சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள். ஒரு தனிப்பட்ட மனிதன் தலைமையில்தான் நாடுகள் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. ஜெர்மனி ஹிட்லரை நம்பி

யிருக்கிறது. ஹிட்லர் முறைகள் நமக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், ஹிட்லர் ஆட்சியில் ஜெர்மனி மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறதென்பதை நாம் மறுக்க முடியாது. அதைப் போலவே இத்தாலியின் முன்னேற்றத்திற்கு முஸோலீனிதான் காரணம். இன்றைய ரஷ்யாவைச் சிருஷ்டித்தவர் லெனின்.

ஹிட்லரும், முஸோலீனியும் செய்யும் பல காரியங்கள் எனக்குப் பிடிக்கவில்லே. அவர்களிடம் பல குற்றங் குறைகளிருந்த போதிலும் அந்த நாட்டு ஜனங்கள் அவர்களே அன்புடன் கௌரவிக்கிருர்கள்.

நம் நாட்டில் எதுவும் குற்றம் குறைகளே இல்லாத ஒரு மகாத்மா காந்தி இருக்கிருர். அவருக்குச் சொந்த நன்மை என்று ஏதாவது உண்டா? அவரை நாம் ஏன் பரிபூர்ணமாக உபயோகித்துக் கொள்ளக்கூடாது? இத்தீர்மானம் பழி வாங்கும் மனப்பான்மையைக் காட்டுகிறதென்று சிலர் சொன்னதை நான் மறுக்கிறேன்.





ராஜாஜி

ராஜாஜி பிரசங்கங்கள்

ஸ்ரீ. கோவிந்த வல்லப பந்த் தீர்மானத்தை ஆதரித்து மகாசபையில் ராஜாஜி செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:

உங்களுடைய உணர்ச்சிகளைக் கிளப்பிவிட நான் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் சாவதானமாக உங்கள் அறிவை உபயோகித்து நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். டெலிகேட்டுகளின் தீர்ப்பை மாற்ற முயற்சிக்கிறார்க ளென்பதுதான் நிலைமை என்று சிலர் நினைக்கிறார்கள். தீர்மானத்தின் நோக்கம் இதுதா னென்றால், அதை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு நான் சம்மதிப்பேன். ஆனால், காரணம் வேறு. ஏதோ தேர்தல் வேகத்தில் சொல்லத் தகாதவைகளைச் சொல்லி விட்டார்கள் என்பது மாத்திரந்தான் பிரச்னை யென்றால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு, மாமூல் காரியங்களைக் கவனித்திருக்க வேண்டியதுதான்.

ஆனால், இப்பொழுது இத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். ஆகவே, நடந்தது என்னவென்பதை நான் தெளிவாக்க வேண்டும். நடந்தது ரொம்பப் பெரிய விஷயம். அதை நாம் திருத்தியாகவேண்டும். எனக்குத் தோன்றும் முறையில் நான் நிலைமையை விளக்குகிறேன். திருத்தங்கள் பெரிய விஷயமில்லை. இவை அவரவர்களுக்குத் தோன்றிய முறையில் தீர்மானத்தைச் சீர்திருத்தச் செய்யும் முயற்சிகளே. சில பிரசங்கிகள் இந்தத் தீர்மானம் அனாவசியமானது என்று காட்ட முயற்சி செய்தனர். அந்த வாதம் சரியானதா வென்பதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

மூல காரணம்

தலைவரவர்களே! தனிப்பட்டவர் நடத்தைகளைப்பற்றி நான் பரிசீலனை செய்ய ஆரம்பிப்பதை நீங்கள் தவறாக

அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. துரதிர்ஷ்டவசமாக இவ்விஷயம் அக்ராசனர் விடுத்த ஒரு அறிக்கையிலிருந்து ஆரம்பமானது. இதை நாம் பக்ஷபாதமில்லாது கவனிப்போம். நாம் ஒவ்வொருவரும் தவறு இழைப்பது சகஜந்தான். அதனைத் திருத்திக்கொள்ளவும் முடியும். ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸ் அக்ராசனர் தேர்தலில் அபேட்சகர் என்ற ஹோதாவில் ஒரு அறிக்கை விடுத்தார். அது இப்போது என்னிட மிருக்கிறது. இது சம்பந்தமாக இன்று மாலை அவர் மேலும் ஒரு அறிக்கையை விடுத்துள்ளார். காரியக் கமிட்டி மெம்பர்கள்மீது அவர் எவ்விதப் புகாரும் கூறவில்லை யென்கிறார். இம்மாதிரி அவர் அறிக்கை விடுத்த பின்னரும் கூட ஒருவர் வேறுவிதமான அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருந்தால், புகார் எனக் கருதப்பட்டதை நாம் ஒதுக்கிக்கூட வைத்துவிடலாம்.

ஆனால், இது இதோடு நிற்கவில்லை. கடுமையான விஷயம் நடந்துவிட்டது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தேடுவதற்காகக் காந்திஜி பெயரை இழுத்து இங்கு யாரும் எதுவும் வித்தை செய்யவில்லை! ராஷ்டிரபதி தேர்தல் முடிவை ரத்துச் செய்ய ஏதோ போர்வையாகக் காந்திஜி பெயர் இழுக்கப்பட்டிருக்கிறதாக ஒரு கனவான் கூறினர். அம்மாதிரி யெல்லாம் எதுவும் செய்யப்படவில்லை.

நமது தேசத்தின் சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்தச் சம்பவத்தில் காந்திஜி வார்த்தைகளும், அதாவது அவர் ஆலோசனைகளும், செய்கைகளும் சம்பந்தப்பட்டிருப்பதால் அவருடைய பெயர் இங்கு வருகிறது. ஸ்ரீ. போஸ் அறிக்கையை ஒரு வகையில் காந்திஜி வியாக்யானம் செய்திருக்கிறார். அவ்வறிக்கை விஷயமாக மற்றவர் புரிந்துகொள்ள வியாக்யானம் செய்து எழுதியது மாத்திர

மின்றி, இது சம்பந்தமாகத் தம்முடைய நடவடிக்கையையும் அவர் வகுத்துக் கொண்டுள்ளார்.

ஒதுக்கிவிடக் கூடிய விஷயமா?

ஸ்ரீ. போஸ் விடுத்த அந்த அறிக்கையில், சமரசமே இன்றிச் சமஷ்டியை எதிர்த்தே தீரவேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானம் இருந்தபோதிலும், நிபந்தனைகளின் பேரில் சமஷ்டியை ஒப்புக் கொள்ளலாமெனச் சில செல்வாக்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. சமஷ்டி மந்திரி சபை ஜாபிதாவும் தயாரிக்கப்பட்டு விட்டதாகப் பொதுவாக ஒரு அபிப்பிராயம் இருப்பதாக அவர் அறிக்கையில் கூறியுள்ளார். ஆதலால் இந்த நிலையில் உண்மையாக சமஷ்டியை எதிர்க்கும் ஒருவர் அக்ராசனர் பீடத்தில் இருக்கவேண்டு மெனவும் அவர் கூறியுள்ளார்.

யாரையோ பற்றி,எவரோ, எதுவோ சொன்னார்க ளென்றும், இதற்கும் நமக்கும் சம்பந்த மில்லையென்றும், இந்த விஷயத்தை ஒதுக்கிவைக்க முடியுமா வென்று, தலைவரவர்களே,உங்களைக் கேட்கிறேன். நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ அது காரியக் கமிட்டி மெம்பர்களையே பாதிக்கிறது. ஆதலால், இந்த அறிக்கைக்கு ஒரே வியாக்கியானந் தான் உண்டு.

இந்தமாதிரி அறிக்கை விடுத்த பின்பு ஏதாவது செய்துதாக வேண்டும். ஒன்று, நாம் ஒருவரை யொருவர் நம்ப வேண்டும். அல்லது சந்தேகிக்கப்பட்ட காரியக் கமிட்டி மெம்பர்களுக்குப் பதிலாக வேறு யாராவதுதான் வரவேண்டும். ஏனெனில் காரியக் கமிட்டி மெம்பர்கள்பால் சந்தேகமே கூடாது.

ஸ்ரீ. போஸ் அந்த அறிக்கையை விடுத்து அதன் பேரில் தேர்தலில் போட்டியிட்டார். அந்த அறிக்கையை வைத்துக் கொண்டே தேர்தலில் ஜெயித்துவிட்டார். அந்த அறிக்கையின் பேரில்தான் அக்ராசனர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த விஷயம் காந்திஜி மனத்தில் தோன்றியது; அதனை அவர் உணர்ந்தார்.

காந்திஜி காரியக் கமிட்டிக்குச் சரியான வழி காட்டி நடத்துவதை யாரும் மறுக்க முடியாது. அவர் வாழ்வில் ஒவ்வொரு நிமிஷமும் இதற்கு வழி காட்டியுள்ளார். "நீ வானல் நீ ஜெயிப்பாய்! தலையானல் நான் ஜெயிப்பேன்!" என்ற முறையில் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்தல் முடிவு தம்முடைய தோல்வி எனக் காந்திஜி கூறுகிறார். ஆதலால் ஸ்ரீ. போஸை அவருக்கு இஷ்டப்பட்ட மெம்பர்களைக் கொண்டு காரியக் கமிட்டியை அமைத்துக் கொள்ளச் சொல்கிறார்.

இந்தப் பிரச்னை பொதுஜனங்கள் முன்னிலையிலும், டெலிகேட்டுகள் முன்னிலையிலும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் பொறுப்பு எவ்வகையில் மேற்கொண்டு நடத்தப்படவேண்டுமோ அவ்வகையில் காரியங்களைச் செய்ய வேண்டியது உங்களுடைய கடமையாகும். தம்முடைய கொள்கைகள், திட்டங்களில் டெலிகேட்டுகளுக்கு நம்பிக்கையில்லை யென்ற கடுமையான முடிவிற்குக் காந்திஜி வந்துள்ளார். இதுதான் இப்போதைய நிலைமை.

இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட தனிப்பட்டவர் விஷயமாக நான் மேலும் பேச விரும்பவில்லை. ஆயினும் ஒன்று உங்களைக் கேட்கிறேன். இந்தத் தீர்மானத்தை வாபஸ்

செய்துவிட்டு, கடுமையான பதப் பிரயோகம் கொண்ட தீர்மானங்கள் சிலவற்றை நிறைவேற்றிவிட்டு வீட்டுக்குப் போய்விடுவது சரியா ?

எங்கள் ஆவல்

நாம் உறுதியான நிலையில் நிற்க வேண்டும். காந்திஜி அறிக்கையை உண்மையாக நாம் புரிந்துகொண்டோமென்றால் நாம் இப்போது ஆடும் ஆட்டம் ரொம்ப அபாயகரமானது என்பதை உணரவேண்டும். இந்தத் தீர்மானத்திற்குக் காந்திஜி சம்மதம் கொடுக்க மாட்டாரென யாரோ ஒருவர் கூறினர். நான் ஒப்புக்கொள்கிறேன். அவர் இந்தத் தீர் மானத்தை விரும்பவில்லை. ஆனல் அவருடைய கொள்கை கள் திட்டங்களை நாங்கள் மீண்டும் ஊர்ஜிதம் செய்ய விரும்பு கிறோம்.

காந்திஜி கொள்கைகள், திட்டங்கள் ஆகியவைகள் எங் களுக்கு வேண்டும். அவைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். நாங்கள் அவைகளை மீண்டும் ஊர்ஜிதம் செய்ய விரும்பு கிறோம். அவருடைய தலைமையை நாங்கள் பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்கிறோம். இதன் பின்னர்தான் நாம் நிலைமையை உண்மையாக வியாக்யானம் செய்ய முடியும்.

காந்திஜி உதவி வேண்டுமானல்

“ காந்திஜி எவ்வளவோ செய்திருக்கிறார். அதெல்லாம் எங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா, என்ன? ஆனல் அவர் அதை (காங்கிரஸை) எடுத்துக்கொள்ள முடியாது. அவர் உதவி வேண்டுமானல் செய்யட்டும்; காங்கிரஸை எங்களிடம் விட்டுவிட வேண்டும்” எனச் சிலர் கூறுகின் றனர். இந்த உணர்ச்சி இருப்பதைப்பற்றி நான் பெருமை

கொள்கிறேன். ஆனால் அவரை உறிஞ்சித் தின்னும் அட்டைகளாக மட்டும் நாம் எப்போதும் இருப்பது அழகல்ல. அவருடைய பலம், அவருடைய நீடித்த தொடர்பு, உதவி, ஆகியவைகள் வேண்டுமானால், நாம் நிலைமையைச் சீர்செய்தே யாக வேண்டும். ஆதலால், இவ்வகையில் முற்படும் ஒரு முயற்சியேயாகும் இந்தத் தீர்மானம். இது பூர்ணமாகச் சரியாக இருக்கிறதென நான் கூறவில்லை. ஆனால் இது ஒரு முயற்சியே எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற வருஷத்திய காங்கிரஸ் கொள்கைகள், திட்டங்களில் மாறுதல் இருக்கக்கூடாதென்றே தீர்மானம் கூறுகிறது. யாரையும் அவமதிக்கும் விஷயம் எதுவும் இதில் இல்லை. ஆனால், யாவரும் இத்தீர்மான விஷயமாகக் குதூகல மடையவேண்டும்; காரியக் கமிட்டி மெம்பர்கள் மீது அபவாதம் கூறியதற்கு வருந்துகிறோம் என்றுதான் தீர்மானம் கூறுகிறது. இதைச் செய்வதுதான் தீர்மானத்தின் நோக்கமுமாகும். இன்று காங்கிரஸ் அக்ராசனர் கூறிய சமாதானத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

அக்ராசனர், அவருடைய தேசீய நிர்வாக சபையை அமைத்துக் கொள்ளுவது சம்பந்தமாக காந்திஜி ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும் என்று கூறுவதில் ஜனநாயகத்திற்கு முரணானது எதுவும் இல்லை. காந்திஜியின் சிபார்சுகளை நிராகரிக்க அக்ராசனருக்கு உரிமை உண்டு. பிறகு இதன் விளைவுகளைக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் அக்ராசனர் சமாளித்துப் பதில் சொல்லியாகவேண்டும். ஏனெனில், இதுவே பிரதிநிதிகள் கூறும் ஆலோசனையாக இருக்கப் போகிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேறினால், காங்கிரஸ் அக்ராசனர் காலையும் கையையும் கட்டிப் போட்டது மாதிரி என்று

யாரோ கூறினர். காந்திஜிக்காக என்றால், தம் காலையும் கையையும் கட்டிப்போடப்படும் பாக்யத்தை நினைத்து யாரும் மகிழ்வார்கள். உண்மையில் இப்படி யிருந்தால் ஸ்ரீ. போஸுக்கு மகத்தான சுதந்திரம் கொடுத்துவிட்டது போலாகும். ஏனெனில் காந்திஜியின் பூர்ண ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்குமே! இதுதான் தற்சமயம் இல்லை.

ஆதலால், வார்த்தை சம்பந்தமான சில சில்லறைத் திருத்தங்களைத் தவிர, பாக்கி எல்லாத் திருத்தங்களையும் நீங்கள் நிராகரிக்க வேண்டும். அசல் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

II

திரிபுரி அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சியில் ராஜாஜி செய்த பிரசங்கத்தின் சாரம் பின்வருமாறு :

இப்போது ஆற்றங்கரையில் இரண்டு படகுகள் காணப்படுகின்றன. ஒன்று பழைய படகு; நல்ல விசாலமான படகு. இதை மகாத்மா காந்தி ஓட்டுகிறார்.

மற்றொருவர் புதிய படகு ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார். புதிய படகுக்குப் பளபளப்பாக வர்ணம் பூசியிருக்கிறார்கள். கொடி, தோரணம் முதலியவைகளையும் கட்டிச் சிங்காரம் செய்திருக்கிறார்கள். "என் படகில் ஏறுங்கள் !" என்று அந்தப் புதிய ஆள் கூப்பிடுகிறார்.

மகாத்மா காந்தி நல்ல அனுபவம் வாய்ந்த தோணிக்காரர். மேடு பள்ளம் இருக்கு மிடங்கள் அவருக்கு நன்றாகத் தெரியும். இவைக ளெல்லாவற்றையும் கடந்து அவர் ஜாக்கிரதையாக நம்மைக் கரை சேர்த்து விடுவார்.

புதுப் படகு ஓட்டைப் படகு என்று எனக்குத் தெரியும். ஆகையால், புதுப் படகில் ஏறினால் எல்லோரும் ஆற்றில் மூழ்க வேண்டியதுதான். நர்மதை நதி ரொம்ப ஆழமானது.

"என் படகில், நீங்கள் ஏற முடியாதென்றால், என் படகையும் உங்கள் படகுடன் சேர்த்துக் கட்டிக்கொள்ளுங்களேன்" என்று புதிய ஆள் சொல்லுகிறார். இதுவும் சாத்தியமில்லாத காரியம்தான். ஒரு ஓட்டைப் படகை நல்ல படகுடன் சேர்த்துக் கட்டிக்கொண்டு போனால், அதற்குள் ஜலம் புகுந்து, அந்தப் பாரத்தில் நாமும் மூழ்கிவிடுவோமாதலால், அதற்கும் சம்மதிக்க முடியாது.

நமக்கு ஒரே ஒரு தலைவர்தான் உண்டு. அந்தத் தலைவர் மகாத்மா காந்திதான்.

அவர் சொல்லுவதைச் செய்யக்கூடிய சக்தியுள்ளவர். ஆகையால், அவரைத்தான் நாம் பின்பற்றி யாகவேண்டும். அவர் சொல்வது குறைவா யிருக்கும். ஆனால், செய்வது அபாரமா யிருக்கும். அவரை நம்புங்கள். அவர் பத்திரமாக நம்மைக் கரை சேர்த்துவிடுவார். காந்திஜியின் படகு ஒன்றில் தான் நாம் ஏற முடியும். அவர் எவ்வளவு அனுபவம் பெற்றவர்! நமக்குத் தெரிந்து சென்ற 35 வருஷங்களாக அவர் நம்மை நடத்தி வந்திருக்கிறார். அவர் தலைமை திருப்திகரமாய்த்தா னிருக்கிறது.

"வானத்தை வில்லாய் வளைத்து விடுகிறோ"மென்ற பெரிய வார்த்தைகளைக் கண்டு ஏமாந்துபோய் ஓட்டைப் படகில் ஏறிவிடாதீர்கள். "கொஞ்ச நேரம் புதுப் படகில் ஏறிப் பார்த்துவிட்டு,பிறகு பழைய படகுக்கு வந்துவிடுவோ" மென்றும் நினைக்காதீர்கள். ஏனென்றால், ஓட்டைப் படகில் ஏறினால், பிறகு திரும்பி வந்து நல்ல படகில் ஏறும் வரையில் நாம் உயிருட னிருக்கமாட்டோம். அதற்குள் ஓட்டைப் படகு கவிழ்ந்து விடும். மகாத்மாவை நம்புங்கள்.

ஒருகால் நாம் தனித் தனியாகவே நீந்தினால் கரை சேரக்கூடும். ஆனால், எல்லோரும் சேர்ந்து குப்பல் போடுவதா யிருந்தால், எல்லோருமே மூழ்கிவிடக்கூடும்.

நாம் ஸ்வராஜ்யம் பெறவேண்டு மென்று விரும்பினுல், பலாத்காரத்தையும், ஏமாற்றுவதையும் உபயோகித்துப் பெறக் கூடாது. நாம் காங்கிரஸைப் பலப்படுத்த விரும்பினுல், பரஸ்பரம் ஏமாற்றுவதையும், சந்தேகத்தையும், பலாத்காரத்தையும் மூட்டை கட்டி ஒரு பக்கத்தில் வைத்துவிட வேண்டும்.

லஞ்சம், போலி மெம்பர்கள் மூலம் நாம் காங்கிரஸைப் பலப்படுத்த முடியுமென்று நினைத்தால், நாம் ஏமாற்ற மடையப் போவது நிச்சயம். மோசடியின் மூலம் நாம் ஒரு நாளும் பலம் பெற முடியாது. "காந்திஜிக்கு ரொம்ப சக்தி இருக்கிறது. ஆகையால் அவர் சொற்படி கேட்போம். ஆனுல், ரகசியமாக நம்மிஷ்டப்படி நடப்போம்" என்று யாராவது சொன்னுல், உடனே அந்தப் புத்திமதியை நிராகரித்து விடுங்கள்.

காந்திஜியின் சக்தி மின்சாரத்தைப் போன்றது. ஏதாவது ஒரு கம்பியாவது சேதமடைந்து விட்டால், 'கரெண்ட்' பூராவும் போய்விடும். காந்திஜியின் சக்தி நம்முடைய நாணயத்தையும், உண்மையையும் பொறுத்துத்தான் இருக்கிறது. மகாத்மா தம் தலையில் ஒரு பெரிய சுமையைத் தூக்கிச் செல்லக் கூடிய சக்தியுடையவர். ஆனுல், ஒரு பொய்யைக் கூட அவரால் தாங்க முடியாது.

காங்கிரஸ் எவ்வளவுக் கெவ்வளவு சத்தியத்தையும் அஹிம்ஸையையும் உண்மையாகப் பின்பற்றுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவருக்குப் பலம். காந்திஜியின் தலைமையில் நாம் ஸ்வராஜ்யம் பெற்ருல் சந்தோஷமாய் வாழ முடியும். அப்படி இல்லாமல் வேறு வழிகளில் நமக்கு ஸ்வராஜ்யம் வந்தால், நாம் மிருகங்களாய்விடுவோம். நாம் கர்ம பலனில் நம்பிக்கை யுள்ளவர்க ளல்லவா?

திரிபுரி சுதேசிப் பொருட்காட்சியில்
பண்டித ஜவாஹரின் திறப்பு விழாப் பிரசங்க சாரம்

கதரும், காந்திஜியும்

உங்கள் மனத்திலே இன்று காந்திஜியின் உருவம்தான் பதிந்திருக்கும். அவர்தான் இப் பொருட் காட்சியைத் திறந்துவைக்க வேண்டியவர். இங்கு நடத்தப்படும் கதர்ப் பொருட்காட்சி மகாத்மாஜியின் லக்ஷியங்களைக் குறிக்கிறது.

இன்று அவர் ராஜ்கோட்டில் உபவாச மிருக்கிறார். அது தேசத்திலுள்ள மற்றெல்லா விவகாரத்தையும் பின்னணிக்குக் கொண்டுபோய்விட்டது. இங்கு நமது காரியத் திட்டங்கள் கூட அந்த உபவாசத்தினால் சற்று கலங்கி நிற்கின்றன. எது எப்படி நிகழ்ந்தாலும், நாம் நமது காரியங்களை நடத்திக்கொண்டே போகவேண்டும். நாம் நமது கடமையைச் செய்யாது நிறுத்தி விடுவதால் காந்திஜியின் இயக்கத்திற்கு அதனால் எவ்விதமான பிரயோஜனமும் இல்லை.



பண்டித ஜவாஹர்லால்

அதனால், இந்தப் பொருட் காட்சியைத் திறந்துவைக்க வேண்டுமென ஸ்ரீ. கோவிந்த தாஸ் டெலிபோன் மூலம் கேட்ட

போது, நான் சரி யென்றேன். இது என் கடமையாகக் கருதி இணங்கினேன்.

இந்த மாதிரிப் பொருட்காட்சிகள் நடத்தப்படுவதில் சென்ற நான்கு வருஷ காலமாகப் பல புது மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பொருட்காட்சிகள் வெறும் தமாஷல்ல; வேடிக்கை பார்க்கும் இடமல்ல. தேசத்தினர் வாழ்வில் கிராமக் கைத்தொழில்களுக்குள்ள ஸ்தானத்தைச் சித்திரித்து, கிராமப் பொருளாதாரத்தைச் சீர்திருத்துவது, கிராமக் கைத் தொழில்களுக்கு எவ்வகையில் புத்துயிரளிப்பது என்பதைக் காட்டுவதற்காகவே இவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம வாசிகளை மேன்மையுற வாழச் செய்யவேண்டுமென நீங்கள் நினைக்காத வரையிலும், சுதந்தரத்தைப்பற்றி நீங்கள் கருதியவர்க ளாகமாட்டீர்கள்.

நான் ஒரு அபேதவாதி. சாமான்கள் அகப்படும் வரையிலும் பெரிய கைத்தொழில்கள் இருக்கவேண்டுமென்றும் விரும்புகிறவன்தான். ஆனால், பெரிய கைத்தொழில்களை ஆரம்பித்துவிட்டால் மட்டும் நாம் பசிப்பிணிப் பிரச்னைக்கு வழி கண்டுபிடித்துவிட்டதாக மாட்டாது. பெரிய, சிறிய கைத்தொழில்களிடையே தகராறு இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். பெரிய கைத்தொழில்களையும் முதலாளித்துவ வகையில் ஆரம்பிக்கக் கூடாது. ஏனெனில், உழைப்பின் பலன் ஒரு சில மனிதர்களுக்குப் போய்விடும். வியர்வை நிலத்தில் விழ உழைப்பவர்களுக்கு எதுவும் இருக்காது.

சென்ற பல வருஷங்களாக காந்திஜி கதர்த் தத்துவத்தை உபதேசித்து வருகிறார். தேசத்தின் சின்னமாகக் கதர் கருதப்படும் காலம் வந்துவிட்டது. ஆரம்ப திசையில் இது முரட்டுத்

துணியாக இருந்தது வாஸ்தவமே. ஆனால், இப்போது கதர்த் தொழில் மிகவும் உயர்ந்துவிட்டது. நைஸான துணிகளும், பார்ப்பதற்கு அழகான துணிகளும் இப்போது காணப் படுகின்றன.

சென்ற 150 வருஷ காலமாக உள்ள வறுமை காரண மாக ஏற்பட்ட சில நிலைமைகளின் விளைவாக நாம் அழகான வஸ்துக்கள், கலைத்திறம் ஆகியவைகளைப் பாராட்டும் தன் மையை இழந்துவிட்டோம். நாசகரமான மேல் நாட்டு அம் சங்கள் சிலவற்றைக் கண்மூடித்தனமாக நாம் பின்பற்று கிறோம். இப்போது நமது உயர்ந்த ரசனையை நாம் மீண்டும் அடையவேண்டும்.

பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கும் ஒருவர் வார்தா திட்டத்தினால் சாதிக்கக் கூடியவைகள் என்னென்ன வென் பதைக் கண்டுகொண்டு அப்படியே பிரமித்துவிடுவார். காங்கி ரஸிலே இல்லாத பலர்கூட இந்தத் திட்டத்தை வரவேற் கிறார்கள். இது நமது தேசத்தில் கல்வி விஷயத்தில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கப் போகிறது என்பது நிச்சயம். காங்கிரஸ் ஆட்சி நடத்தும் இடங்களில் வயது முதிர்ந்தோருக் குக் கல்வி போதிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

வபத் பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

எகிப்திலுள்ள வபத் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்தக் காங்கிரஸ் வரவேற்பு அளிக்கிறது. அவர்களுடைய இந்த விஜயமானது, இந்தியாவிலும் எகிப்திலும் நடைபெறுகிற சுதந்திர இயக்கங்களின் ஒற்றுமைச் சின்னமாக இலங்குகிறது. எகிப்திய மகா ஜனங்களுக்கு இந்தக் காங்கிரஸானது தனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் பூரண சுதந்திரமடைய வேண்டுமென்றும் கோருகிறது. உலக சமாதானம், உலக சுதந்திரம் இவற்றை முன்னிட்டு, எகிப்திய ஜனங்களின் ஒத்துழைப்பு விருத்தியடையும் என்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

சீனுவுக்கு அநுதாபம்

சீன மகா ஜனங்களுக்கு இந்தக் காங்கிரஸானது தனது வாழ்த்தைத் தெரிவிக்கிறது. கொடுமையான, மனிதத் தன்மையற்ற ஏகாதிபத்தியத்தின் பெயரால் தொடுக்கப் பெற்றுள்ள யுத்தத்தை எதிர்த்து சீனு நடத்தும் போராட்டத்திலும், அது காரணமாக அது அநுபவித்து வரும் கஷ்ட நிஷ்டூரங்களிலும், காங்கிரஸ் தனது அநுதாபத்தைத் தெரிவிக்கிறது.

இந்தியாவிலிருந்து சீனுவுக்கு வைத்திய உதவிப் படை அனுப்பப் பெற்றதை இந்தக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. இதற்குப் பூரண ஆதரவு கிடைக்குமென்றும், இதன் மூலமாக சீனுவுக்கும் இந்தியாவுக்குமுள்ள ஒற்றுமைச் சின்னம் அதிகப்படுமென்றும் இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

பாலஸ்தீனம்

தங்களுடைய தேசீய சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் பாலஸ்தீனத்

தில் அராபியர்கள் நடத்தும் போராட்டத்திற்கு அநுதாபங் காட்டியும், பாலஸ்தீனத்தில் 'மாண்டேடரி' நிருவாகம் நடைபெறுவதைக் கண்டித்தும் ஏற்கனவே இந்தக் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. இதற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களைப் பார்த்தால், சட்டம், அமைதி என்பவற்றின் பெயரால் அங்கு பயங்கர ஆட்சி நடைபெறுவதாகத் தெரிகிறது. இந்தப் போராட்டத்தில் அராபியர்கள் காட்டி வரும் தைரியத்தையும், உறுதியையும் கண்டு இந்திய ஜனங்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவர்களுடைய லட்சியம் நிறைவேறவேண்டு மென்ற தங்கள் கோரிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும் யூதர்கள் படுகிற பாட்டைக் கண்டு இந்தக் காங்கிரஸ் பெரிதும் அநுதாபப்படுகின்றதாயினும், பாலஸ்தீனத்திலுள்ள யூதர்கள், தங்களுடைய விசேஷ சலுகைகளை ஸ்தாபித்துக் கொள்வதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ராணுவ பலத்தைத் துணையாகக் கொண்டு, அதனோடு தங்களை இணைத்துக்கொண்டதற்காக இந்தக் காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது.

யூதர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய மாதிரி, பாலஸ்தீனத்தில் ஒரு ஜனநாயக அரசாங்கம் ஸ்தாபிக்க, யூதர்களும் அராபியர்களும் ஒன்றுசேர்ந் துழைப்பார்களென்று இந்தக் காங்கிரஸ் கருதுகிறது.

மகாத்மா காந்தியின் தலைமை

மஹாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் அநுஷ்டித்து வந்த அடிப்படையான கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றுவதாக இந்தக் காங்கிரஸ் வலியுறுத்துகிறது. இந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இருக்கக்கூடா

தென்றும், வருங்காலத்துக் காங்கிரஸ் வேலைத் திட்டம் இந்தக் கொள்கைகளை அனுசரித்ததாக இருக்கவேண்டு மென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

சென்ற வருஷம் வேலை செய்துகொண்டிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியினிடத்தில் இந்தக் காங்கிரஸுக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிற தென்பதை வலியுறுத்திக் கூறுகிறது. சென்ற வருஷக் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் மீது துர் அபிப்பிராயங்கள் ஏற்படுமாறு பேசப் பெற்றவைகளைக் குறித்து இந்தக் காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது.

அடுத்த வருஷம் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படு மென்று காங்கிரஸ் கருதுவதால், இந்த மாதிரியான நெருக்கடி களில் மகாத்மா காந்தி ஒருவர்தான் காங்கிரஸையும் தேசத் தையும் வெற்றிகரமாக நடத்திச் செல்லக்கூடும். ஆதலால் காங்கிரஸின் நிர்வாக ஸ்தாபனமானது அவருடைய நம்பிக் கையைப் பெற்றிருக்க வேண்டும். எனவே காங்கிரஸ் தலை வர், காந்தியடிகளுடைய விருப்பத்திற்கு இணங்க, காரியக் கமிட்டியை அமைக்கவேண்டு மென்று இந்தக் காங்கிரஸ் தீர் மானிக்கிறது.

தேசீயக் கோரிக்கை

இந்திய மஹா ஜனங்களின் முன்னேற்றத்திற்காக, சென்ற அரை நூற்றாண்டுக் காலம் காங்கிரஸானது உழைத்து வருகிறது. சுதந்திரத்திலும், இருதய விகாசத்திலும் இந்திய ஜனங்களுக்குள்ள ஆவலை அது பிரதிபலித்து வந்திருக் கிறது. சென்ற இருபது வருஷங்களாக இந்தியப் பாமர ஜனங்களின் பொருட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகப் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறது. ஜனங்களின் தியாகத்தினாலும், ஒழுங்கினாலும், காங்கிரஸ்

தேசத்தை அதனுடைய லட்சியமாகிய சுதந்திரத்தை அடைவதற்குரிய மார்க்கத்தில் நெடுந்தூரம் அழைத்துச் சென்றிருக்கிறது. ஜனங்களின் சக்தி வரவர அதிகரித்துக் கொண்டு வருவதைத் துணையாகக் கொண்டு சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு காங்கிரஸானது பலவிதமான வேலைத் திட்டங் களை அனுசரித்து வந்தபோதிலும், இந்தியாவின் சுதந்தி ரத்திற்காகவும், இந்தியாவில் ஜனநாயக அரசாங்கம் ஸ்தா பிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காகவும் ஒரு முக மாக வேலை செய்துகொண்டு வந்திருக்கிறது. இந்தியா அரசாங்கச் சட்டத்தை நிராகரித்து, அதனை அடியோடு ரத்துச் செய்துவிடவேண்டும் என்னும் கருத்தோடு கூடவே, பல நிபந்தனைகட் குட்பட்டும் அநேக வரம்புகள் நிறைந்தது மான மாகாணப் பொறுப்பாட்சியைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண் டது. தேசீய இயக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளவும், உள்ள நிலைமையில் பாமர ஜனங்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்க முடியுமோ அதனைச் செய்து கொடுப்பதற்காகவுமே காங்கிரஸ் மாகாணப் பொறுப்பாட்சி யை ஏற்றுக்கொண்டது.

இந்தியா அரசாங்கச் சட்டத்தின் சமஷ்டி அம்சத்தைக் காங்கிரஸ் பலமாக எதிர்ப்பதோடு அது திணிக்கப்படாமல் இருப்பதற்கு எதிர்த்துப் போராடவும் காங்கிரஸ் உறுதி கொண்டிருக்கிறது.

அந்நிய அதிகாரத்தின் தலையீடின்றி ஜனங்களால் தெரிந் தெடுக்கப்பட்ட ஒரு ஜனப்பிரதிநிதி சபையினால் தயாரிக் கப்பட்ட அரசியல் சட்டமே இந்தியாவுக்குத் தேவையென்று காங்கிரஸ் உறுதிகொள்கிறது. தேசமானது சுதந்திரத்தை அடைய வேண்டுமென்று தீர்மானித்திருப்பதை காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறது.

இந்திய மஹாஜனங்கள் வேறு எந்தவிதமான அரசியல் திட்டங்களையோ, அல்லது வேறுவிதமான பரிகாரங்களையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தியாவின் நிலைமையை உத்தேசித்தும், தேசீய இயக்கத்தின் வலிமையை உத்தேசித்தும், பாமர ஜனங்களிடத்திலும், இந்திய சமஸ்தானங்களிலும் ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதனாலும், உலக நிலைமை மாறிக் கொண்டு வருவதாலும் இந்தியா விஷயத்தில் சுய நிர்ணய உரிமையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தால் தான் இந்தியாவில் சுதந்திர ஜனநாயக அரசாங்கத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு இந்திய மஹாஜனங்களால் முடியுமென்றும் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது. ஜனங்களின் பிறப்புரிமை, கௌரவம், இவைகளை உத்தேசித்து மட்டுமல்ல, பொருளாதாரம் மற்றும் இதர பிரச்னைகள் இவைகளினால் பாமர ஜனங்கள் அதிகமாகப். பாதிக்கப்படுவதாலும், அவர்களுக்கு வேறு பரிகாரம் இல்லையாதலாலும், இந்தியாவின் வறுமைக்கு வேறு பரிகாரம் இல்லையாதலாலும், உலக முன்னேற்றத்தை அனுசரித்து ஜனங்கள் முன்னேறுவதற்குச் சுதந்திரத்தைத் தவிர வேறு மார்க்கமில்லையாதலாலும் மேற்படி சுய நிர்ணய உரிமை இந்தியா விஷயத்தில் பூரணமாக அனுஷ்டானத்திற்குக். கொண்டு வரப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கருதுகிறது.

மேற்படி அபிவிருத்திக்கு மாகாணப் பொறுப்பாட்சி எவ்வித சந்தர்ப்பத்தையும் அளிக்கவில்லை. அதனுடைய நன்மை செய்யும் ஆற்றலும் வரவரக் குறைந்து கொண்டு வருகிறது. சமஷ்டித் திட்டமோ இந்தியாவை இன்னும் அதிகமாக நெருக்குவதாக இருக்கிறது. ஆதலால் அஃது அங்கீகரிக்கப்பட மாட்டாது. எனவே இந்தியா அரசாங்கச் சட்டத்தை ரத்துச் செய்துவிட்டு இந்திய மஹாஜனங்களால்

தயாரிக்கப்பெற்ற ஒரு அரசியல்திட்டமே தேவை யென்று காங்கிரஸ் கருதுகிறது.

சுதந்திர ஜனநாயக இந்தியாதான் நமது மகத்தான பிரச்னைகளை விரைவிலே பயன் தரத்தக்க விதமாகத் தீர்க்க முடியு மென்றும், உலக மஹாஜனங்களோடு நாமும் சரிசமான மாக நிற்க முடியு மென்றும், அதன் வாயிலாக ஜனநாயக தத்துவத்திற்கும் சுதந்திரத் தத்துவத்திற்கும் நாம் துணை செய்த தாகுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படு கிறது.

காங்கிரஸின் லட்சியத்தை விரைவிலே அடையும் பொருட்டும், நம் முன்னே தலை தூக்கி நிற்கும் தேசீய நெருக்கடிகள், சர்வ தேச நெருக்கடிகள் முதலியவைகளை எதிர்த்து நிற்கும் பொருட்டும், எல்லாக் காங்கிரஸ் ஸ்தா பனங்களும், காங்கிரஸ் மாகாண அரசாங்கங்களும் தங்களைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது. ஒற்றுமையை உண்டுபண்ண வேண்டுமென் றும், சிறப்பாக காங்கிரஸ் ஸ்தாபனங்களை வலுப்படுத்தி தூய் மையுறச் செய்து ஒழுங்காக நடைபெறச் செய்ய வேண்டு மென்றும், ஜனங்களின் மனப்பான்மையைப் பிரதிபலிக்கக் கூடிய மாதிரி காங்கிரஸை ஒரு மகத்தான ஸ்தாபன மாக்கும் பொருட்டு அதிலுள்ள பலஹீனங்களையும் ஒழுக்க ஹீனங் களையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

பலுசிஸ்தானம்

பிரிட்டிஷ் பலுசிஸ்தானம் இன்னும் பழைய அதிகார வர்க்க முறையிலும் பொறுப்பற்ற முறையிலும் ஆளப்பட்டு வருவதால், மேற்படி மாகாணத்தில் எவ்விதத் தாமதமு மின்றி பொறுப்புள்ள ஜனநாயக அரசாங்க முறை அமைக்

கப்பட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருவதோடு, இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களுக்குச் சட்டரீதியாக என்ன அந்தஸ்து அளிக்கப்பட் டிருக்கிறதோ அதே அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

அந்நிய நாட்டுக் கொள்கை

ம்யூனிச் ஒப்பந்தம், ஆங்கிலோ - இத்தாலிய ஒப்பந்தம், ஸ்பெயினில் கலகக்கார ஆட்சியை அங்கீகரித்தது ஆகிய இவைகளை விளை பயன்களாகக் கொண்ட பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையை இந்தக் காங்கிரஸ் மறுக்கிறது. இந்தக் கொள்கையானது, ஜனநாயகத்திற்கு வஞ்சம் செய்வதாகவும், உடன்படிக்கைகளை மீறுவதாகவும், பொதுப்படையான பாதுகாப்பு என்ற முறைக்கு முடிவு கட்டுவதாகவும், ஜனநாயகம், சுதந்திரம் இவைகளுக்கு நேர் விரோதிகளான அரசாங்கங்களுடன் ஒத்துழைப்பதாகவும் இருக்கிறது. இந்தக் கொள்கையின் விளைவாக, உலகத்தில் புரட்சிகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பலாத்காரமானது வெற்றி கோஷத்துடன் அபிவிருத்தி யடைந்து, அநேக தேசங்களின் தலைவிதியை நிர்ணயிப்பதா யிருக்கிறது. சமாதானம் என்ற பெயரால், மகத்தான யுத்தங்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மத்திய, தென் மேற்கு ஐரோப்பா கண்டத்தில், சர்வதேச ஒழுக்கமானது மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. இதன் பயனாக, யூத சமூகத்தின் மீது, நாஜி அரசாங்கமானது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதையும், ஸ்பெயினில் நிரபராதிகளான ஜனங்களின் மீது ஆகாய விமானக் குண்டுகள் பொழியப்படுவதையும் உலகம் காண்கின்றது.

பாசிஸ்ட் அரசாங்கங்களுக்கு ஆதரவு காட்டுவதாகவும், ஜனநாயக நாடுகளை அழிப்பதாகவும் உள்ள பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. ஏகாதிபத்தியக் கொள்கையையும், பாசிஸக் கொள்கையையும் காங்கிரஸானது நிராகரிக்கிறது. உலக சமாதானம், உலக முன்னேற்றம் இவைகளை முன்னிட்டு, இந்த இரண்டு கொள்கைகளும் ஒழியவேண்டுமென்று காங்கிரஸ் கருதுகிறது. இந்தியா, தனது அந்நிய நாட்டுக் கொள்கையை, ஒரு சுதந்திர நாடு என்ற முறையில், ஏகாதிபத்தியம், பாசிஸம் இவைகளினின்று விலகியதாய், சமாதானம், சுதந்திரம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு அநுஷ்டித்து வரவேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

சுதேச சமஸ்தானங்கள்

இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள சுதேச சமஸ்தானங்களிலிருக்கும் மகாஜனங்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதை இந்தக் காங்கிரஸ் வரவேற்கிறது. காங்கிரஸானது, இதுகாறும் எந்தச் சுதந்திரத்திற்காக உழைத்து வந்திருக்கிறதோ, அந்தச் சுதந்திரம் அடைவதற்கு அறிகுறியாகவே இந்த விழிப்பைக் காங்கிரஸ் கருதுகிறது. சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி வேண்டுமென்றும், ஜன சுதந்திரம் வேண்டுமென்றும் கோரப்படுவதை இந்தக் காங்கிரஸ் ஆதரிக்கிறது. இந்த மாதிரியான இயக்கங்களுடன் காங்கிரஸ் தனது ஒற்றுமையைக் காண்பித்துக் கொள்கிறது. ஒரு சில சமஸ்தானாதிபதிகள், இந்த விழிப்பை அங்கீகரித்து, நிலைமைக்குத் தகுந்தவாறு தங்களை மாற்றியமைத்துக்கொண்டு வருவதை இந்தக் காங்கிரஸ் பாராட்டுகிறது ஆனால் சில சமஸ்தானாதிபதிகள், நியாயமானவையும், சமாதான முறையில் அமைந்தவையுமான ஸ்தாபனங்களைக்

கூட, மனிதத் தன்மையற்ற அடக்கு முறையினால் அடக்கிப் போடுவதைக் குறித்து இந்தக் காங்கிரஸ் வருந்துகிறது. ராஜகோட்டை சமஸ்தானாதிபதிக்கும், சர்தார் பட்டேலுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமானது முறியடிக்கப்பட்டுப் போனதை முன்னிட்டு, மகாத்மா காந்தி உண்ணாவிரத மிருக்கத் தீர் மானித்ததைக் கேட்டு இந்தியா முழுவதும் கலங்கி விட்டது.

மேற்படி ராஜகோட்டை சமஸ்தானாதிபதிக்கும் மகாத்மா காந்திக்கும் ஏற்பட்ட சமரஸத்தின் காரணமாக மகாத்மா காந்தியின் உண்ணாவிரதம் முடிவு பெற்றதைக் குறித்து இந்தக் காங்கிரஸ் மகிழ்ச்சி யடைகிறது. கத்தியவார் சமஸ் தானாதிபதிகளும், மற்ற சுதேச மன்னர்களும் காலத்திற் கேற்றவாறு நடந்துகொண்டு, தங்கள் பிரஜைகளுடைய ஒத் துழைப்பின் பேரில் தங்களுடைய சமஸ்தானங்களில் பொறுப்பாட்சியை அமுலுக்குக் கொண்டு வருவார்களென்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

ஹரிபுரா காங்கிரஸில் சுதேச சமஸ்தானங்கள் விஷய மாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினின்று என்ன எதிர் பார்க்கப்பட்டதோ அது நிறைவேறி வருவதாகவும், அந்தத் தீர்மானமானது, சமஸ்தானப் பிரஜைகள் சுதந்திர இயக்கங் களை நடத்துவதை ஆதரிப்பதாக இருந்ததென்றும் இந்தக் காங்கிரஸ் நம்புகிறது. மேற்படி ஹரிபுரா தீர்மானம் ஜனங் களின் நன்மையை முன்னிட்டு அமைக்கப்பட்டதாகவே இந் தக் காங்கிரஸ் கருதுகிறது. அப்பொழுதைய நிலைமையை முன்னிட்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே தவிர, இதுவே ஒரு முடிவென்று கொள்ளப்படவில்லை. சமஸ் தானப் பிரஜைகளுக்கு வழி காட்டுவதைத் தனது உரிமை யாகவும், தனது கடமையாகவும் காங்கிரஸ் கொண்டிருக் கிறது. சமஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கிற விழிப்பின் பய

ளுக, காங்கிரஸானது, தானே வலியத் தன்மீது போட்டுக் கொண்டுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்தவோ அல்லது அடியோடு நிராகரிக்கவோ காங்கிரஸுக்கு எப்பொழுதும் உரிமையுண்டு. காங்கிரஸின் லட்சியமானது, சமஸ்தானங்கள் உட்பட சர்வ இந்தியாவுக்கும் சுதந்திரம் பெறுவதென்பதுதான்.

காங்கிரஸில் சீர்திருத்தம்

அங்கத்தினர்களைச் சேர்க்கிற விஷயத்திலும், தேர்தல் காலத்திலும், பிற சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கத்தவறுகள் பல நடை பெறுவதால், காங்கிரஸ் ஸ்தாபனம் சரியாக நடைபெறவில்லையென்று அநுபவ வாயிலாகத் தெரியவருவதால், இந்தக் குறைகளை நீக்குவது அவசியமென்று காங்கிரஸ் கருதுகிறது. இதற்காக, அ. இ. கா. கமிட்டி, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் காங்கிரஸ் கூறுகிறது. இந்தச் சட்ட மாற்றங்களை உடனே அமுலுக்குக் கொண்டுவரவும் அ. இ. கா. கமிட்டிக்கு அதிகார மளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள அங்கத்தினர் ஜாபிதாவைப் பரிசீலனை செய்து அதனைத் திருத்தி யமைக்கவும், காங்கிரஸ் ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு உத்தர விடுகிறது.

அடுத்த காங்கிரஸ்

அடுத்த காங்கிரஸ் டிசம்பர் மாதத்தில் கூடுவதென்றும், அப்படிக் கூடும் காங்கிரஸ் பீகார் மாகாணத்தில் நடைபெற வேண்டு மென்றும் இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

கல்கத்தாவில் கூடிய
அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி
ராஷ்டிரபதி ராஜிநாமா

திரிபுரிக்குப் பின், எப்ரல்மீ கல்கத்தாவில் கூட விருந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங் களைத் தேசம் முழுதும் எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தது. உலக நிகழ்ச்சிகளும், யுத்த கால அவசரத்தைக் கவனித்துப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியச் சீர்திருத்தச் சட்டத்திற் குத் திருத்தம் கொண்டுவரத் துணிந்ததும் நமது தேசத்தி லும் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தெளிவாய் அறிவித்தன. தேசமனைத்தும் ஒரு மனிதனைப் போல் எழுந்து வேலை செய்ய வேண்டிய இந்தச் சமயத்தில், காங்கிரஸ் மகாசபைக்கு ஒரு நிர்வாகக் கமிட்டியை நியமிக்கக்கூட முடியாத சிக்கல் ஏற்பட் டிருந்ததால், மக்களனைவரும் கல்கத்தா முடிவுகளை எதிர்நோக் கிக் காத்திருந்தது வியப்பில்லை.

எப்ரல் 29-ந்தேதி மாலை 5-மணிக்கு கல்கத்தாவில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடியது. ராஷ்டிரபதி சுபாஷும் மகாத்மா காந்தியும் இதற்கு முன்னதாகவே கடிதங் கள் மூலமாகவும், சம்பாஷணைகள் மூலமாகவும், பண்டித பந்தின் தீர்மானத்தை அனுசரித்துக் காரியக் கமிட்டி நிறுவு வதைப்பற்றி ஆலோசித்திருந்தார்கள். அவர்களுக்குள் ஒரு முடிவு ஏற்பட மார்க்க மில்லாது போனதால், அ. இ. கா. கமிட்டியில் ராஷ்டிரபதி தமது ராஜிநாமாவைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சுபாஷ் பாபு, காந்திஜி யின் கடிதத்தைப் படித்துவிட்டு, தாம் ராஜிநாமாவைச் சமர்ப்

பிக்கவேண்டு மென்று தீர்மானித்த விவரத்தையும் எடுத்துக் கூறினர்.

மகாத்மா காந்திஜியின் கடிதத்தைப் படித்து, தம்முடைய ராஜிநாமாவை அ. இ. கா. கமிட்டியிடம் சமர்ப்பிப்பதென தாம் செய்துள்ள முடிவையும் அறிவித்தார்.

காந்திஜியின் கடிதம்

சுபாஷ் பாபுவுக்கு மகாத்மா எழுதிய கடிதம் பின் வருமாறு :—

அன்புடைய சுபாஷ் பாபுவுக்கு! பண்டித பந்த் தீர் மானத்திற் கிணங்க காரியக் கமிட்டிக்கு அங்கத்தினர்களை நியமிக்கும்படி தாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். முன் னம் நான் எழுதிய கடிதத்திலும், கொடுத்த தந்தியிலும் குறித்தபடி அது என்னல் முடியாத காரியம். திரிபுரி காங் கிரசுக்குப் பிறகு எத்தனையோ காரியங்கள் நடந்து விட்டன. தங்களுடைய அபிப்பிராயத்துக்கும் மற்ற அங்கத்தினர்கள் அபிப்பிராயத்துக்கும் முக்கிய வித்யாசமிருப்பதாகத் தெரி கிறது. ஆகவே நான் இப்போது காரியக் கமிட்டி அங்கத் தினர்கள் பெயரை அறிவித்தால் எனது அபிப்பிராயத்தை நான் தங்களிடம் வற்புறுத்துவதாக இருக்கும். எனது கடி தங்களிலேயே இதைப்பற்றி நான் விவரித்திருக்கிறேன். இப்போது இங்கு நடந்த அந்தரங்க சம்பாஷணைகளால் எனது அபிப்பிராயம் மாறவில்லை. ஆகையால் தாங்களே அங்கத்தினர்களை நியமித்து விடுங்கள்.

பரஸ்பரம் ஒற்றுமை ஏற்படுமா என்பதுபற்றி நீங்கள் மாஜி மெம்பர்களுடன் விவாதிக்கலா மென்றும் நான் உங்க ளுக்கு எடுத்துரைத்தேன். உங்களுக்குள் சமரசம் ஏற்பட வழியிருக்கிற தென்பதை அறிவதைவிட எனக்கு அதிக

மகிழ்ச்சி தரக்கூடியது வேறெதுவு மில்லை யென்பதையும் தெரிவித்தேன். அதற்கப்பால் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியும். ஆகவே, அவற்றை இப்பொழுது விவரிக்க வேண்டியதில்லை. நீங்களும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தின் முன் பூரா நிலைமையையும் விளக்குவீர்கள். பரஸ்பரம் சமரச மேற்படுவது சாத்தியப்படவில்லையே என்பதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன். எனினும், எது நடந்தாலும், பரஸ்பர நல்லுணர்ச்சியுடனேயே நடக்குமென்றே நான் நம்புகிறேன்.

ஸ்ரீ. சுபாஷ் அறிக்கை

காந்திஜியின் கடிதத்தைப் படித்துவிட்டு, ஸ்ரீ. போஸ் தாம் ராஜிநாமா செய்யப்போவதை அறிவித்துப் பின்வருமாறு பேசினர்:

நண்பர்களே! திரிபுரி காங்கிரஸில் புதிய காரியக்கமிட்டி அமைப்பது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னதென உங்களுக்குத் தெரியும்.

காந்திஜியுடன் நடந்த பேச்சு

திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகு இதுவரை புதிய காரியக் கமிட்டி அங்கத்தினர் பெயர்களை வெளியிட முடியாது போனதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆனல் என்னையும் மீறிய சில காரணங்களால் இவ்விதம் நேரிட்டுவிட்டது. நான் தேக அசௌக்கியமாக விருந்ததால் மகாத்மாவைக் காண நான் போக முடியவில்லை. அதனல் அவருடன் கடிதப் போக்குவரத்தால் பயனில்லை யென உணர்ந்து கொண்டேன். மகாத்மா டில்லியி லிருந்தபோது அவரைக் காண நான் என்னுலானவரை முயற்சி செய்தேன். அம்முயற்சியும் பலிக்கவில்லை.

கல்கத்தாவுக்கு மகாத்மா வந்த பின் நாங்கள் நீண்ட நேரம் சம்பாஷித்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அதன் பயனாகப் பரிகாரம் ஒன்றும் ஏற்படவில்லை.

முன்னர், ராஜிநாமா செய்துவிட்ட காரியக் கமிட்டி அங்கத்தினர்களைச் சேர்க்காமல் நானே தனியாக வேறு ஒரு காரியக் கமிட்டியை அமைக்கவேண்டுமென மகாத்மா எனக்கு யோசனை கூறினார். இந்த யோசனைப்படி நான் நடப்பதற்கில்லை. அதற்குப் பல காரணங்களுண்டு. இரண்டு காரணங்களை மட்டும் எடுத்துச் சொல்லுகிறேன்.

காந்திஜியின் யோசனைப்படி நடப்பதானால் அது பண்டித பந்த் தீர்மானத்துக்கு விரோதமாகும். காந்திஜியின் விருப்பப்படியும் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக விருக்கக்கூடிய வாறும் ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்பதே பண்டித பந்தின் தீர்மானத்தின் நோக்கம். என்னிஷ்டப்படி நான் ஒரு கமிட்டி நியமித்துவிட்டால், அது காந்திஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதென்று உங்களிடம் வந்து சொல்ல முடியாது.

கலப்புக் கமிட்டி வேண்டும்

இனி நெருக்கடியான சந்தர்ப்பங்கள் பல ஏற்படலாம். இந்த நிலைமையில் காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலாரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக உள்ள ஐக்கிய சபையாகக் காரியக் கமிட்டி யிருந்தால் சவுகரியமாக விருக்குமென நான் அபிப்பிராயப்பட்டேன். இதனால் மகாத்மாவின் ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. திரிபுரி காங்கிரஸ் தீர்மானப்படி ஏற்பட்ட பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டு, காரியக் கமிட்டி அங்கத்தினர்களை நியமிக்கவேண்டும் என்றும், எவ்விதக் கமிட்டி அமைத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளக்

கடமைப்பட்டிருப்பதாகவும், பண்டித பந்த் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென நான் உறுதிகொண் டிருப்பதாகவும் கூறினேன். காந்திஜி அவ்விதம் காரியக் கமிட் டிக்கு அங்கத்தினர்களை நியமிக்க முடியாது போனது நமது துரதிர்ஷ்டமேயாகும்.

தலைவர்களுடன் நடந்த ஆலோசனை

கடைசி முயற்சியாக நான் அவரை அணுகிப் பேசிய போது, அவர் பழைய காரியக் கமிட்டியில் இருந்த பிரபல அங்கத்தினர்களும் நானும் கலந்து ஒரு சமரசத்துக்கு வழி தேடலாம் எனக் கூறினார். அதற்கும் நான் இணங்கினேன். நாங்கள் அவ்வழியிலும் முயன்று பார்த்தோம். இந்த முயற்சி யாவது பலித்திருந்தால் எங்களது ஒப்பந்தத்தை அங்கீகரிக் கும்படி இப்போது உங்கள் முன்னால் வந்து கேட்டிருப்போம். ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. பல மணி நேரம் விவாதித் தும் ஒரு சமரசமும் ஏற்படவில்லை. இது துரதிர்ஷ்டமாகும். புதிய காரியக் கமிட்டியை அமைத்து அதன் விவரத்தை வெளியிட நான் அசக்தனாக விருக்கிறேன் என்பதைத்தான் மிக்க வருத்தத்துடன் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதைத் தவிர வேறு வழியில்லை.

எனது தீர்மானம்

இப்போது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு ஏற் பட்டுள்ள கஷ்டத்தைத் தீர்க்க நான் என்ன செய்யலாம் என்பதைத் தீர்க்கமாக யோசித்துப் பார்த்தேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவனாக விருப்பதால் அதற்கு ஒரு சங்கடமாக விருக்குமென நினைக்கிறேன். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நியமிக்க விரும்பும் ஒரு காரியக் கமிட்டியில் நான் இருப்பது தகாதென்ற எண்ணமும்

இருக்கலாம். புதிய தலைவர் ஒருவர் இருந்தால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி சுலபமாகக் காரியத்தைச் சீர்ப்படுத்தலாம் என்ற அபிப்பிராயம் இருந்தாலும் இருக்கும்.

ஆகவே, நான் தீர்க்கமாக ஆலோசித்து உங்களுக்கு உதவவேண்டுமென்ற நோக்கத்துடனே எனது ராஜிநாமாவை உங்களிடம் இப்போது சமர்ப்பித்திருக்கிறேன்.

எனக்குப் போதிய அவகாச மில்லாததால் நான் சுருக்கமாகவே ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறேன். அப்படியிருந்தாலும் சுருக்கமான அறிக்கையிலும் இப்போதுள்ள நிலைமையைச் சரிவர விளக்கி யிருப்பதாகவே நான் நம்புகிறேன்.

* * *

ஜவாஹர் பிரசங்கம்

சுபாஷ் தமது அறிக்கையை முடித்ததும், ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு ஒற்றுமையின் அவசியம்பற்றி வற்புறுத்தும் உருக்கமான பிரசங்கம் செய்தார். அவர் கூறியதாவது:—

சபை முன்பு இரு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட் டிருக்கின்றன. ஒன்று மகாத்மா காந்தியினுடையது. மற்றொன்று ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸினுடையது. நமக்குப் பல கஷ்டங்க ளிருக்கின்றன. அவற்றை நாம் இன்னும் தீர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நமது கஷ்டங்களை யெல்லாம் தீர்க்க இயலாவிட்டால் நாம் கல்கத்தாவை விட்டுப் புறப்பட முடியாது. இவற்றைத் தீர்த்தால் நமது வழி சுலபமாகும். சென்ற 2 அல்லது 3 மாதங்களில் காங்கிரஸ் மெம்பர்கள் ஒருவருக்கொருவர் வெகுவாகப் புகார்கள் சொல்லிச் சச்சரவு செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சச்சரவு நமது கவனத்தைச் சாமான்ய வேலைகளில் செலுத்தவொட்டாதபடி தடுத்திருக்கிறது. இது சற்றும் ஆச்சரியத்தை உண்டாக்க

வில்லை. காங்கிரஸ் பெரிய ஸ்தாபனமாக வளர்ந்துவிட்டது. அதனால் இதன் மெம்பர்களுள் சென்ற பல மாதங்களாக நடக்கும் வாக்குவாதம் நமக்குச் சற்றும் ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. நமக்குள் இவ்வளவு மனத்தாங்கலை உண்டாக்கிய பிரச்னைகளை யெல்லாம் பற்றி நீங்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டுமென்று உங்களை வேண்டிக்கொண் டிருக்கிறேன். நீங்கள் இதைப்பற்றி அமைதியாக ஆலோசிக்க வேண்டும். நாம் நமது சச்சரவைப் போக்க நம்மா லியன்றதை யெல்லாம் செய்யவேண்டும். நாம் பின்னால் நடக்க வேண்டியதைப் பற்றியே ஆலோசிக்க வேண்டும். முன் நிகழ்ந்தவற்றை மறக்க வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

தற்போது உலகில் நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. நாம் அடுத்தபடியாக எப்பொழுது கூடுவோ மென்று சொல்ல என்னால் இயலாது.

யுத்த நெருக்கடி

எந்தச் சமயத்தும் உலகில் மகா யுத்தம் ஏற்படலாம். யுத்தத்தில் இந்தியா கலக்கவேண்டு மென்று நாம் விரும்ப வில்லை. நமது தற்காலப் பிரச்னைகளை எல்லாம் நாம் ஆற அமர யோசிக்க வேண்டும்.

மகா யுத்தம் ஏற்பட்டால் தோன்றக் கூடிய பிரச்னையையும் நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். இக்கூட்டத்தில் ஆலோசிப்பதற்குப் பல தீர்மானங்கள் கொண்டுவரப்படு மென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பற்றி ஆலோசிக்க நமக்கு அவகாசமில்லை. காங்கிரசின் பலம் வெகுவாக அதிகரித்திருக்கிறது. அது மிக்க வல்லமை வாய்ந்த ஸ்தாபனமாகி விட்டது. நமது விரோதிகளும் சும்மா

இருக்கவில்லை. அவர்கள் நம்மை எதிர்ப்பதற்காக ஒன்றுபட முயற்சி செய்கிறார்கள்.

பல பிரச்னைகள்

வகுப்புப் பிரச்னையும் சமஸ்தானப் பிரச்னையும் நமது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்றன. பலம் பெற்ற போதிலும் நமது கஷ்டங்களை அதிகரித்திருக்கின்றன. நாம் இப்பிரச்னைகள் எல்லாவற்றையும் பற்றி அமைதியாக ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

ஒன்றுபட வேண்டும்

நாம் நமது வேற்றுமைகளைக் கைவிட்டு, நெருக்கடியான இச்சமயத்தில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். நமக்கு முன்பு ஸ்ரீ. சுபாஷ் பாபுவின் அறிக்கை இருக்கிறது. நமது வேற்றுமைகள் கொள்கைகளைப் பற்றியல்ல. அவை அற்பமானவையாகும். இதனால் நீங்கள் வாக்குவாதங்களில் ஈடுபடக் கூடாதென்று நான் விரும்புகிறேன். நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம் நாம் ஒன்றுபட்டிருந்துவந்திருக்கிறோம். இது நமது பழைய அனுபவமாகும். தற்போது முட்டுக்கட்டை போட்டாற் போன்ற நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரச்னையை நான் ஆராய்ந்திருக்கிறேன். எந்தப் பிரச்னையைப் பற்றியும் தத்துவங்கள் சம்பந்தமாக சுபாஷ் பாபுவுக்கும் மகாத்மா காந்திக்கும் வேற்றுமை எதுவு மில்லை என்ற முடிவுக்கு நான் வந்திருக்கின்றேன்.

சுபாஷ் பாபுவின் அறிக்கையிலிருந்து திரிபுரி காங்கிரசில் நிறைவேறிய பண்டித பந்தின் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்கும் நோக்கத்துடன் அவர் மகாத்மா காந்தியை அணுகியிருப்பது நமக்குத் தெரிகிறது. இத் தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதில் மகாத்மா காந்திக்குள்ள கஷ்டங்

களும் நமக்குத் தெரியும். இவற்றின் காரணமாக ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸ் தமது ராஜிநாமாவை வாபஸ் பெறவேண்டு மென்று நான் தற்போது அவரை வேண்டிக் கொள்ளு கிறேன். அவரது ராஜிநாமாவால் ஏற்படக்கூடிய பிரச்னையை ஆலோசித்துப் பார்க்கும்படியும் நான் அவரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

காங்கிரஸில் பிளவோ கட்சி உணர்ச்சியோ கூடாது

காங்கிரஸில் கட்சி உணர்ச்சியோ, அன்றிப் பிளவோ இருக்கக் கூடாதென்று நான் விரும்புகிறேன். ஸ்தாபனத்தின் மெம்பர்களுள் ஏற்படும் வேற்றுமைகளால் ஸ்தாபனம் பலஹீனமடையும். ஸ்தாபனம் இடைவிடாமல் முன்னேறி வருவதற்கு இவை விருத்தமாக இருப்பவை.

நமது விரோதிகள் நமது வேற்றுமைகளையும் அதனுல் நம்மிடை ஏற்படும் பலஹீனத்தையும் கண்டு மகிழ்ச்சி யடை வதைக் காண நாம் விரும்பவில்லை.

நெருக்கடியைச் சமாளிக்க வழி

காரியக் கமிட்டியை ஏர்படுத்துவது சம்பந்தமாக நமக் குள்ள கஷ்டங்களைப் போக்குவதற்காக, பழைய காரியக் கமிட்டி மெம்பர்களே இன்னும் அப்பதவிகளி லிருந்து வேலை பார்த்துவர வேண்டுமென்று நான் யோசனை கூறுகின்றேன். தற்போதைய நிலைமையே நீடிக்கவேண்டு மென்றும், நமது நெடுநாளைய வழக்கத்திலிருந்து நாம் பிறழக் கூடாதென்றும் நாங்கள் விரும்புகிறோம். நமக்கு முன் ஏற்பட்டுள்ள நெருக் கடியை நாம் எப்படியேனும் சாமாளிக்க வேண்டும்.

நடு ஆற்றில் படகை மாற்றக்கூடாது

நடு ஆற்றில் படகை மாற்றுவது விவேகமாக இருக்கு மென நான் நினைக்கவில்லை. நமது இரண்டு பழைய சகாக்க

ளான சேத் ஜம்னுலால் பஜாஜும், ஸ்ரீ. ஜெயராம்தாஸ் தௌலத்ராமும் புதிய காரியக் கமிட்டியில் சேரக்கூடிய நிலைமையில் இல்லை. ஒருவர் (சேத் பஜாஜ்) சிறையிலிருக்கிறார். மற்றொருவர் (ஸ்ரீ. ஜெயராம்தாஸ்) தேக அசௌக்கியமாக இருக்கிறார். இவ்விருவருக்கும் பதிலாகப் புதிதாக 2 மெம்பர்களை அக்கிராசனர் நியமிக்கவேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். முடிவில் நீங்கள் எல்லோரும் அக்கிராசனரை அவரது ராஜிநாமாவை வாபஸ் பெறும்படி வற்புறுத்த வேண்டுமென்றும், நான் கூறியபடி புதிய காரியக் கமிட்டியைத் திருத்தியமைத்து காங்கிரஸ் வேலையை நடத்த வேண்டுமென்றும் நான் யோசனை கூறுகிறேன்.

பண்டித நேருவின் பிரேரேபணை

சபை இடைவேளைக்குக் கலையுமுன்பு, பண்டித ஜவாஹர்லால் நேரு பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார் :—

ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸ் தமது ராஜிநாமாவை வாபஸ் பெறவேண்டுமென்றும், பழைய காரியக் கமிட்டி மெம்பர்களையே தமது புதிய காரியக் கமிட்டி மெம்பர்களாக அவர் திரும்ப நியமிக்க வேண்டுமென்றும் அவரை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

அக்ராசனர் ஸ்ரீ சுபாஷ் போஸ் 6-15 மணிக்கு அரை மணி நேரம் இடைவேளைக்காகச் சபையை ஒத்திவைக்கையில் சபை தம்மைப்பற்றிய விஷயங்களைப்பற்றி விவாதிக்கையில் தாம் அக்ராசனம் வகிப்பது தமக்குச் சங்கடமாக இருக்குமென்றும், இதனுல் ஸ்ரீமதி சரோஜினி அக்ராசனம் வகிக்க வேண்டுமெனக் கோருவதாகவும் கூறினார்.

விவாதம்

இடைவேளைக்குப் பிறகு கமிட்டி மீண்டும் கூடுகையில் ஸ்ரீமதி சரோஜினி தேவி தலைமை வகித்து, ஸ்ரீ. நேருவின் தீர்மானத்தைச் சபை நிறைவேற்றி வைக்கும் என்று நம்புவதாகக் கூறினார்.

பிறகு கனம் ரபி அகமது கித்வாய், ஸ்ரீ. ஜெயப் பிரகாஷ் நாராயண் இருவரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். ஸ்ரீ. பூபேந்திரநாத சன்யால், ஸ்ரீ. யதுமங்கராஜ், ஸ்ரீ. சுவாமி கோவிந்தானந்தர் முதலியோர் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர்.

இரவு 8-45 மணிக்குச் சபை மறுநாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

புதிய தலைவர்

பாபு ராஜேந்திர பிரஸாத்

30-ந் தேதி கூடிய கமிட்டியில் ஸ்ரீ. சுபாஷ் பாபு நேருஜியின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்ததைத் தெரிவிக்கவே, தீர்மானம் வாபஸ் வாங்கிக்கொள்ளப் பட்டது. இதனால் தலைவர் ராஜிநாமா அங்கீகாரம் செய்யப் பட்டது. பிறகு புதிய ராஷ்டிரபதியாக பாபு ராஜேந்திர பிரஸாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாபு ராஜேந்திர பிரசாத் பிரசங்கம்

பாபு ராஜேந்திர பிரசாத் பேசுகையில் பின் வருமாறு கூறினார் :—

இவ்வளவு நாளாக நாம் நிலைமையைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இது விஷயத்தில் எனக்கு மகிழ்ச்சியே இல்லை. இப்போது தேசத்தின் முன் உள்ள நிலைமை,

மற்றும் பல விஷயங்களைக் கவனிக்குமிடத்து, நண்பர்களாகிய நீங்கள் என்னை ரோஜா மெத்தையில் உட்கார வைக்கவில்லை. இந்த நிலைமைகளில் ஒருவருக்கு என்னென்ன சோதனைகள், வேதனைகள், சிரமங்கள் ஏற்படுமோ அவைகளை நான் உணர்கிறேன். ஆதலால் உங்கள் கட்டளையை ஏற்றுக் கொள்வதில் எனக்குச் சுகம் எதுவுமில்லை. இந்தச் சுமையை மேலும் நீடித்துத் தாங்க, எனக்குத் தெரிந்த வகையில், ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸைத் தூண்டிப் பார்த்தேன். அவர் அபிப்பிராயத்தைக் கொண்டவர்களைக் கொண்டு அவருடைய இஷ்டம் போல் ஒரு காரியக் கமிட்டி அமைக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டேன். அப்படி அவர் செய்தாரானல், நானும், மற்றவர்கள் சார்பிலும் நான் பேசலாமெனில், அவர்களும் அவருக்கு எவ்விதமான இடைஞ்சலும் விளைவிக்கமாட்டோமென்றும் உறுதி கூறினேன். அவர் என் அபிப்பிராயத்திற்கு இணங்க முடியவில்லை. ஆதலால் இருக்கிற நிலைமையில் ராஜிநாமா செய்வதுதான் சிறந்த வழி என அவர் கருதினர். இதைக் குறித்து நான் மிகவும் விசனிக்கிறேன்.

இந்தப் பதவிக்கு ஏதோ ஆசைப்பட்டு முயற்சி செய்து இன்று உங்கள் முன் வந்து நான் நிற்கவில்லை. இன்று இருக்கும் நிலைமையில், கடமை என்பதற்குப் பணிந்தும், தேசத்திற்கு என்னாலான சேவையைச் செய்யவேண்டுமென்ற மனத்துடனும், இங்கு உங்கள் முன் நிற்கிறேன்.

ஆதலால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களான உங்கள் ஆதரவும், சிரத்தையும், நல்லெண்ணமும் அளித்து எனக்குதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண சமயங்களிலேயே காங்கிரஸ் அக்ராசனராக இருப்பதென்பது சிரமமான காரியமே. அதுவும் இம்மாதிரியான சமயத்தில் அக்ராசனராக இருப்பது இன்னும் பதின்

மடங்கு சிரமமான காரியமாகும். உங்களுடைய ஒத்துழைப்பு, உதவி, நல்லெண்ணம் ஆகியவை எதுவுமின்றி என்னால் எதுவும் செய்வதற்கில்லை.

நான் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அறிவிக்கப்பட்டவுடன் நீங்கள் மகிழ்வுடன் கரகோஷம் செய்து அதனை வரவேற்றீர்கள். இந் நிகழ்ச்சி எனக்கு இல்லமேவே இல்லை. ஒரு பெரிய பொறுப்பு வந்துவிட்டதென்ற மித மிஞ்சிய சுமை என்னைக் கவர்ந்து கொண்டது. ஆனால் இங்குள்ள மெம்பர்கள் எல்லாரும், அவர்களுடைய அபிப்பிராயம் குறித்து வேற்றுமை என்னவாக இருந்தபோதிலும் சரி, எனக்கு ஆதரவளிப்பார்களென நம்புகிறேன். சில நண்பர்களுக்கு அதிருப்தி இருக்கிறதெனத் தெரிகிறது. அவர்களிடம் எனக்கு மனஸ்தாபம் இல்லை. இந்த நம்பிக்கையுடன் தான் எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அக்ராசனர் உறுதி

இந்தப் பதவியை வகிக்குமாறு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் கட்டளையிட்டனர். ஆதலால் உங்கள் எல்லோருக்கும் இவ்வுறுதியை நான் அளிக்கிறேன்.

எப்போது நான் தேவையில்லை என நீங்கள் கருதுகிறீர்களோ அப்போது கூறினாலே போதும். நான் விலகிவிடுகிறேன். இப்போது உங்கள் கட்டளைக்குப் பணிந்தது போல அப்போதும் செய்யச் சித்தமாக இருப்பேன். காங்கிரஸ் மகாசபை நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை என்னாலான வரையிலும் அமுலுக்குக் கொண்டு வருவது என் கடமையாக இருக்கும். இது ஒவ்வொரு அ. இ. கா. க. மெம்பருடைய கடமையுமாகும்.

இந்தக் கடமையை அவர்கள் பூர்ணமாக நிறைவேற்று வார்கள் என்பதில் எனக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகமில்லை. தற்சமயம் நாம் புதுக் கொள்கை எதுவும் வகுக்க வேண்டிய தில்லை. நிறுவப்பட்ட கொள்கைகள் இருக்கின்றன. காங்கிரஸ் மகாசபையே இதனை நிறுவியுளது. இவைகளைக் காரியத்தில் கொண்டுவர, பலனுக்குக் கொண்டுவர, நாம் வழிகளையும், முறைகளையும் கண்டுபிடிக்க வேண்டும். இதைச் செய்வதில் நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைப்போம் என நம்புகிறேன்.

கூட்டம் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

புதிய காரியக் கமிட்டி

மேமீ முதல் தேதி மீண்டும் கூடிய அ. இ. கா. கமிட்டி யில் பாபு ராஜேந்திர பிரஸாத் காரியக் கமிட்டிக்கு நியமிக்கப் பட்ட அங்கத்தினர் பெயர்களை அறிவித்தார் :

மௌலானா அஸாத்
ஸ்ரீமதி சரோஜினி நாயுடு
ஸ்ரீ. ஜெயராம்தாஸ்
கான் அப்துல் கபார்கான்
ஆசாரிய கிருபளானி
டாக்டர் பட்டாபி
ஸ்ரீ. புலாபாய் தேசாய்
சர்தார் பட்டேல்
சேத் பஜாஜ்
ஸ்ரீ. சங்கரராவ் தேவ்
ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மெஹதாப்
டாக்டர் பி. ஸி. ராய்
டாக்டர் பிரபுல்ல கோஷ்

யுத்த எதிர்ப்பு

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில், பண்டித ஜவாஹர்லால் நேரு, யுத்த அபாயம் சம்பந்தமான தீர்மானத்தைப் பிரேரபித்துப் பேசுகையில் கூறியதாவது:—கமிட்டியில் இத்தீர்மானத்தை ஸ்ரீ. போஸ் பிரேரேபிக்க விருந்தார். ஆனால், அவர் இங்கு வாராததால், நான் இத்தீர்மானத்தைப் பிரேரேபிக்க வேண்டியதாயிற்று. இத்தேசத்திற்குப் பெரும் அபாயமான ஒரு விஷயத்தைப் பற்றியதாகும் இத்தீர்மானம். அ. இ. கா. கமிட்டி இவ்விதத் தீர்மானத்தைப் பல தடவை நிறைவேற்றியிருக்கிறது. யுத்தம் சம்பந்தமாக இக்கமிட்டி தனது உறுதியான கொள்கையை இரண்டு அல்லது மூன்று தடவை பகிரங்கப்படுத்தியிருக்கிறது. அக்கொள்கையைப் புகுத்த முயற்சிகள் நடந்தன. இத்தீர்மானத்தில் புதியது எதுவுமில்லை. இந்தியாவின் வளங்களைச் சுரண்ட முயலும் எச்சட்டமும் அமுலுக்கு வருவதை எதிர்த்துப் போராடுவதாக நாம் திட்டமாக அறிவித்திருக்கிறோம். காங்கிரஸ் கொள்கைக்கு ஒத்ததல்லாத எதனையும் நான் கூறவில்லை.

ஒவ்வொரு காங்கிரஸ் சர்க்காரும் இத்தீர்மானத்தின்படி நடக்க வேண்டும்.

சமஷ்டி அமுலுக்கு வருவதை எதிர்க்கக் கட்டுப்பாடான முயற்சிகள் நடந்துள்ளன. இச்சமஷ்டி பிரச்னை 'ஜீவனுள்ளது' அல்லவென்று நான் சில தடவை துணிச்சலாகக் கூறியிருக்கிறேன்.

இது தீர்ந்த பிரச்னை எனவும் நான் கருதவில்லை. நாம் இறந்தோமானால் இது மீண்டும் ஆரம்பிக்கப்படும். சமஷ்டிப்

பிரச்னையைத் தீர்க்குமுன் இன்னும் நம்முன் பல முக்கியப் பிரச்னைகள் இருக்கின்றன. ஒரு யுத்த நெருக்கடியானது ஏற்பட்டால் இந்தத் திருத்தமசோதா மூலம் மத்ய சர்க்காருக்கு எவ்வளவு அதிகாரம் அளிக்கப்படுமென்பது ஒரு முக்கியப் பிரச்னை யாகும். ஆதலால் இந்தப் பிரச்னை விஷயத்தில் நாம் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். இதுவுமின்றி யுத்தகால நெருக்கடி பற்றி இங்கிலாந்தில் சட்டம் செய்யப் படப் போவதையும் கவனியுங்கள். இந்தத் திருத்தம்பற்றிப் பலர் இங்கு கண்டித்திருந்த போதிலும் இதனை நமது ஜனங்கள் இன்னும் பூர்ணமாக உணரவில்லை. சில காங்கிரஸ்காரர் கூட உணரவில்லை. லார்ட்ஸ் சபையில் இருக்கும் இந்தத் திருத்தம் நம்மைச் சாதகமற்ற ஒரு நிலைமையில் வைத்துளது. நாம் பொதுவாக இதற்குப் பணிந்துவிட்டால், அது 1928-ம் வருஷம் முதல் யுத்தத்தில் கலந்து கொள்வது பற்றி காங்கிரஸ் மகாசபை நிறுவிவந்த கொள்கையை ஒன்றுமில்லாததாகச் செய்து விடுவதை யொக்கும். இந்தத் திருத்தம் நிறைவேறினால் இரண்டு வருஷத்திற்குமுன் நிறுவப்பட்ட மாகாண சுயாட்சியைச் சமாப்தி செய்தது போலாகும்.

பிறகு நாம் பதவியேற்கலாமா என்ற பிரச்னை வேறு இருக்கிறது. அநேகர் ஏற்கலா மென்றனர். மற்றும் சிலர் இதனை எதிர்த்தனர். 'பதவி யேற்பதா? வேண்டாமா?' என நாம் பல மாதங்கள் யோசித்தோம். நமக்குள்ளேயே நிறைய விவாதம் நடத்திய பின்னர் அநேக மாகாணங்களில் நாம் பதவியேற்றோம். ஆனால் இந்தத் திருத்த மசோதா நிறைவேறினால் மாகாண சுயாட்சியே இருக்காது.

இப்போது யுத்தம் வரும் போன்ற நிலைமை இருக்கிறது. இதோடு ஒரு அரசியல் நெருக்கடியும் வளர்ந்து வருகிறது. காங்கிரஸ்காரர் பதவியிலிருக்க வேண்டுமா வென்ற பிரச்னை

புனராலோசனை செய்யப்பட வேண்டி யிருக்கலாம். இந்தத் தீர்மானம் முன்பு மெம்பர்கள் முன் வந்த தீர்மானத்தையே திருப்பிக் கொண்டுவந்த தாகாது.

சில விஷயங்கள் ஸ்பஷ்டமாக இத்தீர்மானத்தில் சொல்லப்படவில்லை யென்பது வாஸ்தவமே. உதாரணமாக யுத்தம் வந்தால் காங்கிரஸ் சர்க்கார்கள் என்ன செய்யவேண்டு மென்பது தெளிவாகக் கூறப்படவில்லை. பின்னால் செய்யவேண்டியது என்ன வென்பதை இப்போதே சொல்வது மிக்க சிரமம். எந்த நிலைமையிலும் ராஜிநாமா செய்து விடுங்கள் என நான் அவர்களிடம் கூறுவேனு வென்பதை என்னால் நிச்சயமாகக் கூற முடியாது. பதவியிலிருந்தே போரிட முடியுமானால், ராஜிநாமா செய்யச் சொல்ல மாட்டேன். போராட்டம் இருந்தால் பதவியிலிருப்பதும் அவர்களுக்குச் சிரமமான தாக இருக்கும். இது வேறு விஷயம். அன்றன்றைக்கு என்ன நிலைமை எழுகிறதோ அதன்படிக்கு நாம் நிலைமையைக் கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் செய்யும் ஏதோ ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளாததால் ராஜிநாமா செய்துவிட வேண்டு மென்பதில்லை.

இந்தத் திருத்த மசோதா இப்போது லார்ட்ஸ் சபையில் இரண்டாம் முறை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இது காமன்ஸ் சபை முன்னர் வரலாம். இது சட்டமானால், யுத்தம் வந்தால், இது இந்தியாவில் அமுலுக்கு வரும். ஒரு யுத்தத்தை இந்தியா சமாளிக்க வேண்டி வருமென நான் கூறியது வெறும் தர்க்க சபை வாக்கியமில்லை. வரக்கூடிய நெருக்கடியை எண்ணி நாம் ஆலோசனை புரியவேண்டும்.

இந்த மசோதாவை எதிர்க்க உங்களா லானதை யெல்லாம் செய்யவேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவின்

தற்சமய நிலைமையை உணர்ந்து, உங்கள் பலம் கொண்ட மட்டும் எதிர்க்கவேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக, 'நாம் அனைவரும் சேர்ந்து போகாவிடில் தனித்தனியாகப் பலியிடப்படுவோம்' என்ற பழைய முது மொழியை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

காங்கிரஸ் அமைப்புத் திருத்த சப்கமிட்டி

காங்கிரஸ் அமைப்பில் திருத்தங்கள் செய்வதற்கு திரிபுரி காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்திருந்தது. அதற்கிணங்க, காங்கிரஸ் அமைப்பில் திருத்தங்கள் செய்வதற்கு காங்கிரஸ் அக்ராசனர், ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு, டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஆசாரிய நரேந்திர தேவ், ஆசாரிய கிருபளானி ஆகியவர்களடங்கிய ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டு மென்று ஸ்ரீ. சங்கரராவ்தேவ் பிரேரேபித்தார்.

இந்தத் தீர்மானம் அபரிதமான ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டது.

கெனியா இந்தியர்கள்

கெனியா இந்தியர்களின் கஷ்டத்தைப்பற்றி அக்ராசனர் பாபு ராஜேந்திர பிரசாத் பிரேரேபித்த பின்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது :

"கெனியாவிலுள்ள மேட்டுப் பிரதேசங்களை ஐரோப்பியர்களுக்கு ஒதுக்கி வைப்பது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் பிறப்பித்திருக்கும் கவுன்ஸில் உத்தரவைக் கண்டு அ. இ. கா. கமிட்டி மிகுந்த கவலையடைகிறது. இது பிரிட்டிஷ் காலனி மந்திரியும், இந்திய சர்க்காரும் கொடுத்துள்ள வாக்குறுதிகளுக்கெல்லாம் முரணானது. இது நிற வேற்றுமைக் கொள்கையை சாசுவதப் படுத்துவதாகவும், இந்தியாவை

அவமதிப்பதாகவும் இருக்கிறது. இந்திய சர்க்கார் கெனியாவி லுள்ள இந்தியர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமை யைச் செய்யத் தவறிவிட்டார்க ளென்றும் இந்தக் கமிட்டி அபிப்பிராயப்படுகிறது. இந்திய சர்க்காரின் எந்த முயற்சி யும் கெனியா நிலைமையைச் சமாளிக்க முடியா தென்றும், ஆகவே காரியக் கமிட்டி இது சம்பந்தமாக வேண்டிய நட வடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும், அ. இ. கா. கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.”

அரசியல் கைதிகள் விடுதலை

பஞ்சாப், வங்காள அரசியல் கைதிகள் விடுதலையைப் பற்றி பாபு ராஜேந்திர பிரஸாத் பிரேரேபித்த பின்கண்ட தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது:

“வங்காளத்திலுள்ள அரசியல் கைதிகள் விடுதலைக்காக மகாத்மா காந்தி செய்த அரிய முயற்சிகளை அ. இ. கா. கமிட்டி பாராட்டுகிறது. ஆனல், இது சம்பந்தமாக மகாத்மா காந்திக்கும், ஹக் மந்திரி சபைக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்ததைக் கண்டு இந்தக் கமிட்டி வருந்துகிறது. எந்தத் தேதிக்குள் அரசியல் கைதிகள் விடுதலையடைந்து விடுவார்க ளென்று மகாத்மா காந்தி எதிர் பார்த்தாரோ, அந்தக் காலம் தாண்டிவிட்டது.

வங்க மந்திரிசபை காட்டும் ஹிருதயமற்ற கடுமையான மனப்பான்மையினல் நீண்டகாலம் தண்டனை பெற்ற கைதி களின் விடுதலை நம்பிக்கைக்கு இடமில்லாத ஒரு விஷயமாய் விட்டது. ஒரு அவசர காலத்தில் அவசரச் சட்டங்களின் படி தண்டிக்கப்பட்ட இவர்களை இன்னம் சிறையில் வைத் திருப்பதற்கு நியாயமில்லை என்று இந்தக் கமிட்டி அபிப் பிராயப்படுகிறது. அதிலும், பலாத்காரத்தில் தங்களுக்கு

நம்பிக்கை யில்லை யென்று அவர்கள் பகிரங்கமாக அறிவித்த பிறகும், அவர்களைச் சிறையில் வைத்திருக்க நியாயமே இல்லை.

ஆகவே வங்காளம், பஞ்சாபிலுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை ஒரு அகில இந்தியப் பிரச்னையாக்குவதென்று அ. இ. கா. கமிட்டியின் இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது. இந்தக் கைதிகளின் விடுதலைக்கு ஒரு அகில இந்திய இயக்கம் ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி காரியக் கமிட்டியைக் கேட்டுக்கொள்கிறது."

முற்றிற்று.

The Model Press. G. T., Madras.

Cover Page Printed at Dharmarao Printing Works, Madras.